# காதல் தெய்வம்




'வஸந்தன்'

# காதல் தெய்வம்

321 — A/163

"வஸந்தன்"

359

ரவி பிரசுரம்
2/141. பிராட்வே சென்னை. 1.

முதற்பதிப்பு மார்ச் 1952.
உரிமையுடையது.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 477
நன்கொடை எண்: 477

விலை ரூ. 1—4—0

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

RAVI PRASURAM
2/141 BROADWAY MADRAS-1.

நவபாரத் பிரஸ், சென்னை-1.


# இதைப் பற்றி......

தமிழ் நாட்டு வாசகர்களுக்கு வஸந்தனுடைய கதைகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. சர்க்கரை தித்திக்கும் என்று சொல்லித்தானு தெரிய வேண்டும்?

புதிய பாணியில், சிறந்த முறையில் நண்பர் வஸந்தன் அவர்கள் எழுதியுள்ள இந்நாவலை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

புதிதாகப் பிறந்த ரவி பிரசுரம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணி புரிய தயாரா யிருக்கிறது. வாசகர்களின் அன்பும் ஆதரவுமே இதற்கு உறுதுணையாயிருத்தல் வேண்டும்.

எஸ். சங்கரன்
ரவி பிரசுரம்.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

# 1. அவள் பேசினாள்

தூரத்தில் 'ஜல்' 'ஜல்' லென்று மாட்டின் சதங்கை ஒலி கேட்டது. இனிமையான அந்த சதங்கை ஒலி சம்பங்கியின் இதயத்தை 'திக்' 'திக்' என்று அடித்துக் கொள்ளச் செய்தது. கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த சம்பங்கி சொல்லமுடியாத பரபரப்பை அடைந்தான். அந்தச் சத்தம் நெருங்க நெருங்க, அவன் முகத்தில் பீதியும் வெறுப்பும் படர்ந்தன. "என்ன சம்பங்கி? எங்கேயோ கவனமாக இருக்கிறாயே ஒரு படி துவரம் பருப்புக் கொடு" என்று கடையில் சாமான் வாங்கவந்த குஞ்சிதம் பிள்ளை கூறியது கூட அவன் காதில் விழவில்லை. இயந்திரத்தைப் போல் சாமானை அளந்து கொடுத்தான்.

'ஜல்' 'ஜல்' சதங்கை ஒலி கடை வாசலில் வந்து நின்றது. அப்பொழுது சம்பங்கியின் இருதய ஓட்டமே நின்றுவிட்டது போலிருந்தது. அவனது அவ்வளவு பயத்துக்கும் குழப்பத்துக்கும் காரணமான சோலையம்மாள் உள்ளே வந்தாள். அவள் அகன்ற முகத்தில் அதிகாரமும் கர்வமும் தாண்டவமாடின. அவளது பெரிய விழிகளும் அடர்ந்த புருவமும், தடித்த உதடுகளும் பூர்வ ஜன்மத்தில் ராக்ஷஸியாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டின. அவள்தான் சம்பங்கி வேலை செய்துவந்த மளிகைக் கடையின் எஜமானி சோலையம்மாள்.

அப்போது சம்பங்கி இருபது வயது இளங் காளையாக இருந்தான். ஆயினும், பன்னிரண்டு

வருஷங்களுக்கு முன் சின்னஞ் சிறு பையனுக அந்த வீட்டுக்கு வந்தபோது, எப்படி சோலையம்மா ளைக் கண்டு பயந்து நடுங்கினனே, அப்படியே இப் பொழுதும் பயந்து நடுங்கினன்.

"டேய், சம்பங்கி!" என்ற சோலையம்மாளின் சிம்ம கர்ஜனையைக் கேட்டு நடுநடுங்கி திருதிரு வென்று விழித்தான் சம்பங்கி.

சோலையம்மாள் இடுப்பில் இடது கையை வைத்த வண்ணம் கம்பீரமாக நின்றுகொண்டு "கூப்பிடுகிறேன் ! ஆந்தைமாதிரி விழிக்கிருயே! ஏன் என்று கேட்கக்கூட முடியலையோ ?" என்ருள்.

"ஏன் ?" என்ருன் சம்பங்கி.

"இதுவரை விற்றுமுதல் எவ்வளவு ?"

"அறுபத்தேழரை அரைக்கால் அரை வீசம்" என்ருன் குனிந்து பெட்டியைப் பார்த்த வண்ணம்.

சோலையம்மாள் சட்டென்று நல்லெண்ணையை கொஞ்சம் எடுத்துக் கையில் தேய்த்து முகர்ந்து பார்த்தாள். அவள் முகம் பயங்கரமாக மாறியது.

"சம்பங்கி! என்ன காரியம் செய்தாய்?" என்று அலறினுள்.

"ஏன்?" என்ருன் அந்த வாலிபன்.

"நல்லெண்ணையை முகர்ந்து பார்த்தியா ?"

"பார்த்தேன்."

"படுபாவி, யார் குடியைக் கெடுக்க இத்தமாதிரி எண்ணெயை விற்கிருய் ?" என்ருள் சோலையம்மா.

"கமகம வென்று நல்ல வாசனையாகத் தானே இருக்கு !"

"ஒரு வீசை நல்லெண்ணெய்க்கு பத்து வீசை கடலை எண்ணெய் விடச் சொன்னேனே. கலந் தாயா ?"

சம்பங்கி பேயறைந்தவன் போல் உட்கார்ந்து விட்டான். உண்மையில், காலையில் எண்ணெய் வாங்கவந்தவர்கள் கூட்டம் அதிகமாயிருந்தது. அந்தப் பரபரப்பில் நல்லெண்ணெய் டின்னை உடைத்து விட்டுவிட்டான். கடலை எண்ணெயை வழக்கம்போல் கலக்க மறந்துவிட்டான்.

"கோடாலிக் காம்பு மாதிரி நம் வியாபாரத்தைத் தொலைக்க நீ வந்து சேர்ந்தாய். வயசாக ஆக உன் அயோக்கியத்தனம் ஜாஸ்தியாகிறது. உன்னைத் தொலைத்துத் தலை முழுகினால் தான் நான் பிழைப்பேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் எஜமானி.

மறுகணம் உள்ளேயிருந்து, "அடேய்!" என்று சத்தம் கேட்டது. உள்ளே ஓடினான் சம்பங்கி.

"இது என்ன தனியாக?" என்று ஒரு குப்பலைக் காட்டிக் கேட்டாள் சோலை.

"மண்ணாங்கட்டி!" என்று பயந்து கொண்டே சொன்னான் சம்பங்கி.

"அடப்பாவி, மண்ணாங்கட்டியை இன்னம் ஏன் அரிசியில் கலக்காமல் இருக்கிறாய்?"

"ஐயோ! அரிசியிலே ஏற்கெனவே உள்ள மண்ணாங்கட்டி போதாதா?"

"அசட்டுப் பயல் மகனே! நாம் பணம் சம்பாதிக்க வியாபாரம் செய்கிறோமா? அல்லது சுத்தமான பண்டம் விற்று உலகத்தார் நன்மைக்காக வியாபாரம் செய்கிறோமா?"

"ஜனங்கள் நம்மை நம்பி வாங்கிக் கொண்டு போகிறபோது இப்படி நாம் செய்யலாமா?" உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இந்த வார்த்தையை எப்படியோ சொல்லிவிட்டான். 'திக்' 'திக்' கென்று அவன் நெஞ்சு படபடத்தது.

சோலேயம்மாளின் முகத்தைப் பார்த்ததும், ஏன் அந்த வார்த்தையைச் சொன்னேம் என்று தோன்றிவிட்டது சம்பங்கிக்கு.

"ஓஹோ!புத்தி சொல்ல வந்துவிட்டார் புத்தி?" என்று 'கொல்' லென்று சிரித்தாள் சோலே. நல்ல வேளே! கோபித்துக் கொள்ளாமல் இதுமட்டும் சிரித்தாளே என்று நினைத்தான் சம்பங்கி. அது அற்ப சந்தோஷம்தான்.

"ஆமாம். நம்மை நம்பி வாங்கிக் கொண்டு தான் போகிருர்கள். ஏன்? ஏனென்ருல், பாக்கிக் கடை சரக்கை விட நம் கடை எவ்வளவோ மேல் என்பதற்காகத்தான். உலகத்து நிலேமை தெரியாமல், குதிக்காதே, தம்பி. எந்த வியாபாரியும் சுயமாக சுத்தமாக, எந்த சாமானேயும் விற்க மாட்டாங்க...யாரும் சுயமாக எதையும் எதிர்பார்க்க மாட்டாங்க. அரிசி என்ருல் அசல் படிக்குப் பாதி கல்லும் மண்ணும்தான் என்கிறது எல்லாருக்குந் தெரியும். நம்பிக்கையைப் பற்றிப் பேச வந்தாயே! உன்னே எதுக்கு நம்பமுடிகிறது? ஒரு நிமிஷம் உன்னே நம்பிக் கடையை விடமுடிகிறதா? எந்த வேலேயை நீ ஒழுங்காகச் செய்கிருய்; சீ கழுதை! போய் வேலேயைக் கவனி!" முதலில் கேலி, அப்புறம் ஆச்சரியம், மறுபடிகேலி, கடைசியில் ஆத்திரம்— இவ்வளவு ரஸங்களும் ததும்ப இடிஇடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது அவள் பேச்சு.

சிறிது நேரம் கழித்து "சம்பங்கி! பெட்டியடியில் உட்கார்ந்துகொண்டு தூங்கித் தொலேக்காதே" என்று கட்டளேயிட்டுவிட்டு மறைந்தாள். புயல் அடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது சம்பங்கிக்கு.

சோலேயம்மாளுக்கு வயது ஐம்பது இருக்கும். அவள் கணவன் மாணிக்கம் காலமாகி ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. மாணிக்கம் இறந்ததும்,

கடையை நிர்வகிக்க வேண்டுமே என்ற கவலை சோலையம்மாளுக்கு ஏற்படவில்லை. ஏனெனில் அவள் புருஷன் வீட்டுக்கு வந்த முப்பது வருஷங்களாகவே வியாபாரத்தைக் கவனித்து வந்தவள் அவள்தானே? நாலைந்து வீடுகளுக்கப்பால் சின்னஞ்சிறு ஓட்டு வீட்டில் சோலையம்மாளின் ஜாகை இருந்தது.

கடையிலுள்ள விளக்கை ஏற்றினான் சம்பங்கி. விளக்குக்குக் குங்குமம் வைத்து வழக்கம்போல் கையெடுத்துக் கும்பிட்டான். "சுவாமி! சோலையம்மாளிடமிருந்து என்னைக் காப்பாற்று!" என்று பிரார்த்தித்தான். பனிரெண்டு வருஷங்களாக அவன் அந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து அஸ்தமித்ததும் கடையில் விளக்கேற்றி வைத்துப் பிரார்த்தித்துக்கொண்டு தானிருந்தான். சோலையம்மாளின் செல்வம் வளர்ந்துகொண்டிருந்ததே தவிர, அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. அவன் மனம் பின்னோக்கிச் சென்று பழைய சம்பவங்களை அவன் நினைவுக்குக் கொண்டுவந்தது.

தன் தாய் தகப்பனைப் பற்றி யாதொன்றும் சம்பங்கிக்குத் தெரியாது. ஏதோ ஒரு கிராமத்தில் இருந்த பெரியப்பாவும் பெரியம்மாவும் அவனுக்கு கனவுபோல் ஞாபகத்துக்கு வந்தனர். ஒரு நாள் அவன் பெரியப்பா, மளிகைக் கடை மாணிக்கத்தைப் பார்த்து, "மாணிக்கம்! சிநேகிதன் என்ற முறையில் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். நீ தான் அநாதை சம்பங்கியைக் காப்பாற்ற வேண்டும். பையன் புத்திசாலி. நன்றாக வேலை செய்வான். உபயோகமாயிருப்பான்" என்று ஏதோ கூறி மாணிக்கத்திடம் தன் கையைப் பிடித்து ஒப்புவித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. அதற்குப் பிறகு அவன் கிராமத்தைவிட்டு மாணிக்கத்தின்

வீட்டுக்கு வந்து சேர்ந்தான். முதன்முதலிலேயே சோலையம்மாளைக் கண்டதும் அவன் பயந்து நடுங்கி விட்டான். அவளது தோற்றத்தைவிட பயங்கர மான அவள் குரலும், அவள் குரலைவிடப் பயங் கரமான வசவும் திட்டும், அதைவிடப் பயங்கரமான அடிகளும் உதைகளும் நாளடைவில் குழந்தை சம்பங்கியின் உள்ளத்தில் அவள் மீது வெறுப்பை யும் ஆத்திரத்தையும் வளர்த்தன. மாணிக்கம் உட் பட, அந்த வீட்டிலுள்ள எல்லோரும் சோலையம்மா ளின் கொடுங்கோன்மைக்கு உள்ளானார்கள். அவ ளது மட்டில்லாத பேராசையும், வெண்ணெயில் கொழுப்பைக் கலப்பதும் புண்ணாக்கில் மண்ணைக் கலப்பதும்போன்ற கேவல தந்திரங்களும் சம்பங்கி யின் உள்ளத்தில் மூண்ட ஆத்திரக் கனலை அதிகப் படுத்தியது. ஓயாமல் ஒழியாமல் குழந்தை சம்பங்கி உழைத்தும் சோலையம்மாளின் கருங்கல் இதயம் திருப்தியடைவதில்லை. அலுத்துச் சலித்து அங்கங் கள் அயர்ந்து அவன் கீழே சாய்ந்தாலும், "தின்று கொழுக்கவா இங்கே வந்தே?" என்று கூறி அவனை எழுப்புவாள். இரக்கமற்ற கிராதகி. அவ னுக்காகச் சில சமயம் பரிந்து பேசவந்த மாணிக்கம் பட்ட அவஸ்தை இவ்வளவு அவ்வளவு அல்ல. தின மும் சாயங்காலம் விளக்கு ஏற்றியதும், அக்கம்பக் கம் பார்த்துக் கொண்டு, பயத்துடன், "சாமி, சோலையம்மாளிடமிருந்து என்னைக் காப்பாற்று!" என்று பிரார்த்திப்பான் அந்தக் குழந்தை.

நாளடைவில், சோலையம்மாளிடம், சம்பங்கிக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு ஸ்திரீ சமூகத்தின் பேரி லேயே வெறுப்பாக மாறியது. கருப்புத் துணி யைக் கண்டு மிரளும் மாட்டைப்போல் மாதர் களின் புடவையைக் கண்டாலே அவன் மிரளத் தொடங்கினன்.

சோலையம்மாளின் வீட்டில் அவன் பட்ட அடிக ளும் உதைகளும் உழைத்த உழைப்பும் கடைசியில் ஒரு நன்மையையும் உண்டாக்காமல் போகவில்லை. சம்பங்கியின் உடல் உறுதியும் பலமும் பெற்று எந்த வேலையையும் செய்யவும் எந்தக் களைப்பையும் சமாளிக்கவும் அவனைத் தயார் செய்திருந்தன.

பதினாறு வயதில், நவ யௌவனத்தை எட்டிப் பிடிக்கும் பிராயத்தில், எந்த வாலிபனின் உள்ளத் திலும் போக்கிலும் புரட்சிகரமான மாறுதல் உண் டாவது இயல்பேயல்லவா? அவ்விதமே சோலை யம்மாளின் கொடுங்கோன்மையில் பயந்து நடுங்கி ஒடுங்கிப் போன சம்பங்கி கூட அவளை எதிர்த்துக் கேட்க ஆரம்பித்தான். இந்தமாதிரி அவன் எதிர்த் துப் பேசிய அன்று அவனுக்குச் சோறு கிடைப்ப தில்லை.

“இந்த நரகத்தைவிட்டு ஓடித் தப்பித்துக் கொள்ளலாமா என்று அவன் எண்ணுவதுண்டு. ஆனல் எங்கே போவது? யார் வேலை கொடுப் பார்கள்? என்ற பயம் ஏற்பட்டது. அவனுக்கு சோலையம்மாளின் வீடே உலகமாக இதுகாறும் விளங்கி வந்தது. வெளி உலகத்தைப் பற்றி அவ னுக்கு அதிகம் தெரியாது. மேலும், எல்லா ஸ்திரீ களும் சோலையம்மாளைப் போலத்தானே இருக்கப் போகிறார்கள்! வேறு இடத்தில் போய் மாட்டிக் கொண்டால் தலைவலி போய் திருகுவலி வந்த கதை யாகத்தானே இருக்கப் போகிறது? வெளியில் போனல் வேலை கிடைக்கும் என்பது என்ன நிச்ச யம்? கஷ்டமோ துக்கமோ இருக்கிற இடத்தி லேயே இருந்தால் ஒரு நாளைக்கு ஒரு வேளை சோறாவது கிடைக்குமல்லவா?

இவ்வாறெல்லாம் எண்ணி மனம் சோர்ந்து பெட்டியடியில் உட்கார்ந்திருந்த சம்பங்கியின்

கவனத்தைக் கவர்ந்தாள், அப்பொழுது உள்ளே வந்த அந்த இளம்பெண். அந்த மங்கலான மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் அன்ன நடை போட்டு உள்ளே வந்த இளம் மங்கையைப் பார்த்தபோது, கனவு உலகின் மாயத் தோற்றத் தைப் போலவும், மேக மண்டலத்தில் ஊர்ந்துவரும் கந்தர்வப் பெண்ணைப் போலவும் அவள் தோற்ற மளித்தாள். தன் கவலைகளையும் ஏக்கங்களையும் மறந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண் டிருந்தான். பூங்கொடி போன்ற உடலுக்குத் தனிச்சிறப்பைக் கொடுத்தது அவளது ஒய்யார நடை! அருகில் வந்ததும் அவள் முகம் எவ்வளவு அழகாக, எவ்வளவு ஜீவகளையுடன் விளங்கியது! அவள் வாயைத் திறந்து ஏதாவது பேசமாட்டாளா? பேசினுல் மாயத்தோற்றமில்லை என்று எண்ணி சந்தோஷப் படலாமல்லவா?

மறுகணம் அவள் வாயைத் திறந்து பேசினுள்.

## 2. சவுக்கடி

"ஐயா! ஒரு வீசை நல்லெண்ணெய் என்ன விலை?" இவ்வாறு அந்தப் பெண் கேட்டதும் சம்பங் கிக்கு ஆனந்தம் ஒன்றும் ஏற்படவில்லை. தன் எதிரிலுள்ள எண்ணெய் டின்கள், கடை, சோலையம் மாள், தன் துர்ப்பாக்கிய நிலை எல்லாம் ஞாபகம் வந்து வேதனையை அளித்தன.

"விலை கேட்கிறேன். சொல்லமாட்டேன் என்கி றீர்களே!"

"வீசை மூன்றேகால் ரூபாய்" என்றுன்.

"ஒரு வீசை நல்லெண்ணெய் கொடுங்க. இந்தாங்க செம்பு" என்று ஒரு செம்பை அவனருகில் நீட்டினுள்.

ஆனல் அவன் கண்களும் கவனமும் அவள் மதிவதனத்தை விட்டு அகன்ருல்தானே? இந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கிறதே! ஆமாம். பிள்ளையார் கோவிலுக்கு அடுத்த வீட்டுக்குப் புதிதாக ஜாகை வந்திருப்பவர் பெண் தான் என்று உள்ளம் அறிவித்தது. சில தினங்களாக சம்பங்கி தெருவில் போய்க்கொண்டிருக்கும் போது அந்த வீட்டு வாசலில் அந்தப் பெண்ணை அசைப்பில் பார்த்திருக்கிருன். இப்பொழுதுதான் நேருக்கு நேர் அவளைப் பார்த்தது.

செம்பை வாங்கித் தகரத்தட்டில் வைத்துவிட்டு எண்ணெயை எடுக்கப் போனபோது அவன் மெய் சிலிர்த்தது. ரத்த ஓட்டம் குதிரைப் பாய்ச்சலைப் போல் துள்ளிச் செல்வதை உணர்ந்தான். மறு கணம் அவன் உள்ளத்தில் ஓர் எண்ணம் மின்னியது. அவன் படபடப்பும் விருவிருப்பும் மாயமாக மறைந்தது. அவன் முகத்தில் ஒரு அலட்சியமும் வெறுப்பும் தோன்றின. சோலையம்மாள் அவன் மனக்கண்ணில் தோன்றினுள். ஸ்திரீ சமூகத்தின்மீது அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்த ஆத்திரம் தலை காட்டியது. "இவளும் ஒரு சோலையம்மாள்தானே!" என்ற எண்ணத்துடன் எண்ணெயை எடுத்து செம்பில் ஊற்றினுன். அந்தப் பெண்ணும் பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, செம்பை எடுத்துக் கொண்டு அன்னநடை போட்டு அவ்விடத்தைவிட்டு அகன்ருள்.

அவள் நாலு அடிகூடச் சென்றிருக்கமாட்டாள். "ஐயோ!" என்ற குரலுடன் 'தடா்' என்ற சத்தமும் பின்னர் செம்பு கீழே உருளும் ஓசையும் கேட்டது.

திடுக்கிட்டுத் தலை நிமிர்த்தினான் சம்பங்கி. மறுகணம் அந்தப் பெண் அவனை நோக்கி ஓடிவந்தாள்.

"ஐயா! கை வழுக்கி செம்பு கீழே விழுந்து எண்ணெய் எல்லாம் கொட்டிப் போச்சு...." என்று கூறி விட்டு தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள். பதினாறு வயதுப் பெண் குழந்தைபோல் தேம்பி அழுதது கண்டு முதலில் அவனுக்குச் சிரிப்பாகத்தான் வந்தது.

"அதற்கு நான் என்ன செய்கிறது? நீ ஜாக்கிரதையாகக் கொண்டு போகிறதற்கென்ன?" என்றான் சம்பங்கி.

"உங்களுக்குச் சிரிப்பாக இருக்கிறது. சின்னம்மாக்கிட்ட மாட்டிக்கொண்டு நானல்லவா விழிக்கப் போகிறவள். ஐயோ, அவள் முதுகைப் பிய்த்து விடுவாளே! இன்று சோறுகூடக் கிடைக்காதே! அவளுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்?" என்று சொல்லொணாத துயரத்துடன் விம்மி யழுதாள் அந்தப் பெண்.

"சின்னம்மாளா? அது யார்?" என்றான் சம்பங்கி.

"என் அப்பாவின் இளையதாரம். ராக்ஷஸி! ஒன்றுமில்லாததற்கு 'தொப்' 'தொப்' பென்று போட்டு அடிப்பாள். வெறும் செம்போடு போனால்.... ஐயோ, வீட்டுக்குப் போவதற்கே பயமாயிருக்கு....." என்று கண்ணீர் விட்டாள்.

"எனக்கு ஒரு சோலையம்மாள் உனக்கு ஒரு சின்னம்மாளா?" என்று எண்ணியது சம்பங்கியின் மனம். ஒரு பொதுவான கஷ்டத்தை அனுபவிக்கும் இருவர் சந்திக்கும் போது ஒருவரை யொருவர் பார்த்துப் பரிதாபம் கொள்வதும், இருவர் உள்ளங்களும் ஒன்று சேர்வதும் இயற்கைதானே.

"ஐயோ பாவம்!" என்று கூறி வருந்தினான் சம்பங்கி.

"சும்மா வருத்தப்பட்டு என்ன செய்கிறது?" நீங்கள் எனக்கு உதவி செய்யாவிட்டால் நான் வீட்டுக்குப் போக முடியாது." "சரி. முதலில் கீழே கொட்டின எண்ணெயைத் துடை." என்ருன் பையன். பக்கத்தில் கிடந்த சாக்கை எடுத்து ஒரு நிமிஷத்தில் துடைத்துவிட்டாள் அந்தப் பெண்.

"நான் எப்படி உதவி செய்யமுடியும்?" என்ருன் சம்பங்கி.

"ஒரு வீசை நல்லெண்ணெய் தயவு செய்து எனக்குக் கொடுங்கள். எப்படியாவது அதற்குள்ள பணத்தை கூடிய சீக்கிரம் கொடுத்து விடுகிறேன்" என்று கெஞ்சினுள் அந்தப் பெண்.

இயற்கையில் இரக்க குணமுள்ள சம்பங்கியின் உள்ளத்தை உருக்கிவிட்டது அப்பெண்ணின் கண்ணீர்.

"உன் பேரு?"

"செங்கமலம்."

சம்பங்கி எண்ணெயை எடுத்து அவள் செம்பில் ஊற்றிய போது, செங்கமலத்தின் முகம், தாமரையைப் போல் மலர்ந்தது.

"நீங்கள் செய்த உதவியை ஒருநாளும் மறக்க மாட்டேன்" என்று கூறி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்துப் புரிந்த புன்னகை அழியாச் சித்திரமாக அவன் மனதில் பதிந்தது. அவள் போனதும் சில நிமிஷங்கள் ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டான்.

அவனுக்கு சுய உணர்வு வந்தபோது, கூடவே பயமும் வேதனையும் வந்துவிட்டது. கணக்கில் ஒரு வீசை எண்ணெய்க்குப் பணம் குறையுமே, அதற்கு என்ன பதில் சொல்வது என்ற பயம்தான். நினைக்க நினைக்க அவன் மனம் தடுமாறியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் உள்ளே வந்தாள் சோலையம்மாள்.

"என்னடா யோசனை" எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறே! கல்லாப் பெட்டியை எடு இப்படி!" என்று அவன் எதிரில் உட்கார்ந்தாள். அவன் நெஞ்சு படபடத்தது. மயக்கம் வருவது போலிருந்தது. பெட்டியைத் திறந்து ஒரு பண முடிச்சை எடுத்தான். "இதுலே எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டாள்.

"அறுபத்தேழுரை அரைக்கால் அரைவீசம்!"

"சரி. நான் சாயங்காலம் வந்தபோது விற்று முதல் ஆகியிருந்ததே, அது தானே?"

"ஆமாம்"

"அதற்குப் பிறகு ஒன்றுமே விற்கவில்லையா?"

"ஒரு வீசை நல்லெண்ணெய்......"

"ஒரு வீசையா? இரண்டு வீசை இருக்க வேணுமே?" சம்பங்கியின் உடல் வியர்த்துக் கொட்டியது; அவன் தேகம் நடுங்கியது.

"ஆமாம். இருக்கணும்?"

"பின்னே எங்கே? ஏன் திருடன் மாதிரி விழிக்கிறே?"

"கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா! கை தவறி எண்ணெய் கீழே கொட்டிப் போச்சு!"

"எங்கே கொட்டிற்று?"

சம்பங்கி கீழே எண்ணெய் கொட்டின இடத்தைக் காண்பித்தான்.

"யாரிடமடா கதை அளக்கிறாய்? அந்த இடத்தில் எப்படி எண்ணெய் கொட்டும்? அந்த இடத்தில் கொட்ட வேண்டிய காரணம் என்ன?"

மேற்கொண்டு பொய் சொன்னுல் என்ன சிக்கல்கள் ஏற்படுமோ என்று நினைத்து மௌன மாக இருந்தான் சம்பங்கி.

"தடிப்பயலே? யார் வீட்டுச் சொத்து என்று நினைத்துக் கொண்டு பண்டத்தை நாசம் பண்ணு கிருய்? உன் திமிரை அடக்கணும். இன்று ராத்திரி உனக்குச்சோறு கிடையாது, போ!" என்று கூறிக் கடையை அடைத்துக் கொண்டு பணப் பெட்டியுடன் சென்ருள் சோலை.

திக்பிரமை பிடித்து வாசலில் நின்று கொண்டி ருந்தான் சம்பங்கி. காலையில் பத்து மணிக்கு மோரும் சோறும் சாப்பிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. ஐந்து மணியிலிருந்தே எப்பொழுது சோற்றைக் காண்போம் என்று அவன் ஏங்கிக் காத் திருந்தான். "சோறு இல்லை" என்ற சோலையின் வார்த்தைகள் நாராசமாக அவன் காதில் விழுந்தது.

கால்கள் தள்ளாட மனம் போன வழியே நடந் தான். பல தெருக்களைக் கடந்து ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தான். கீழே புல்வெளியில் சோர்ந்து சாய்ந்தான். குளிர்ந்த காற்று 'விர்' ரென்று அவன் மேல் வீசியது. "இந்த இடத்தில் கூட உனக்கு இடமில்லை" என்று வாயு பகவான் கூட கரங்களை நீட்டித் தன்னைப் பிடித்துத் தள்ளுவதாக அவனுக்குத் தோன்றியது. ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் காணும் நட்சத்திரப் பந்தலை பார்த்தான். அவன் நிலைமைக்காக கண்ணைச்சிமிட்டி அவனை பரிகசிப்பது போல் தோன்றின நட்சத் திரங்கள். வெகுநேரம் அவன் படுத்திருந்தும் அவ னுக்குத் தூக்கம் வரவில்லை. நித்திரா தேவிக்குக் கூட ஏன் இந்தப் பாரபட்சம்? தான் ஏழை என் பதால்தானே, வயிற்றுக்குச் சாப்பிட முடியாத நிலைமையிலிருப்பதால் தானே நித்திராதேவி கூடத்

தன்னை அணைய மறுக்கிறாள் என்று எண்ணி ஆத்திரப்பட்டான்.

இவ்வளவு சங்கடத்துக்கும் காரணமான செங்கமலத்தை அவன் மனம் எப்படி எண்ணாமலிருக்கும்? "படுபாவி! எங்கிருந்தோ வந்து என் சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டாளே!" என்று சபித்தான். ஒரு பெண்ணுக்காக இரங்கி உதவி செய்தால் அதனால் சோறு இல்லாமல் போய்விடுமா? பெண் வர்க்கத்துக்கு உதவி செய்வது எவ்வளவு பெரிய தவறு? பெண் வர்க்கம் எப்பேர்ப்பட்ட பாவிகளாக இருக்க வேண்டும்? சோலையம்மாள் சண்டை பிடித்து கோபித்துக் கொண்டு தன்னை பட்டினி போடுகிறாள். ஆனால் செங்கமலமோ அழுது கண்ணீர் விட்டு, கெஞ்சிக் கூத்தாடி, சிரித்து ஏமாற்றித் தன்னைப் பட்டினி போட்டு விட்டாள். மொத்தத்தில் பெண் வர்க்கம் பொல்லாதது. ஈவிரக்கமில்லாதது, அபாயகரமானது. இனி செங்கமலத்தின் முகத்தில் கூட விழிக்கக் கூடாது. இப்படியெல்லாம் எண்ணித் தூக்கமில்லாமல் தவித்தான்.

அவன் நிலைமைக்கு இரங்கியவள் போல் நித்ராதேவியும் அவனை அணைந்தாள்.

'சுளீர்' என்ற வெய்யில் அவனைத் தட்டி எழுப்பியது. திடுக்கிட்டெழுந்த சம்பங்கி கண்களைக் கசக்கிக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். சூரியன் உதயமாகி வெகுநேரம் ஆகிவிட்டது. இத்தனை நேரம் மாடுகளுக்குத் தீனி வைத்திருக்க வேண்டும். செக்கடிக்கு எள்ளும் கடலையும் அளந்து கொடுத்திருக்க வேண்டுமே? சோலையம்மாளின் பயங்கர முகம் அவன் மனத்திரையில் தோன்றியதும், சவுக்கடி பட்டவன்போல் எழுந்து ஆற்றங்கரைக்கு ஓடினான். இன்னும் என்னென்ன கஷ்டங்கள் காத்திருக்கின்றனவோ? அவசர அவசரமாகப் பல்

தேய்த்து முகம் கழுவிவிட்டு திரும்பும்போது எதிரே படிக்கட்டுகளில் கையில் குடத்துடன் இறங்கினுள் செங்கமலம்.

## 3. மூன்றே கால்ரூபாய்

அவ்வளவு கஷ்டத்துக்கும் காரணமான செங்கமலத்தைப் பார்த்ததும் சம்பங்கிக்கு ஆத்திரம் வந்தது. அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. வந்த கோபத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். என்னென்னமோ சொல்லவேண்டுமென்று அவன் உள்ளம் துடித்தது. கோபம் அதிகமாகிவிட்டால் வார்த்தை வருவது கஷ்டந்தானே!

அந்தப் பெண் சுற்றுமுற்றும் பார்த்தாள். பரபரப்புடன் நாலு படிக்கட்டுக்களை ஒரே தாண்டாய்த் தாண்டி ஓடும் சம்பங்கியைப் பார்த்தாள்.

"ஐயா!" என்று கூப்பிட்டாள்.

"அம்மா! வேண்டாம்! என்னுடன் பேச வேண்டாம். உனக்கு ஒரு கும்பிடு! நீ இருக்கும் திக்குக்கு ஒரு கும்பிடு!" என்று கூறிவிட்டு ஓட எத்தனித்தான் சம்பங்கி.

"ஐயா! ஐயா!" என்று உரக்கக் கூவிக் கொண்டு அவன் எதிரில் நின்றுள் அந்தப் பெண்.

"போதும் அம்மா, போதும்! உன்னேடு நேற்று இரண்டு நிமிஷம் பேசியதற்கு கை மேல் பலன் கிடைத்தது. நேற்று ராத்திரிப் பட்டினி. இப்பொழுதும் ஒரு தடவை பேசினல் வாழ்நாள் முழுவதுமே பட்டினி கிடக்க வேண்டியதுதான்!"

செங்கமலத்தின் கண்களில் குபீரென்று கண்ணீர் பெருகியது.

"என்னேடு பேசினல் பட்டினிதானு? நான் அவ்வளவு துர்ப்பாக்கியசாலியாகவா போய் விட்டேன்?'

"நீ துர்ப்பாக்கியசாலியோ இல்லையோ! உன்னேடு பேசிய நான் துர்ப்பாக்கியசாலி. ஏதோ கண்ணீர் விட்டாயே என்று இரக்கப்பட்டு ஒரு வீசை எண்ணெய் கொடுத்தேன். தவறிப்போய் எண்ணெயைக் கொட்டிவிட்டதாக எஜமானியம்மாளிடம் ஒரு பொய்யும் சொன்னேன். ஆனல் அந்தப் பாதகியோ நேற்று ராத்திரி சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாள்......"

"ஐயோ! நான் உங்களுக்கு எவ்வளவு பெரிய மனக்கஷ்டத்தை உண்டாக்கிவிட்டேன்!...."

"உண்மையில் எனக்காக நீ வருத்தப் படுகிருயல்லவா!"

"ஆமாம். அதில் சந்தேகம் வேறேயா?"

"இது உண்மையானல் நீ இனிமேல் என்னுடன் பேசவேண்டாம். என் எதிரில் கண்ணீர் விடவேண்டாம். கண்ணீர் விட்டாலும் உன்கஷ்டத்தைச் சொல்லவேண்டாம். நான் மனசு இளகி ஏதாவது கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளவேண்டாம். அப்படி வாங்கிக் கொண்டாலும் மறுநாள் என் எதிரில் வந்து 'கொட்டுக் கொட்டெ'ன்று விழித்துக்கொண்டு நிற்க வேண்டாம்" என்ருன் சம்பங்கி.

செங்கமலம் பொங்கிவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "சரி! உன்னுடன் நான் பேசவில்லை" என்று சொல்லும்போதே சம்பங்கி புறப்பட்டு விட்டான். அவன் நாலு அடிதூரம் கூடப் போயிருக்க மாட்டான். "ஐயா! ஐயா! ஒரு வார்த்தை. சொல்ல

மறந்துபோய்விட்டேன். குளத்துக்கு வரும்போது உங்களைத் தேடிக்கொண்டு உங்கள் கடைக்குப் போனேன்; அங்கே உங்களைக் காணும். உங்கள் சட்டைமட்டும் ஒரு ஆணியில் மாட்டி யிருந்தது. உங்களிடம் கொடுப்பதற்காக நான் கொண்டு வந்த மூன்றேகால் ரூபாயை உங்கள் சட்டைப் பையில் போட்டு விட்டேன். தயவுசெய்து மறக்காமல் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் சட்டென்று திரும்பினாள்.

இதைக்கேட்டதும் அவன் கால்கள் நின்றன. அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"செங்கமலம்! பணத்தை என் சட்டைப் பையில் போட்டுவிட்டாயா?"

செங்கமலம் 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிவிட்டு மேலே நடந்தாள்.

"செங்கமலம்! செங்கமலம்! ஒரு வார்த்தை! அவசரப்பட்டு உன்னிடம் ஏதேதோ கோபமாய்ப் பேசிவிட்டேன்...."

மீண்டும் செங்கமலம் தலையை ஆட்டினாள்.

"செங்கமலம்! பேசமாட்டாயா? என்மேல் கோபமா?" என்று கெஞ்சும் குரலில் கேட்டான் சம்பங்கி.

"நீங்கள்தான் இனிமேல் பேசக் கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறீர்களே, உங்கள் உத்திரவை நான் மீறலாமா?"

"கட்டாயம் மீறத்தான் வேண்டும். வாய்திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா?"

"முடியாது....ஒரு வார்த்தை மட்டும் பேசுவதாயிருந்தால் நான் பேசமாட்டேன். நான் உங்களிடம் பேசவேண்டிய சமாசாரங்களையெல்லாம் ஒரு

வார்த்தையில் எப்படிச் சொல்ல முடியும்?" என்று கூறிப் புன்னகை பூத்தாள் செங்கமலம்.

"அப்படியானால் சாயங்காலம் நாம் கட்டாயம் சந்திப்போம்....நாழியாகிறது, செங்கமலம். நான் போய் வருகிறேன். நேரம் கழித்துப் போனதற்காக அந்த ராட்சசி எனக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறாளோ தெரியவில்லை" என்று கூறி வீட்டை நோக்கி எடுத்தான் ஓட்டம். அவன் ஓடுவதையே ஒரு கணம் பார்த்துக்கொண்டிருந்து விட்டு ஆழ்ந்து பெருமூச்சுவிட்டு, ஜலம் மொள்ள படிக்கட்டுக்களில் இறங்கினாள், செங்கமலம்.

வீட்டை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்த சம்பங்கியின் உள்ளத்தில் இவ்வளவு பரபரப்புக்கும் மத்தியில் ஒரு சந்தோஷமும் உண்டாகாமல் போகவில்லை. வீட்டில் தன் பையில் செங்கமலம் போட்டு வந்திருக்கும் பணத்தை சோலையம்மாளிடம் கொடுத்து, "நேற்று ஒரு வீசை எண்ணெயை நான் சேதப்படுத்தி விட்டதற்காக என்னை ரொம்பக் கோபித்துக் கொண்டீர்களே, சோறு கூட இல்லை என்று சொல்லி வயிற்றில் அடித்தீர்களே!" என்று காசை அவள் முகத்தில் விட்டு எறியலாம். காசைக்கண்ட மாத்திரத்தில் சோலையம்மாள் பற்கள் அத்தனையும் வெளியில் தெரியப்போகிறது. "ஏதடா பணம்?" என்று கேட்டால் உடனே முதல்நாள் செங்கமலம் எண்ணெயைக் கொட்டியதையும், தான் அவளுக்கு உதவி செய்ததையும் சொல்லிவிடலாம். "பார்த்தீர்களா, அந்தப் பெண் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டாள். முன்பின் யோசியாமல் என்னைப் பட்டினி போட்டீர்களே, இது நியாயமா?" என்று சவால் விடலாம். சோலையம்மாள் அசட்டுப் பிசட்டென்று விழிக்கப் போகிறாள்!

இப்படியெல்லாம் கற்பனை செய்தவண்ணம் வீட்டுக்குள் நுழைந்தான் சம்பங்கி. அப்பொழுது சோலையம்மாள் கடையைத் திறந்து வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தாள். சம்பங்கியைக் கண்ட மாத்திரத்தில் ஆவேசம் வந்தவள்போல் துள்ளி எழுந்து இடுப்பில் புடவையை வரிந்து கட்டிக் கொண்டாள்.

"அடேய், சம்பங்கி! எத்தனை நாளாய் இந்த வேலை செய்கிறாய்!" என்று கர்ஜித்தாள் சோலையம்மாள்.

"ஆற்றங்கரையில் படுத்துத் தூங்கிவிட்டேன். எழுந்திருக்க நேரமாச்சு" என்றான் சம்பங்கி.

சட்டென்று சோலையம்மாள் பக்கத்திலிருந்த சம்பங்கியின் சட்டையை எடுத்து எதிரே நீட்டினாள்.

"திருட்டுப் பயலே! கையுங் களவுமாகப் பிடித்தாயிற்று. மூன்றே கால் ரூபாயை சட்டைப் பையில் ஒளித்து வைத்துக்கொண்டு ஒரு வீசை எண்ணெயும் கீழே கொட்டிப் போச்சு என்றா சொன்னே?" என்று கத்திவிட்டு அந்தச் சட்டையை ஒரு கசக்குக் கசக்கினாள். தன் இதயத்தையே பிடித்து ஒரு கசக்குக் கசக்குவதைப் போலிருந்தது சம்பங்கிக்கு. அப்பொழுது 'கல் கல்'லென்று சட்டைப் பையிலிருந்த பணம் நாலாபுறமும் சிதறியது. அப்பொழுது கூர்மையான பாணம் அவன் இதயத்தைத் தாக்குவதைப் போலிருந்தது.

"அடே!" என்று எண்ணெய் வாங்க வந்த சிலரும் அதிசயித்தனர்.

"அம்மா! நான் ஒன்றும் ஒளிக்கவில்லை. அந்தப் பணத்தை உங்க கிட்டக் கொடுக்கலாம் என்றுதான் வந்தேன். நீங்கள் அதற்குள்ளே...."

இந்தப் பதிலைக் கேட்டு அங்கிருந்தவர்கள் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள்.

"ஓஹோ! கொடுக்கலாம் என்றுதான் வச்சிருந்தயோ? என்ன யோக்கியதை? எப்பேர்ப்பட்ட தன்மை? அரிச்சந்திரன் தானடா நீ!" அவள் பேய்ச்சிரிப்பு அவனை, வாள் கொண்டறுப்பது போலிருந்தது.

"நான் நடந்தது எல்லாவற்றையும் சொல்லுகிறேன், அம்மா. கேட்டு விட்டுச் சிரியுங்கள்"

"எல்லாத்தையும் தான் பணம் சொல்லுதே!" என்று கண்களில் தீப்பொறி பறக்கக் கூறினாள் சோலை."

"நான் அந்தப் பணத்தைத் திருடவில்லை...."

"ஆமாம். அது தானாக உன் பையில் வந்து விழுந்ததாக்கும்?" பக்கத்திலிருந்தவர்கள் கொல்லென்று சிரித்தனர்.

"நான் சொல்கிறதைக் கேளுங்கள்"

"சொல்கிறதற்கு உனக்கு வாய் வேறேயா? சீ! மூடு வாயை. திருட்டு நாயே!" என்று பயங்கரமாக அவனை நெருங்கினாள் சோலை.

"நான் உங்களுக்கு ஒரு துரோகமும் நினைக்கவில்லை. நேற்று ராத்திரி இதுதான் நடந்தது..." என்று ஆரம்பித்தவன் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விழுந்தது.

"என்ன பொய் சொல்லலாமென்று பார்க்கிருயா? தடிப்பயலே!...." என்று மேலும் கையை ஓங்கினாள் சோலையம்மாள்.

"அதுதான்.. திருட்டுப் பயல். விடாதீங்க! போடுங்க அந்தக் கன்னத்தில் நாலு அறை இந்தக் கன்னத்தில் நாலு அறை" என்று பக்கத்திலிருந்து குரல் கேட்டது. உற்சாகத்தில் எப்பொழுதுமே

சற்றும் குறைவில்லாத சோலையம்மாளுக்கு இந்த உற்சாக ஆதரவு கிடைத்ததும் காட்டுத் தீயுடன் ஊழிக்காற்றும் சேர்ந்து கொண்டது போலாயிற்று. "கையால் போட்டால் சுரணை வராது. இந்தக் கம்பு தான் சரி" என்று கூறி மூலையிலிருந்த கம்பை எடுத்து அவன் மீது பாய்ந்தாள் சோலை.

அப்போது உள்ளே பூஜை செய்து கொண்டிருந்த குஞ்சிதபாதம் காலடிச் சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தார்.

மறுகணம் அங்கே நிற்க அவனுக்கு என்ன பைத்தியமா? வாசலைப் பார்க்க எடுத்தான் ஓட்டம். இளம் சிங்கத்தின் பலத்துடனும் மானின் வேகத்துடனும் மின்னலைப் போல் பறந்தோடும் சம்பங்கியை சோலையம்மாள் பிடிக்க முடியுமா? வெகு தூரம் வந்த பிறகுதான் அவனுக்குச் சுய உணர்ச்சி வந்தது. அகோரப் பசியும் தேகக் களைப்பும் அவனை ஒரு மரத்தடியில் தள்ளியது. அங்கேயே ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டான். சோலையம்மாள் மீது அவனுக்கு ஏற்பட்ட கோபம் தணிந்து விட்டது. ஆனல் செங்கமலத்தின் மீது தாங்க முடியாத கோபம் ஏற்பட்டு அவனைப் பைத்தியமாக அடித்தது. "யார் இந்த செங்கமலம்; தன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள எங்கிருந்து முளைத்தாள்?என் துரதிருஷ்டம் சேர்ந்து இந்தப் பெண் உருவத்தில் வந்து என்னை வதைக்கிறதோ? முதல் தடவை தான் அழுது கண்ணீர் வடித்து எண்ணெயை வாங்கிக்கொண்டு சோறு இல்லாமல் செய்தாள் என்ருல் இரண்டாவது தடவை காசைக் கொண்டு வந்து பையில் போட்டு வேலைக்கே உலைவைத்து விட்டாள். ஒரு பெண்ணுக்கு உதவி செய்ததற்கு இது தானு பலன்? .... சீ சீ. நீ ஒரு பெண்தானு? அல்லது பேயா? இப்பொழுது எங்கே போவது? எப்படி வயிறு வளர்ப்

பது? என்னை இந்த கதிக்கு உள்ளாக்கிய உன்னைச் சும்மா விடக்கூடாது. உன்னைப் பார்த்து வாய் கொண்ட மட்டும் உன்னைத் திட்டி விட்டுப் போனால் தான் என் மனம் திருப்தியடையும்." சோலையம்மாள் கொடுத்த அறையை அவன் எப்படி மறக்க முடியும்; வலியெடுத்த தன் கன்னத்தை சம்பங்கி தடவி விட்டுக் கொண்டான். "பாதகி! உன்னாலல்லவா எனக்கு இந்த அறை கிடைத்தது? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூறிவிட்டு செங்கமலத்தின் வீட்டை நோக்கி நடந்தான். வயிற்றைத் தீய்த்துக் கொண்டிருந்த பசியும், உள்ளத்தைத் தீய்த்துக் கொண்டிருந்த கோபமும் அவன் வேகத்தை அதிகப்படுத்தின. சில நிமிஷங்களில் அவன் தெருவுக்கு வந்து பிள்ளையார் கோவிலைத் தாண்டி விட்டான். இன்னும் சில வினாடிகளில் அவன் செங்கமலத்தின் வீட்டில் இருப்பான்.

செங்கமலத்தின் வீட்டிற்குள் அடி எடுத்து வைத்ததும், உள்ளேயிருந்து வந்த சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றான் சம்பங்கி.

## 4. திருடா, போ வெளியே!

உள்ளேயிருந்து உரத்த குரலில் திட்டும் வசவும் சரமாரியாக அவன் காதில் விழுந்தது. ஒரு பெண் மனம் குமுறி விம்மியழும் குரலும் சேர்ந்து கேட்டது.

" நீலி ! மாய்மாலக்காரி. அழுகிறதைப் பார் அழுகிறதை ! ஐந்தரைப் பெட்டியில் வைத்திருந்த ரூபாய் மூன்றேகாலையும் என்ன செய்தாய் ?...."

"நான் பார்க்கவில்லை..." அழுகைக்கு மத்தியில் வந்த குரல் செங்கமலத்தின் குரல்தான்.

"பார்க்கவில்லையா? நிஜத்தைச் சொல்லு. கட்டி வைத்து உரித்துவிடுவேன். கரண்டியைக் காய வைத்து கையில் சூடுபோடுவேன்..." இந்த ஆவேசக் கத்தல் அவள் சித்தியுடையதாகத்தா னிருக்கவேண்டும்.

சம்பங்கி ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டான். ஒரு நொடியில் அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவள் அன்று காலை தன் சட்டைப் பையில் போட்ட பணம் வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் திருடிக்கொண்டுவந்த பணம்தான். எந்தப் பணத்தைத் தன் பையில் போட்டதற்காக அவன் செங்கமலத்திடம் சண்டை பிடிக்க வந்தானே, அதே பணத்தை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்ததற்காக இங்கே அவளுக்கு மரியாதை கிடைத்துக் கொண்டிருக்கிறது. வேண்டும்! வேண்டும்! இந்தப் பெண்ணுக்கு நன்றாக வேண்டும். பெற்றோர்களுக்குத் தெரியாமல் எடுத்த குற்றத்துடன், தன் வேலையையும் போக்கடித்த குற்றத்துக்காக இவளை என்ன தான் செய்யக்கூடாது?

"ரேஷன் வாங்க வைத்திருந்த பணத்தை என்ன செய்தே? உன்னைத் தவிர வேறு யார் அதை எடுக்க முடியும்? அப்பாமேல் பழியைப் போடுகிறதுக்கு அவரும் ஊரில் இல்லை. மரியாதையாகச் சொல்லுகிறாயா அல்லது சூட்டுக்கோல் போடட்டுமா" என்று கத்தினாள் சித்தி. அவள் செங்கமலத்தைப் பிடித்து உள்ளே இழுத்தாள் என்பதையும் பிடியிலிருந்து தப்பிக்கொள்ள செங்கமலம் முயற்சிக்கிறாள் என்பதையும், "வா இங்கே" என்ற உறுமலிலிருந்தும் 'விடு என்னை' என்று கதறலிலிருந்தும் தெரிந்து கொண்டான் சம்பங்கி.

'ஐயோ!' என்ற குரலை ஒட்டித் தடால் என்ற சத்தம் கேட்டது. சட்டென்று ஜன்னல் வழியாக உள்ளே தலையை நீட்டினன் சம்பங்கி. செங்கமலம் பக்கத்திலுள்ள சுவரில் மோதி மண்டை உடைந்து ரத்தம் பெருகி யோடியது. அவனையும் அதற்குள் பார்த்துவிட்ட சித்தி, ஓட்டமாக ஓடிவந்து வாசற் கதவைத் திறந்து விட்டு, "ஐயோ! செங்கமலத்தின் மண்டை உடைந்துவிட்டதே! நான் என்ன செய் வேன்?" என்று கூவி கையை பிசைந்து கொண்டு 'கூ கூ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"நான் ஒன்றுமே செய்யவில்லை. என் கையி லிருந்து திமிறிக்கொள்ளப் பார்த்தாள். அப் பொழுது கை வழுக்கி விடவே தடாலென்று விழுந்துவிட்டாள். தம்பி! நீ யாரோ, தெரியாது. சமயத்தில் வந்தே! வீட்டிலே ஐயா கூட இல்லை. நீ தான் உதவி செய்யணும். உடனே ஆஸ்பத்திரிக்கு இந்த பெண்ணைக் கொண்டு போகணும்".

தலைவிரி கோலமாக ரத்தவெள்ளத்தில் கிடந்த செங்கமலத்தைப் பார்த்தும் சம்பங்கியின் பழைய கோபம் மாயமாக மறைந்தது. அவன் இதயம் சொல்லொணுத வேதனை யடைந்தது. தன் மேல் துண்டை எடுத்து, அவள் ரத்தக்காயத்தைச் சுற்றிக் கட்டினன்.

"அம்மா! ஒரு நொடியில் வண்டி கொண்டு வரு கிறேன், அதற்குள்ளே சத்தம் போட்டு ஊரைக் கூட்டாமல் இருங்கள்!" என்று கூறிவிட்டு வெளியே பாய்ந்து ஓடினன்.

சில நிமிஷத்தில் அந்த வீட்டு வாசலில் ஒரு குதிரைவண்டி வந்து நின்றது. மயக்கமுற்றுக் கிடந்த செங்கமலத்தை வண்டியில் போட்டுக் கொண்டு அவள் சின்னம்மாவுடன் ஆஸ்பத்திரிக் குச் சென்ருன் சம்பங்கி. அந்த ஊர் அந்த ஜில்லா

வின் முக்கிய நகரங்களில் ஒன்று. பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரியும் இருந்தது. ஆகவே செங்கமலம் பிழைத்துக்கொள்வாள் என்ற நம்பிக்கை உள்ளத்தில் கொழுந்துவிட் டெரிந்தது.

டாக்டர், செங்கமலத்தின் காயத்தைக் கழுவி மருந்து போட்டுக் கட்டி ஊசிபோட்டார். "கவலைப் படாதீர்கள். அப்படி ஒன்றும் பலமான காயமில்லை இன்னும் மூன்று நாட்களில் குணமாகிவிடும்" என்று கூறிவிட்டுப் போனதும்தான் சின்னம்மாள் தலை நிமிர்ந்தாள். என்ன இருந்தாலும், ஏதாவது எக்கச் சக்கமாக நடந்துவிட்டால் நாளைக்கு கணவனுக்குப் பதில் சொல்ல வேண்டியதுடன் ஊராரின் ஏச்சுக் கும் ஆளாக வேண்டுமல்லவா?

சின்னம்மாள் சம்பங்கியின்பக்கம் திரும்பி "தம்பி நீ சமயத்தில் செய்த ஒத்தாசையை நான் மறக்க மாட்டேன். சமயத்தில் நீ வந்திருக்காவிட்டால் நான் அவ்வளவு சீக்கிரத்தில் செங்கமலத்தை இங்கே கொண்டுவந்திருக்க முடியாது. நீ எங்கே எவ் வளவு அவசரமான காரியமாகப் போய்க்கொண் டிருந்தாயோ எனக்குத் தெரியாது...உன்னை நான் காக்கவைத்து விட்டேன். நீ போய் வருகிறாயா?" என்றாள். அந்த இடத்தை விட்டுப்போக அவ னுக்கு எப்படி மனம் வரும்?

"நான் வேறொரு காரியமாகவும் போக வில்லை. செங்கமலத்தைப் பார்க்கத்தான் வந் தேன். அவளுக்கு வேறு ஆண் பிள்ளைத் துணை யும் இல்லை. நான் இங்கேயே இருப்பது உங்க ளுக்கு ஒத்தாசையாக இருக்குமானால் இங்கேயே இருந்து விடுகிறேனே!" என்று சொல்ல நினைத் தான். ஆனால் அந்த வார்த்தைகளைச் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. அப்படிக் கூறுவது அழகாயிருக்குமா?

"தம்பி, நீ ஒரு ஒத்தாசை செய்தால் தேவலாம். தட்டாரத் தெரு 5–ம் நம்பர் வீட்டில் என் தம்பி இருக்கிறான். அவனை இங்கேவரச் சொல்லி ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறாயா ?" என்றாள் செங்கமலத்தின் சின்னம்மாள்.

"ஓ! இதோ போய் வரச் சொல்கிறேன் ?" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வேறு ஆண்பிள்ளைத் துணையும் அவர்களுக்கு இருக்கும் போது, எந்தக் காரணத்தையும் வைத்துக்கொண்டு அங்கே தங்க நியாயமில்லை. ஆனால் அந்த இடத்தை விட்டுப் போகத் தனக்கு இஷ்டமுமில்லை சக்தியுமில்லை என்பதை உணர்ந்தான்.

ஏன் அவன் கால்கள் பின்னுக்கு இழுக்கிறது? தன்னை அறியாமலே அவன் கண்கள் கட்டிலில் பிரக்ஞை அற்றுக்கிடக்கும் செங்கமலத்தைப் பார்த்து ஏன் கலங்குகின்றன? தன்னை யறியாமலே நீண்ட பெருமூச்செறிவானேன்? அவன் மனம் வேதனையடைந்து ஏன் தாபம் கொள்கிறது! சற்று முன் அவன் மனமார வெறுத்த பெண்ணை, யாரைத் தண்டிக்க வேண்டுமென்று நினைத்தானே அந்தப் பெண்ணைச் சுற்றி வட்டமிடுவானேன்? செங்கமலம் பிழைத்தெழுந்திருக்க வேண்டுமே என்று அவன் மனம் ஏங்கித் தவிப்பானேன் ? நினைக்க நினைக்க அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. செங்கமலத்தை மறந்துவிடவோ, அந்த நிலையில் அவளைவிட்டு வேறு ஊருக்குச் செல்வதோ தன்னால் ஆகாத காரியம் என்பதை அறிந்தான்.

செங்கமலத்தை ஒரு முறை பார்த்துவிட்டுப் புறப்பட்டான். ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் வந்ததும்தான் அவனை வாட்டிவந்த பசியை உணர்ந்தான். அவனையறியாமலே அவன் கை பையைத் தடவிற்று. கனமான சாமான் கைக்குத் தட்டுப்

பட்டது. இது என்ன? ஆமாம். ஒரு ரூபாய் நாணயந்தான்! இது எப்படி அவன் பைக்கு வந்தது. சட்டென்று அவனுக்கு ஞாபகம் வந்தது! சற்று முன் சோலையம்மாள் அவன் சட்டையைப் பிடித்துக் கசக்கிக் குலுக்கியபோது, நாணயங்கள் சிதறியபோது, கூர்மையான அம்பு அவன் இருதயத்தில் பாய்ந்ததுபோல் அவனுக்குத் தோன்றியதல்லவா? உண்மையில், ஒரு ரூபாய் நாணயம்தான் காற்றில் பறந்து வந்து அவன் மார்பைத் தாக்கிவிட்டு பைக்குள் விழுந்திருக்க வேண்டும்!

அந்த நாணயத்தை அருமையுடன் தடவிக் கொடுத்தான். இவ்வளவு துரதிருஷ்டத்துக்கும் மத்தியில் ஏதோ கொஞ்சம் அதிருஷ்டமும் இருக்கிறது போலும்! பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குப்போய் வயிற்றை நிரப்பிக்கொண்டான். சற்று தூரத்தில் ஹனுமார் கோவில் இருந்தது. அதன் மண்டபத்துக்குப் போய் கருங்கல் தரையில் படுத்தான்.

பலத்த கட்டுக்களுடன் ஆஸ்பத்திரியில் கட்டிலில் படுத்திருந்த செங்கமலத்தின் உருவம்தான் அவன் மனதில் தோன்றியது. முன்பின் தெரியாத ஒரு பெண்—நேற்று சாயங்காலம்தான் முதன் முதலாக அவளைப் பார்த்தது—அவன் வாழ்வில் எப்பேர்ப்பட்ட மாறுதலை உண்டாக்கி விட்டாள் என்பதை நினைத்துப் பார்த்தான். பன்னிரண்டு வருஷங்களாக சோலையம்மாளின் வீட்டில் அவன் வாழ்க்கை ஒருவிதமாகப் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுதோ அவனுக்கு வீடில்லை. படுக்க இடமில்லை. உண்ணச் சோறு இல்லை. எனக்குத்தான் எவ்வளவு சுயநலம். என்னைப்பற்றியே திரும்பவும் எண்ணிக்கொண் டிருக்கிறேனே! செங்கமலத்தின் கதியைப் பற்றியும் நான் எண்ண வேண்டுமல்லவா? அவள் நிலைக்கு நானும் ஒரு காரணந்

தானே! நேற்றிரவு எண்ணெய்ச் செம்பை அவள் கீழே போட்டதும் 'என்னல் உதவி செய்ய முடியாது' என்று சொல்லியிருந்தால் இப்பேர்ப்பட்ட விபத்து அவளுக்கு நேர்ந்திராதல்லவா? அவளுக்கு இரண்டாந்தடவை எண்ணெய் கொடுக்கக் கொண்டு தானே, அதற்குள்ள பணத்தை என்னிடம் கொடுத்துவிட வேண்டுமென்று மறுநாள் ஐந்தறைப் பெட்டியிலிருந்து பணத்தை எடுத்திருக்கிருள். அதனல்தானே அவளுக்கும் அவள் சின்னம்மாளுக்கும் ரகளை ஏற்பட்டு அவள் கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளும்படியாயிற்று. செங்கமலத்தின் உடம்பு குணமானதும் அவளைப் பார்த்து என்னை மன்னித்து விடும்படி கட்டாயம் கேட்க வேண்டும். அது நியாயமும் என் கடமையுமாகும் என்று தீர்மானித்தான் சம்பங்கி.

சோலையம்மாள் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் காலம் தள்ள முடியாதா? இந்தப் பரந்த உலகத்தில் எவ்வளவோ வேலையிருக்கிறது. ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும். வேலையில் சேர்ந்ததும் கொஞ்சம் அட்வான்ஸ் வாங்கி, ஒரு டஜன் ஆரஞ்சுப் பழங்கள் வாங்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய் செங்கமலத்தைப் பார்க்கவேண்டும். அவள் மயக்கம் தெளிந்து எழுந்திருந்திருப்பாள். ஆஸ்பத்திரியில் அவளுடன் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைக்குமோ, என்னமோ! உடம்பு முற்றிலும் குணமாக எத்தனை நாளாகுமோ?

சம்பங்கி சற்றுதூரம் சென்றதும் ஒரு மளிகைக் கடை அவன் கண்ணில்பட்டது. அது முருகேசம் பிள்ளையின் மளிகைக் கடை. அவர் கடைப் பெட்டியடியில் உட்கார்ந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தார். சம்பங்கி அவர் எதிரில் நின்று ஒரு கும்பிடு போட்டான்.

"ஏன். எங்கே வந்தே?" என்றார் முருகேசம். வழக்கமாக அவர் குரலில் காணப்படும் மென்மை பேச்சில் இல்லை. திடுக்கிட்ட சம்பங்கி, "ஒன்று மில்லை. உங்கள் கடையில் ஏதாவது வேலைகிடைக்குமோ என்று பார்க்க வந்தேன்" என்றான்.

"ஏன்? வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது மாதிரி பத்துவருஷம் உன்னைக் காப்பாற்றின சோலையிடமே உன் கைவரிசையை காண்பித்து விட்டாய். இன்னும் ஏமாந்தவங்க யார் என்று பார்க்கிறாயா?" என்றார் முருகேசம்.

"ஐயா! நடந்தது இதுதான்......."

"திருட்டுப்பயலே! போடா வெளியிலே!" என்று கத்தினர் முருகேசம். ஸ்தம்பித்துப்போய் நின்று விட்டான் சம்பங்கி.

## 5. ஓடும் ரயிலில்

முருகேசம் பிள்ளை கூடத் தன்னைத் திருடன் என்று கருதுவார் என்று சம்பங்கி எதிர்பார்க்கவில்லை. முருகேசம் பிள்ளை தர்ம நியாயத்துக்குப் பயந்தவர் என்று சொல்வார்கள். அவர் கூட உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்பவில்லை என்றால் இது என்ன உலகம்! அபலைப் பெண்ணிற்கு உதவி செய்ததற்குக் கடைசியில் திருட்டுப்பட்டந்தான் கிடைக்கும் போலும்! ஆனல் காலையில் சோலையம்மாள் கடையில் நடந்த சம்பவம் சாயங்காலத்துக்குள் முருகேசம் பிள்ளை கடைவரையில் எட்டி விட்டதே! பொய் வதந்திகள் இப்படித்தான் இறக்கை கட்டிப் பறந்து செல்லுமோ!

முருகேசம் பிள்ளையே இவ்விதம் தன்னிடம் எரிந்து விழுந்தபோது மற்றவர்களும் அப்படித் தானே சொல்வார்கள்? இந்த ஊரில் அவன் எங்கே போனாலும் அவன் நிழல் அவனைப் பின் தொடர்ந்து தான் வரப் போகிறது! அந்த ஊரிலுள்ள மட்டும் அவனுக்கு ஜீவனம் கிடைக்காது. வெளியூருக்குப் போனால் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் செங்கமலத்தை அடிக்கடி சந்திக்க முடியாது. அவளைப் பார்க்கவே முடியாது. இனி அவள் வெறும் கனவுதான்!

இந்த நினைவுடன் அவன் கடைத்தெரு வழியே சென்றபோது, ஒரு டீ கடை வாசலில் இருவர் அவனைப் பார்த்துப் பேசிக்கொள்வது போல் தோன்றியது. அவர்கள் என்ன பேசிக் கொண்டார்களோ என்னமோ, தன்னைச் சுட்டிக்காட்டிப் பேசிக்கொள்வதாக சம்பங்கிக்குத் தோன்றியது. இன்னும் சற்றுத்தூரத்தில் 'கொல்'லென்று யாரோ இருவர் சிரித்தனர். அது, தன்னை நோக்கிச் செய்த கேலிச்சிரிப்பாக அவன் மனதிற்குப் பட்டது. அந்தத் தெருவில் போகும் ஒவ்வொருவரும், "அதோ திருடன்!" என்று தன்னைக் குறித்துப் பேசுவதாகவே எண்ணினான். தன்னைச் சுற்றிலுமுள்ள ஜன சமுத்திரத்தின் கூக்குரல், "அதோ திருடன்!" என்ற குற்றச்சாட்டாகவே ஆயிரமாயிரம் ஒலி பெருக்கிகள் மூலம் அவன் காதுகளில் புகுந்தது. பைத்தியம் பிடித்தவன் போல் சம்பங்கி ஓட்டமெடுத்தான். எங்கே ஓடுகிறோம், எதற்காக ஓடுகிறோம் என்ற நினைவே இல்லாமல் ஓடினான். இந்த நினைவு வந்ததும் சட்டென்று நின்றான். அவன் எதிரில் 'சர்க்கார் ஆஸ்பத்திரி' என்ற போர்டு காட்சி யளித்தது. "நல்லதுதான்! நாம் வந்த இடம் சரியான இடம்! இந்த ஊரைவிட்டுப் போகுமுன் கடைசி தடவையாக

செங்கமலத்தைப் பார்த்துவிட்டுப் போகலாம். அவள் சுயநிலையை அடைந்திருப்பாள்.

அவன் ஆஸ்பத்திரிக்குள் சென்று செங்கமலத்தின் படுக்கையை அணுகினன். அவள் பக்கத்தில் யாரும் இல்லை என்பதைத் தூரத்திலேயே பார்த்துவிட்டான். அவனுக்கு அது பெரிய ஆறுதலாக இருந்தது. வேகமாக அவளருகில் சென்ருன். செங்கமலம் தன் அகன்ற பெரிய விழிகளால் அவனைப் பார்த்தாள். அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது. சம்பங்கியின் இதயம் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தது.

"நீங்களா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள் செங்கமலம்.

"ஆமாம் சம்பங்கியேதான்."

"நான் இங்கே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நீ அடிபட்டுக் கீழே விழுந்ததும் உன் சின்னம்மாவும் நானும்தான் உன்னை இங்கே கொண்டு வந்தோம்!..."

"அது நீங்கள் தானு?.... இதுவரையிலே இரண்டு ஆபத்திலிருந்து நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். உங்களை முதன் முதலில் பார்த்ததுமே நீங்கள் என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று நினைத்தேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்றும் தெய்வம்!"

"ஐயோ! அவ்வளவு பொறுப்புக்கு நான் தகுதியானவனு?"

"உங்களை முதன் முதலில் பார்த்ததுமே நான் என்னென்னவோ கனவுகள் காண ஆரம்பித்தேன்...."

"செங்கமலம்! உண்மையில் நானும்தான் எத்தனையோ கனவுகள் கண்டுகொண்டிருந்தேன். ஆனால் அத்தனையும் வெறும் பகற்கனவாகி விடும்போலிருக்கிறது. இன்னும் சில நிமிஷங்களில் நான் உன்னைப் பிரிந்து விடுவேன். இந்த ஊரில் இனி எனக்கு வேலை இல்லை...."

"என்ன! நிஜமாகவா; என்னை நீங்கள் விட்டுப் போகப் போகிறீர்களா?...." என்று குறுக்கிட்டுக் கேட்டாள் அந்தப் பெண். சுற்று முற்றும் சம்பங்கி பார்த்தான். பக்கத்துப் படுக்கையில் கிடந்தாள் ஒரு கிழவி. அவர்கள் சம்பாஷணையை கேட்பவர் யாரும் இல்லை.

"சின்னம்மா எங்கே?"

"வீட்டுக்கு இப்பத்தான் போனாள்"

"நல்லதுதான்-மனதைத்திறந்து கொஞ்சநேரம் பேசலாம். செங்கமலம்! சோலையம்மாளின் கொடுங்கோன்மையிலிருந்து உன்னால் எனக்கு விடுதலை கிடைத்து விட்டது. இந்த ஊரில் இருக்க எனக்கு இஷ்டமில்லை. நான் ஜீவனத்துக்காக உடனே சென்னைப்பட்டணம் போகப்போகிறேன். அங்கே கஷ்டப்பட்டு உழைத்துப் பெரிய பணக்காரனாகப் போகிறேன். அதுதான் என்வாழ்க்கை லட்சியம்"

"உங்கள் லட்சியம் இவ்வளவுதானா? எனக்கு விடுதலை கிடையாதா?"

அதற்குள் அவசரப் படாதே உன்னை நான் எப்படி மறப்பேன்.... எனக்கு விடுதலை அளித்த உனக்கு நான் விடுதலை அளிக்காமல் போவேனா? கூடிய சீக்கிரம் நான் எங்கேயாவது உன்னை அழைத்துப் போவேன். பல்லைக் கடித்துக் கொண்டு மூன்று மாதமோ அல்லது நாலு மாதமோ எனக்காகப் பொறுத்துக் கொண்டிரு."

செங்கமலம் சுற்று முற்றும் பார்த்து விட்டு பயம் நிரம்பிய குரலில் "ஐயோ! இன்னும் நான்கு மாதமா?" என்முள். அப்பொழுது அவள் பார்வை நாலுபுறமும் ஓநாய்களால் வேட்டையாடப்படும் ஒரு சிறு மான் குட்டியை ஞாபகப் படுத்தியது.

"சின்னம்மா என் கல்யாணத்தை கூடிய சீக்கிரத்திலே முடித்துவிட நினைக்கருங்க........"

"கல்யாணமா?...."

"ஆமாம். அவர் ரொம்ப பணக்காரராம். என்னைப் பார்க்கிறதுக்கு, இன்னும் கொஞ்ச நாளில் வரப்போகிருரும். எல்லாம் சின்னம்மா தம்பி இருக்கிருனே அந்தக் காலகண்டன் வேலைதான், இந்த விபத்திலிருந்தும் என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால் கீழே விழுந்து மண்டை உடைந்த போதே என் உயிரும் போயிருக்கக் கூடாதா? எதற்காகப் போன உயிர் திரும்ப வரவேணும் என்று தோன்றுகிறது.........."

"செங்கமலம்! எதற்காக வருத்தப் படுகிருய்? உன்னைக் காப்பாற்ற மாட்டேன் என்று சொன்னேனு? உன்னைக் காப்பாற்றத்தானே நான் வெளியூர் போய்ப் பணம் சம்பாதித்து நானும் ஒரு மனிதனுக ஆசைப் படுகிறேன்?......"

"அதற்கு வெளியூர் போகவேண்டுமா?"

"நிஜத்தைச் சொல்லுகிறேன். நீ என் சட்டைப் பையில் கொண்டு வந்து போட்ட மூன்றே கால் ரூபாயே எனக்கு எமனுகப் போய் விட்டது...."

"அடிபாவி! மூன்றே கால் ரூபாயைத் திருடி இந்தப் பயலிடமா கொடுத்தாய்......." என்ற அதிர் வெடியை பக்கத்தில் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினுன் சம்பங்கி.

"ஐயோ!" என்று கூவினுள் படுக்கையில் கிடந்த செங்கமலம். அதே கணத்தில் அவள் கண்கள் மூடிக் கொண்டன. அவள் மூர்ச்சையானுள்.

"ஆமாம் அவள்தான் கொடுத்தாள். அதற்காக அவளை என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்? என்னைத்தான் என்ன செய்யப் போகிறீர்கள்? என் உயிர் உள்ளவரை நீங்கள் செங்கமலத்தை ஒன்றும் சொல்ல முடியாது...." என்று கூறி மறக்கமுற்றிருந்த செங்கமலத்தை நெருங்கினுன். இந்த வார்த்தைகளை ஏன் சொன்னேம் என்பதே அவனுக்குத் தெரிய வில்லை.

"ஓஹோ! அவளுக்கு ஒரு காதலன் வேறேயா?" என்ற பரிகாசக் குரல் அவன் காதில் விழுந்தது. இவ்வாறு கூறியது ஒரு ஆண் குரல். அப்படிக் கூறியவன் சின்னம்மாவின் தம்பியாகத் தான் இருக்க வேண்டும்.

"அடேடே! செங்கமலத்துக்காக வக்காலத்துப் பேச வந்து விட்டார்" என்ருள் சின்னம்மா.

"டேய்! அந்தப் பெண்ணை ஏமாற்றி வாங்கிக் கொண்டு போன பணத்தை மரியாதையாகக்கொடுக் கிருயா, அல்லது கொடுக்கும்படி செய்யட்டுமா?" என்று கூறி அந்த வாலிபன் சம்பங்கியின் கையைப் பிடித்தான். பளிச்சென்று கையைத் திமிறினுன் சம் பங்கி. திமிறின கை தவறிப்போய் அந்த வாலிப னின் தலையில் பட்டது. மறுகணம் அவன் கீழே விழுந்தான்.

"ஐயோ! ஐயோ!" என்ற சின்னம்மாளின் கூக் குரல் எங்கும் எதிரொலித்தது. நர்ஸ்களும் டாக்ட ரும், ஆஸ்பத்திரி சிப்பந்திகளும் நாலாபுறமிருந்தும் ஓடிவந்தனர். இந்த அமளியில் சம்பங்கி எடுத்தான் ஓட்டம். செங்கமலத்தின் அருகில் இருந்து அவள்

மூர்ச்சை தெளிவிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி மிஞ்சிவிட்டது.

அவன் ரயில்வே ஸ்டேஷன் வருவதற்கும் சென்னைக்கு புறப்படும் ரயில் கிளம்புவதற்கும் சரியாயிருந்தது. "ஹேய்! ஹேய்! ஏருதே! என்று போர்டர்கள் கோஷிக்க"யாரடாவன் மோஷன்லே ஏறுகிறவன்?" என்று கார்ட் கூச்சலிட ஓடும் ரயிலில் ஒரு தாவுத் தாவி ஏறிவிட்டான் சம்பங்கி.

## 6. பிடிபட்டான்

தாம்பரத்தைத் தாண்டியதுமே முன் பின் பார்த்திராத மாயா லோகத்திற்குள் செல்வதுபோல் அவனுக்குத் தோன்றியது. பக்கத்தில் மின்சார ரயிலுடன் போட்டி போட்டுக்கொண்டு அவன் ஏறிவந்த புகை வண்டி சென்றது. தன் விதியுடன் அவன் போட்டி போட்டு ஜயிக்க முயலுவதை அது ஞாபகத்துக்குக் கொண்டுவந்தது.

'குப்' 'குப்' பென்று புகைவண்டி செல்வதை ஆமோதிப்பதுபோல் 'திக்' 'திக்' கென்று அவன் உள்ளம் அடித்துக் கொண்டது. டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்யும் சம்பங்கிக்கு மற்ற பிரயாணிகள் எல்லோருமே விரோதியாகத் தோன்றுவதில் என்ன ஆச்சரியம்? ஆனல், முதல் நாளிலிருந்தே சோலையம்மாள் வீட்டிலிருந்து அவன் வெளிவந்ததிலிருந்தே உலகமே அவனுக்கு விரோதியாகி விட்டதுபோல் தோன்றிக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவங்களை அவன் எப்படி மறக்கமுடியும்? செங்கமலத்

துக்கு இன்னும் என்ன ஆபத்துக்கள் நேருமோ என்ற கலக்கம் வேறு அவனைப் பிடுங்கித் தின்றது. மூன்றேகால் ரூபாயைப்பற்றி ஏன் தான் பிரஸ்தாபித்தோம் என்று எண்ணி மனம் நொந்தான். செங்கமலத்தை நிர்க்கதியாகவிட்டு வந்தோமே என்று வருந்தினன். வேறு அவனல் என்ன செய்ய முடியும்? ஆனல், சீக்கிரத்தில் வேலையைத் தேடிக் கொண்டு செங்கமலத்தை சென்னைக்கு அழைத்து வருவது ஒன்றே வழி.

வண்டி எழும்பூரை அடைந்தது. சம்பங்கி மெதுவாக வண்டியை விட்டு இறங்கினன். ரயிலிலிருந்து அப்பொழுது இறங்கிக் கொண்டிருந்த ஒருபிரயாணியிடம் போய், "ஐயா! உங்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டான். அவர் அவனை ஏறிட்டுப் பார்த்தார். அதற்குள் நாலைந்து போர்ட்டர்கள் அந்தப் பிரயாணியைச் சூழ்ந்து கொண்டு, "இரண்டு பெட்டிகளுக்கும் ஒருரூபாய் கொடுத்தால் போதுமுங்க" என்றூர்கள்.

"வேண்டாமப்பா, வேண்டாம் என் ஆள் இதோ இருக்கிறுன். தூக்கு அப்பா தூக்கு!" என்று சம்பங்கியைப் பார்த்துக் கட்டளையிட்டார் பிரயாணி. அவரது பிரம்மாண்டமான பெட்டியை வெகு அலட்சியமாகக் கையில் தூக்கிக்கொண்டு அவருடன் வெளியேறினன் சம்பங்கி. வெளியில் வந்ததும் பெட்டிகளை ஜட்காவில் வைத்தபிறகு அவனுக்கு கிடைத்தது நான்கணு கூலி!

"நான்கு அணு கொடுக்கறீங்களே!" என்றுன் சம்பங்கி. ஆயினும் பிழைப்புக்கு ஒரு வழி கண்டு பிடித்து விட்டதுபற்றித் திருப்தி அடைந்தான்.

"ஆமாம் அப்பா! உன்னை என் ஆள் என்று சொன்னதினல்தான் போர்ட்டர்கள் உன்னைத்தூக்க விட்டார்கள். இல்லாவிட்டால் இந்த நாலணு கூட

உனக்குக் கிடைக்காது, போ!" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் பிரயாணி. என் ஆள் என்று பிரயாணி அவனை உரிமை கொண்டாடிய காரணத்தைத் தெரிந்துகொண்டான் சம்பங்கி.

"ஓ ஹோ சென்னைப்பட்டணத்தில் ரயிலில் மூட்டை தூக்கக்கூட இவ்வளவு தடங்கலா" என்று அவன் அதிசயித்தான். சென்னைப்பட்டணமே அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

அன்றிலிருந்து ரயில்வே ஸ்டேஷன் கேட்டுக்கு இப்புறம் நின்றுகொண்டு பிரயாணிகள் சாமான்களை தூக்கும் கூலிவேலையில் ஈடுபட்டான். சோலையம்மாள் வீட்டில் இருபது வயதுவரையில் பணத்தையே கண்ணால் பார்த்திராத சம்பங்கிக்கு, தினமும் கிடைக்கும் அரை ரூபாய், ஒரு ரூபாய் பெரும் புதையலைப் போலவே இருந்தது. மிகுந்த பலசாலியான சம்பங்கிக்கு எவ்வளவு கஷ்டமான வேலையும் சுலபம்தான். தன் சுண்டுவிரலால் எப்பேர்ப்பட்ட கனமான சாமானையும் தூக்கி விடுவான். முதலில் ஸ்டேஷனிலிருந்த மற்ற 'லைசென்சு' பெறாத கூலிக்காரர்கள் அவனிடம் வாலாட்டத்தான் செய்தார்கள். ஆனால் ஒருநாள் சம்பங்கி அவர்களில் ஒருவன் காதைப் பிடித்து இரண்டடிதூரம் தூக்கியதும், அவன் வழிக்கே யாரும் வருவதில்லை.

சம்பங்கி அனாவசியமாகக் காசைச் செலவழிக்க மாட்டான். தன் ஆகாரத்துக்கு வேண்டிய குறைந்த பட்சத் தொகையைச் செலவழித்துவிட்டு, மீதியை தன் வேஷ்டியில் முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்வான். விளக்கு வைத்ததும், சம்பங்கி ஸ்டேஷனுக்குச் சமீபம் இருந்த ஒரு பார்க்கில் படுத்துக்கொள்வான். இரண்டே இரண்டு லட்சியங்கள் அவன் வாழ்க்கையில் அணையா விளக்குகளாகப் பிரகாசித்து இருண்ட அவன் வாழ்க்கையில் உற்சாகத்

தையும் உணர்வையும் கொடுத்து வேலைசெய்யத் தூண்டின. எப்படியும் ஐம்பது ரூபாயாவது சேர்த்து ஒரு வியாபாரம் செய்ய வேண்டும். தானும் ஒரு மனிதன் என்று தலை நிமிர்ந்து நடக்கவேண்டும். இரண்டாவது லட்சியம், சீக்கிரமே ஊருக்குத் திரும்பிச் சென்று செங்கமலத்தை எப்படியாவது மீட்டு சென்னைக்கு அழைத்து வந்து விடவேண்டும்......... அப்பொழுதுதான் அவன் கனவுகள் எல்லாம் நனவாகும்.

சம்பங்கி சென்னைக்கு வந்து ஒரு மாதம் இருக்கும். ஒருநாள் இரவு பார்க்கில் முனிஸிபல் விளக்கின் ஒளியில் உட்கார்ந்த வண்ணம் தன் வேஷ்டியிலிருந்த முடிச்சை அவிழ்த்து பணத்தை எண்ணிப் பார்த்தான். அவன் கண்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன. ஒன்று, பத்து, இருபது, நாற்பது....பேஷ்! நாம் எதிர்பார்த்ததைவிட அதிகம்தான்...ஐம்பது... ரூபாய்....ஒன்பது அணு....இங்கே என்ன சத்தம்! ஒன்றுமில்லை—ஏதாவது கீரிப்பிள்ளைதான் சலசலப்புச் சத்தத்துக்குக் காரணமாயிருக்க வேண்டும்.

இவ்வாறு சம்பங்கி எண்ணிக்கொண்ட போதிலும் அவன் மனதில் சற்றுப் பயம் உண்டாயிற்று. யாராவது அவன் பணத்தை எண்ணுவதைப் பார்த்திருப்பார்களோ என்று சந்தேகப்பட்டான். ஆகவே, சாப்பிட்டுவிட்டு வழக்கமாகப் படுக்கும் மரத்தடியில் படுக்காமல் பக்கத்திலிருந்த ஒரு வீட்டின் வராந்தாவில் படுத்தான். படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம், களைப்பினால் அவனுக்குத் தூக்கம் வந்துவிட்டது...

நள்ளிரவில் யாரோ அவன் காலைத்தட்டுவது போல் இருந்தது. திடுக்கிட்டு விழித்துக்கொண்டான் சம்பங்கி. மறுகணம் அவன் மடியைப் பறிப்பதுபோலவும் 'தட தட'வென்று யாரோ ஓடுவது

போலவும் அவனுக்குத் தோன்றியது. 'ஐயோ!' என்று கூவிக் கண்ணை கசக்கிக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. மனப் பிரமை போலும் என்று எண்ணி மடியைத் தடவிப் பார்த்தான். வேஷ்டியிலிருந்த முடிச்சு கத்தரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததும் 'ஐயோ! திருடன்! திருடன்!' என்று கூச்சலிட்டான்.

மறுகணம் அந்த வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்காரர் ஓடிவந்தார். அந்தத் தைரிய சாலி 'திருடன் திருடன்' என்று கத்திக்கொண்டே அவனருகில் வராமல் அவன் பக்கம் கையைக் காண்பித்தார். "நான் இல்லை திருடன்!" என்று சம்பங்கி கத்துவதற்குள் நாலைந்து பேர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். சோலையம்மாள் வீட்டிலும் திருட்டுப் பட்டம். இங்குமா அதே பெயர்? இந்த முட்டாள் ஜனங்களுடன் பேசிப் பிரயோஜனமில்லை. இந்த உலகத்துக்கு வாய் தான் பெரிதாக, குரல்தான் பிரும்மாண்டமாக இருக்கிறது! இதற்குக் காது கிடையாது. இருந்தாலும் அந்தக் காது செவிடுதானே!

அமானுஷ்யமான பலம்கொண்ட சம்பங்கி தன் கையினல் ஒரு சுற்றுச் சுற்றவே மறுகணம் அங்கே ஒரு ஆத்மா கூட இல்லை. அப்பொழுது தான் ஒரு உண்மை அவன் மனதில் தோன்றியது. பயந்து கொண்டு ஓடும் நிரபராதியை உலகம் துரத்தும், ஆனல் கம்பீரமாக நடக்கும் திருடனை உலகம் ஒன்றும் செய்யாது.

ராஜநடை நடந்து வெகு தூரம் வந்துவிட்டான் சம்பங்கி. 'கம்பீரமாக நடக்கும் திருடனை உலகம் ஒன்றும் செய்யாது' என்று மனம் தாளமிட்டது. அறுந்துபோன வேஷ்டியைப் பலதடவைப் பார்த்து விட்டான். இந்த உலகில் கௌரவமாக யாரும்

வாழ்வதற்கு இடமில்லையா? திருடர்கள் நிறைந்தது தானு இந்த உலகம்? ஒரு மாத காலமாக நான் கஷ்டப்பட்டதற்குப் பலன் இதுதானு? மறுபடியும் ஐம்பது ரூபாய் சேர்ப்பது எப்பொழுது? மறுபடியும் அதை இன்னொருவன் அடித்துக்கொண்டுபோக மாட்டான் என்பது என்ன நிச்சயம்? பளிச்சென்று அவன் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. "இந்த மோசக்கார உலகத்தின் மீது ஏன் பழிக்குப்பழி வாங்கக் கூடாது? என்னை ஒருவன் திருடி என் பணத்தை அபகரித்த பிறகு, நானும் ஏன் இதே தந்திரத்தைச் செய்து என் பணத்தை மீண்டும் அடையக் கூடாது. என்னை ஒருவன் அக்கிரமாகக் களவாடுவதை தடுக்க முடியாத உலகத்துக்கு என்னை 'அப்படிச் செய்யாதே' என்று கண்டிக்க என்ன வாய் இருக்கிறது? நான் அரும்பாடு பட்டு உழைத்துச் சேர்த்த பணத்துக்கு பாதுகாப்பு அளிக்காத உலகத்துக்கு எனக்கு நன்னடத்தையை போதிக்க யோக்கியதை ஏது?"

இந்தத் தகாத எண்ணம் மனதில் தோன்றவே அவன் கண்களில் கொடியஒளிவீசியது. சம்பங்கியின் நடை வேகமாகியது. அவன் வெகு தூரம் வந்துவிட்டான். தெருவின் ஓரத்தில் நடைபாதையில் யாரோ ஒரு வாலிபன் படுத்துக்கொண்டிருப்பதை மங்கலான நிலவொளியில் பார்த்தான் சம்பங்கி. அந்த வாலிபன் வேஷ்டியின் ஒரு ஓரத்தில் கனமான முடிச்சு ஒன்று போடப்பட்டிருந்தது. அது என்ன பணமா? அல்லது ஏதாவது கடிதாசுக் கத்தையா? அல்லது வெற்றிலை பாக்குப் புகையிலையா? எதுவாக இருந்தாலும் ஒரு கை பார்க்காமல் விடக்கூடாது.

ஒரு கணம் தாமதித்தான் சம்பங்கி. அவன் மடியில் பேனுக்கத்தி தயாராக இருந்தது. கட்டை விர

லால் அதன் கூர்மையைப் பரிசோதித்தான். அந்த வாலிபன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மறு கணம் சம்பங்கியின் பேனுக்கத்தி படுத்திருந்த வனின் மடியைக் கத்தரித்து விட்டது. அதே சமயத்தில் படுத்திருந்த வாலிபன் சட்டென்று விழித்துக் கொண்டு, "ஐயோ" என்று கூவி சம்பங்கியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

## 7. மன்னிப்பு

சம்பங்கிக்கு அந்த வாலிபனிடமிருந்து தப்பித்துக்கொள்வது ஒரு பெரிய காரியமல்ல. தன் முழு பலத்தையும் சேர்த்து அவன் இடது கையால் வாலிபன் கன்னத்தில் விட்டான் ஒரு குத்து. சம்பங்கியின் கையிலிருந்த பண முடிச்சு கீழே நழுவி விழும் பொழுது, அந்த வாலிபனும் கீழே விழுந்தான். அவன் சமாளித்துக் கொண்டு எழுந்திருப்பதற்குள் சம்பங்கி வெகு தூரம் போய் விட்டான். கீழே கல் கல்லென்ற சப்தத்துடன் விழுந்த பணத்தை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் கூட அந்த வாலிபனுக்குத் தோன்றவில்லை "பயலே! உன்னை விட்டேனுபார்!" என்று கூவி விட்டு சம்பங்கியைப் பிடிக்க ஓடினன் அவன்.

உலகமே துயிலில் ஆழ்ந்திருக்கும் நள்ளிரவு வேளையில் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஓடும் சம்பங்கியும் அவன் மேல் பழி வாங்க ஓடும் வாலிபனும் 'திடு திடு' என்று பூமி அதிரும்படி ஓடினார்கள். இதோ சம்பங்கி பிடிபடப் போகிருன் என்று எண்ணும் சமயத்தில், அவன் தொபீர் என்று பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த கூவம் நதியில்

குதித்து விட்டான். அவனைப் பின் தொடர்ந்து குதித்தான் அந்த வாலிபன். ஜலத்துக் குள்ளேயே துவந்த யுத்தம் நடந்தது. சம்பங்கியின் கிராப் மயிரைப் பிடித்து வெளியே இழுத்து வந்தான். வாலிபனை ஆத்திர மடைந்த சம்பங்கி விட்டான் ஒரு அறை! சுமார் ஐந்து நிமிஷம் அகோரத்துடன் நடந்த பயங்கரச் சண்டைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது ஒரு போலீஸ்காரனின் ஊது குழல் சத்தம். இருவரும் மிரண்டு குஸ்தியை நிறுத்தினர்கள். தூரத்தில் தப தப வென்று போலீஸ்காரன் ஓடி வரும் சத்தம் கேட்டது. வெலவெலத்துப் போன சம்பங்கி அந்த வாலிபனின் காலில் விழுந்தான். தம்பி! நீ தான் இப்பொழுது என்னைக் காப்பாற்ற வேண்டும். சற்று நேரத்திற்கு முன் நான் கஷ்டப் பட்டுத் தேடி வேஷ்டியில் முடிச்சுப் போட்டு வைத்திருந்த ஐம்பது ரூபாயைப் பறி கொடுத்தேன். சந்தேகமிருந்தால் என் வேஷ்டியைப்பார். பணத்தைப் பறி கொடுத்த என் மனசு எப்படி யிருக்கும் என்று யோசித்துப் பார். அந்த மனக் கசப்பில் உலகத்தின் மேல் பழி வாங்கத்தான் இந்த வேலையில் இறங்கினேன்.... தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுக்காதே!" என்று கெஞ்சினன். அந்த வாலிபன் அறுந்திருந்த சம்பங்கியின் வேஷ்டியைப் பார்த்தான்.

பக்கத்தில் வந்து விட்டான் அந்தப் போலீஸ்காரன். சட்டென்று சம்பங்கி வாயடைத்துப் போய் திரு திரு வென்று விழித்துக் கொண்டு நின்றான். போலீஸ்காரன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

"ஏண்டா திருட்டுப் பயல் மாதிரி விழிக்கிருய்" என்றான் போலீஸ்காரன் சம்பங்கியைப் பார்த்து.

"இவர்தான் என் அண்ணத்தை. நாங்கள்

இரண்டு பேரும் நடைபாதையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தோம் யாரோ திருடன் எங்கள் மடியைக் கத்தரித்தது போலிருந்தது. விழித்துக் கொண்டதும் அவன் ஓட ஆரம்பித்து விட்டான். நானும் அண்ணுத்தையும் அவனைத் துரத்த ஆரம்பித்தோம் அவன் இந்தப் பக்கமாகத் தான் ஓடினுன்...” என்று கூசாமல் பொய் சொன்னுன் வாலிபன்.

“ஓடுங்க! ஓடுங்க! தேடிக்கண்டு பிடியுங்க!” என்று கூறி விட்டு கொட்டாவி விட்ட வண்ணம் அவ்விடத்தை விட்டு அகன்ருன் போலீஸ்காரன்.

“தம்பி! நீ இவ்வளவு பெரிய உதவி எனக்கு செய்வாய் என்று நான் கொஞ்சங் கூட எதிர் பார்க்கவில்லை. நீ நிஜத்தைச் சொல்லி என் கையில் விலங்கை மாட்டி விடுவாயோ என்று நினைத்தேன்....” என்ருன் சம்பங்கி மெல்லிய குரலில்.

“இல்லை அண்ணு, நான் ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டேன். என்னை நீ கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு நான் அப்படிச் செய்வேனு?”

“என் கெஞ்சுதலைப் பொருட்படுத்தியது தான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இந்தக்காலத்தில் இவ்வளவு நல்லவர்கள் இருக்கிருர்களா?”

“அண்ணு! இதுவரை வாழ்நாள் முழுதும் பிறரைக் கெஞ்சியவன் நான். கெஞ்சும்போது மனம் எவ்வளவு சங்கடப் படுகிறது என்பது எனக்குத் தெரியும்” அதைப் பிறர் அலட்சியம் செய்யும் பொழுதும் அவமதிக்கும் பொழுதும் நெஞ்சு வெடித்துவிடும்போல் ஒரு தாங்க முடியாத வேதனை ஏற்படும் என்பதையும் நான் அறிவேன். என் வாழ்வில் முதன்முதலாக ஒருவர் கெஞ்சியபோது என் காதுகளை என்னுல் நம்ப முடியவில்லை. என்

சந்தோஷத்தையும் நான் அடைந்த பெருமையை யும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஜன்மம் முழுதும் பிறரைக் கெஞ்சப் பிறந்தவன் என்று எண்ணியிருந்த நான் எப்பொழுதுமே பிச்சைக்கார னல்ல; என்னுல் பிறருக்குக் கொடுக்கக் கூடியது கூட ஒன்றிருக்கிறது என்பதை அறியும்போது எப்படிப் பெருமை யடையாமலிருக்க முடியும்? நான் கொடுக்கக் கூடியது வெறும் பிச்சைக் காசல்ல; ஒரு பிடி சோறு அல்ல; ஒரு சிறு துண்டு அல்ல. எல்லாவற்றையும் விட உயர்ந்த சுதந்திரம் என்பதை அறிந்து புள்காங்கிதம் அடைந்தேன். அதை நீ கேட்டவுடனேயே உனக்குக் கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன்... உன்னை சிறைக்கு அனுப் புவதில் எனக்கு என்ன லாபம் ஏற்படப்போகிறது? மேலும் நீ என்னை கெஞ்சியபோது நீ சொல்வதெல் லாம் நிஜம் என்று எனக்குத் தோன்றியது....நீ பொய் சொல்கிறவன் அல்ல என்று முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா!....” என்ருன் வாலிபன்.

அதைக்கேட்ட சம்பங்கி “தம்பி, உலகமே எனக்கு விரோதி என்று நினைத்தேன். நீ ஒரு சிநேகிதன் இருக்கிருய் என்பதை அறியும்போது எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறது தெரியுமா? உன் பெருந்தன்மை, உலகத்தைப் பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயத்தையே மாற்றி விட் டது. உன் உதார குணம் என்னைப் பரிசுத்தப் படுத்திவிட்டது. தம்பி! சற்று முன் திருடியே பிழைப்பது என்று விரதம் வைத்துக் கொண்டிருந் தேன். சத்தியமாகச் சொல்கிறேன், தம்பி! இனி நான் திருடமாட்டேன்....உன் பெயர் என்ன?”

“மாணிக்கம்!” என்ருன் அந்த வாலிபன்.

“பிழைப்புக்கு என்ன செய்கிருய்....” என்று கேட்டான் சம்பங்கி.

“கூலிப் பிழைப்புத்தான்...” என்ருன் மாணிக் கம்.

“நானும்தான்” என்று ஆமோதித்தான் சம்பங்கி.

“உன் கையிலுள்ள பணமும் போய்விட்டது. என் கையிலுள்ள பணத்தையும் கீழே உதறிவிட் டாய். நாம் இருவரும் ஒரே நிலையில் இருக்கிருேம். நாம் இருவரும் சேர்ந்தாற்போல் கஷ்டப்பட்டு உழைத்துக் கையில் கொஞ்சம் பணம் சேர்த்து ஏதாவது ஒரு வியாபாரம் செய்து கௌரவமாக வாழலாமே” என்று யோசனை கூறினன் மாணிக்கம்.

“அடடே! நான் நினைத்திருந்தது போலவே நீயும் சொல்கிருயே. அப்படியே செய்வோம். இந்தத் தடவை நாம் சம்பாதிக்கும் பணத்தை நாம் பறிகொடுக்காமல் இருக்க வேண்டும்” என்ருன் சம்பங்கி.

“அண்ணு! உனக்கு நான் துணை. எனக்கு நீ துணை. ஒருவரை யாரும் சுலபமாக ஏமாற்றக் கூடும். ஆனல் இருவரை உலகம் ஏமாற்றுவது கஷ்டம்” என்ருன் மாணிக்கம்.

## 8. ஏன் இந்தப் பாசாங்கு?

மேற்படி சம்பவம் நடந்து ஆறுமாதங்களாகி விட்டன. இப்பொழுது ஒரு கடையின் பெட்டியடி யில் சம்பங்கியைப் பார்க்கிருேம். அந்தக் கடை யின் முகப்பில் ‘சம்பங்கி அண் பிரதர்’ முதல் தர வெண்ணெய், எண்ணெய் வியாபாரிகள் என்ற பலகை தொங்கிக்கொண்டிருந்தது. அவன் உடுப்

யையும் கையிலுள்ள மோதிரத்தையும் பார்த்தால் அவன் நல்ல நிலைமையில் இருப்பதை யாரும் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அவன் முகம் அவ்வளவு சந்தோஷமாக இல்லை என்பதை எளி தில் ஊகிக்கலாம். கடையில் ஏகக் கூட்டம்.

"அண்ணா! அவர் அரை வீசை வெண்ணெய் கேட்கிறார். நீ ஒரு வீசை கொடுக்கிறாயே!" என்றான் பக்கத்தில் இருந்த மாணிக்கம். "ஓ அப்படியா?" என்று தன் தவறைத் திருத்திக் கொண்டான் சம்பங்கி.

சிறிது நேரத்திற்கெல்லாம் சம்பங்கி சில்லரையை எண்ணி ஒரு வாடிக்கைக்காரரிடம் கொடுத்த போது, அவர் பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு, "ஐயா! அதிகமாகப் பணம் கொடுத்துவிட்டீர்களே? நான் ஐந்து ரூபாய் நோட்டுத்தான் கொடுத்தேன். நீங்கள் பத்து ரூபாய் நோட்டு கொடுத்ததாக எண்ணிக்கொண்டு சில்லரை கொடுத்திருக்கிறீர்கள்" என்றார்.

"அடேடே! நான் கவனிக்கவில்லை" என்று கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டான் சம்பங்கி.

கூட்டம் கலைந்ததும் மாணிக்கம் சம்பங்கியைப் பார்த்து, "அண்ணா! வரவர உன் மனசே சரியாக இல்லை. ஞாபக மறதி ஜாஸ்தியாக இருக்கிறது. வியாபாரத்திலேயே உன் புத்தி செல்லவில்லை" என்றான். "ஆமாம், மாணிக்கம்! வரவர என் மனம் சரியாகவே இல்லைதான்...."

"அண்ணா! அந்தப் பெண் செங்கமலத்தை நினைத்து மனம் உருகிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? அவளை மறந்தால் ஒழிய உங்களுக்கு நிம்மதி உண்டாகப் போவதில்லை..."

"அது என்னால் முடியக் கூடியதா?"

"அதற்கு வேண்டிய மனோ பலம் உனக்கு இல்லையா? எங்காவது ஓர் இடம் சென்று இரண்டு வாரங்கள் தங்கிவிட்டு வாயேன். அப்பொழுதாவது உன் வேதனையை மறக்க முடியுமா என்று பார்க்கலாம்."

"தம்பி மாணிக்கம்! நான் சுவர்க்கமே சென்றால் கூட செங்கமலத்தை என்னால் எப்படி மறக்க முடியும்? என் மனோபலத்தைப் பற்றிப் பேசுகிறாய். இந்த உலகத்தில் மனிதனின் மனதை குழப்பி புத்தியை சபலிக்க வைக்கும் எத்தனையோ சம்பங்கிகளுக்கிடையில் உண்மையான காதலைப் பாதுகாக்கத்தான் மனோபலம் வேண்டும். காதலை மறக்க மனோபலம் வேண்டியதில்லை. காதலைக் காப்பாற்றத்தான் மனோபலம் வேண்டும். அது மாதிரி தம்பி, சிநேகத்தைப் பாதுகாப்பதற்கும் சிநேகத்தை அழிப்பதற்கும், கலைப்பதற்கும் எத்தனையோ வில்லங்கங்களும், சிக்கல்களும் தினமும் ஏற்படுகின்றன. அவற்றினால் சிநேகம் அழிந்து விடாமல் காப்பதற்கு உயர் குணமும், திடசித்தமும், மனோபலமும் வேண்டுமல்லவா?"

"அண்ணா! உன்னுடன் பழகப் பழகத்தான் உன் மேன்மையை அறிகிறேன். செங்கமலத்தை மறந்துவிடச் சொல்லி நான் உன்னைக் கேட்டது தவறு. என்னை மன்னித்து விடு" என்று கேட்டான் மாணிக்கம்.

"தம்பி மாணிக்கம், நானுந்தான் அந்த ஊரில் ஒவ்வொரு இடமாக, ஒவ்வொரு வீதியாக, ஒவ்வொரு வீடாக செங்கமலத்தைத் தேடினேன். எங்கும் அவளைக் காணோம். அவள் கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. அப்பொழுதே ஒரு பணக்காரனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க அவள் சின்னம்மா நிச்சயம் செய்துவிட்டதாக

செங்கமலம் சொன்னாள். அதுபோலவே நிஜமாக நடந்திருக்குமா? அவள் தகப்பனார் எந்த ஆபீஸில் வேலை செய்தார் என்பதைக் கேட்டுக்கொண்டு அங்கே போய் விசாரித்தேன். ஆனால் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எந்த ஊருக்கு அவரை மாற்றினார்களோ தெரியவில்லை....”

இந்த சமயத்தில் சம்பங்கியின் வாழ்க்கையில் இதுவரை நடந்த முக்கிய சம்பவங்களை இங்கே குறிப்பிட வேண்டும். சம்பங்கியும் அவன் ஆருயிர்த் தோழன் மாணிக்கமும் மிகவும் ஒற்றுமையுடன் பாடுபட்டுக் கையில் முந்நூறு ரூபாய் சேர்த்துவிட்டார்கள். மிகவும் வியாபாரம் புழக்கமுள்ள இடத்தில் ஒரு சிறு இடம் வாடகைக்குக் கிடைத்தது. அந்த இடத்தில் கையிலுள்ள முதலைப் போட்டு வெண்ணெய், எண்ணெய் முதலிய சாமான்களை வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். சம்பங்கிக்கு இந்த வியாபாரத்தில் நிறைய அனுபவம் இருந்ததால், யாருடைய தயவும் இல்லாமல் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது. எண்ணெயின் தராதரத்தைக் கண்ணால் பார்த்ததுமே சொல்லிவிடுவான் சம்பங்கி. ஆகவே, சிறந்த சரக்குகளை வாங்குவதும் முதல்தரமான கலப்படமில்லாத சாமான்களை தேர்ந்தெடுப்பதும் மிகவும் சுலபமாயிருந்தது.

சோலையம்மாவின் வீட்டில் சம்பங்கி வேலைக்கிருந்த பொழுது, சாமான்களை அவள் கலப்படம் செய்யும் பொழுது அவனுக்கு சொல்லொணாத அருவெறுப்பு ஏற்பட்டதல்லவா? அப்பொழுதெல்லாம், “சுவாமி! ஆண்டவனே! எனக்கு ஒரு கடை வைக்கும் பாக்கியத்தைக் கொடு. அப்பொழுது இந்த அக்கிரமம் செய்யாமல் சுத்தமான சாமான்கள் ஜனங்களுக்கு விற்பேன்” என்று வேண்டிக்கொள்வது உண்டு. அப்பேர்ப்பட்ட

சம்பங்கி இப்பொழுது கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவானு? 'சம்பங்கி பிரதர்' எண்ணெய்க் கடை ஏற்பட்ட சிலநாட்களுக்குள்ளேயே சுத்தமான சாமான்களுக்கும் உத்தரவாதமான எண்ணெய்களுக்கும் அது பிரசித்தமான இடமாக விளங்கத் தொடங்கியது. சம்பங்கி அதிக லாபத்தையும் எதிர்பார்க்கவில்லை. மற்றக் கடைகளில் விற்கும் விலையைவிட அவன் கடையில் சாமான்கள் விலை மலிவாகத்தானிருக்கும். கடையில் கூட்டம் சேருவதற்குக் கேட்கவா வேண்டும்? வியாபாரம் பெருக ஆரம்பித்துச் செழித்தது.

ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்த மற்றக் கடைக்காரர்கள் 'சம்பங்கி அண் பிரதர்' எண்ணெய்க் கடையைப் பார்த்ததும் பொருமைப்பட ஆரம்பித்தனர். அக்கம் பக்கத்தில் ஏராளமான எண்ணெய்க் கடைகள் இருந்தன.

கடை ஆரம்பமாகி சில வாரங்கள் ஆன பிறகு 'இனிமேல் கவலை இல்லை, பிழைத்துக் கொள்ளலாம்' என்று பெருமூச்சு விட்டனர் சம்பங்கியும் மாணிக்கமும். இருவருக்கும் சிநேகம் ஏற்பட்டவுடனேயே தன் அருமைக் காதலி செங்கமலத்தைப் பற்றி சம்பங்கி தன் சிநேகிதனிடம் சொன்ஞன். மாணிக்கம் மிக அநுதாபத்துடன் அவன் காதல் கதையைக் கேட்டான். கள்ளங் கபடற்ற உண்மையான காதலர்களைச் சேர்த்துவைக்க தன்ஞலான உதவியைச் செய்யத் தீர்மானித்தான்.

"அண்ணு! இனி கடையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீ ஒரு தடவை ஊருக்குப் போய் செங்கமலத்தைப் பார்த்துத் தைரியம் சொல்லிவிட்டு வா. அதற்குப் பிறகு செங்கமலத்தை எப்படி இங்கே அழைத்துக் கொண்டு வருவது என்று யோசனை செய்து ஒரு வழி கண்டு பிடிக்க

லாம்" என்ருன். சம்பங்கிக்கும் அந்த எண்ணம் இருந்ததால் அந்த யோசனையை ஒப்புக்கொண்டு தன் ஊருக்குக் கிளம்பினன்.

வெகுநாட்கள் கழித்து செங்கமலத்தைச சந்திக்கப் போகிருேம் என்ற மகிழ்ச்சியும், அதற்குள் அவளுக்கு என்ன நேர்ந்திருக்குமோ? என்ற பயமும் உள்ளத்தில் போட்டியிட காட்டூரில் இறங்கினன். செங்கமலத்தை எப்படிச் சந்திப்பது என்ற கவலையும் சேர்ந்து கொண்டது. கடைசியில் செங்கமலத்தின் வீட்டாரே ஊரைவிட்டுப் போய்விட்டார்கள் என்பதை அறிந்தபோது அவன் அடைந்த ஏமாற்றம் தான் எவ்வளவு?

மனம் ஒடிந்து சென்னைக்குத் திரும்பிய சம்பங்கிக்கு ஆறுதல் மொழிகள் கூறித் தேற்றினன் மாணிக்கம். வரவர கடை வியாபாரத்தில் கூட அவனுக்குப் புத்தி செல்லவில்லை. மாணிக்கம் பெட்டியடியில் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனித்து வந்தான். மற்றக் கடைக்காரர்களின் பொருமை வளர்ந்து விசுவரூபம் எடுத்தது. இப்படியே 'சம்பங்கி பிரதரில்' வியாபாரம் நடந்து வந்தால் சில காலத்தில் அவர்கள் பெரும் பணக்காரர்களாகி யிருப்பார்கள். அவர்களை யாரும் அசைக்க முடியாத நிலையில் இருப்பார்கள். ஆனல் வஞ்சக உலகம் யோக்கியதையையும் பெருந்தன்மையையும் தலையெடுக்க விடுமா?

'சம்பங்கி அண் பிரதர்' கடைக்கு அடுத்தாற்போல் காளியம்மாள் என்ற பெண்ணரசியின் எண்ணெய்க் கடையிருந்தது. பெயருக் கேற்ருர்ப்போல் அந்த அம்மாள் கோர சொரூபத்துடன் இல்லை. ஐம்பது வயதுள்ள அந்த மாது பார்ப்பதற்குப் பரம சாதுவாகத்தானிருந்தாள். ஆனல் அவள் சாந்தமான முகத்துக்கு ஏற்ருர்ப்போல் அவள் குணம்

மட்டும் சாதுவாக இருக்கவில்லை. அவள் பெயரைப் போலவே இருந்தது. சம்பங்கியின் கடையில் கூட்டம்கூட ஆரம்பித்ததிலிருந்து அவள் ஜாடைமாடையாக அவனையும் மாணிக்கத்தையும் திட்ட ஆரம்பித்தாள். "இது கண்ட தறுதலைகளுக்குத் தான் காலமாக இருக்கிறது. நேற்று வந்த பயல்களுக்கு இவ்வளவு திமிரா?" என்பாள். "ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டுகிற கதையாக இருக்கிறதே" என்பாள். இதையெல்லாம் சம்பங்கியும் மாணிக்கமும் சட்டைசெய்வதே யில்லை. ஆனல் சம்பங்கியின் கடை வைத்திருந்த வீட்டுச் சொந்தக்காரனிடம் போய் காளியம்மாள் ஏதோ கோள்சொல்லி அவர்களை வெளியேற்ற முயற்சி செய்வதாக சம்பங்கியிடம் மாணிக்கம் ஒருநாள் தெரிவித்தான். வீட்டுச் சொந்தக்காரனைச் சமாதானம் செய்ய இன்னும் பத்துரூபாய் அதிக வாடகை கொடுக்கும்படி நேரிட்டது. தன் கடை வாசலில் இருந்த குப்பையைப் பெருக்கி சம்பங்கியின் கடைவாசலில் கொட்டுவதிலிருந்து, சம்பங்கியின் கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்களை மயக்கிப் பலவந்தமாக இழுத்துப் போவதைக் கூடச் சகித்துக்கொண் டிருந்தான் சம்பங்கி. ஏனெனில் வியாபாரத்துறையில் போட்டா போட்டி ஏற்படும்போது மனிதனுடைய புத்தி எவ்வளவு கேவல மாகுமென்பதை அவன் அறிவான்.

ஒரு நாள் காளியம்மாள் கடையில் காளியம்மாளுக்குப் பதிலாக பெட்டி யருகில் ஒரு இளம் மங்கை வீற்றிருப்பதைக் கண்டான். அவளுக்கு பதினறு அல்லது பதினேழு வயதிருக்கும். ஏதோ ஒரு வன தேவதை திசை தடுமாறி அங்கே வந்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறதோ என்று மதிமயங்கினன் சம்பங்கி. கடைந்தெடுத்த விக்ரஹம் போன்ற அவளது உருவ அமைப்பும் நவ யௌவனத்தின் பூரிப்பும், மிடுக்கும், கம்பீரமும்

ஒருங்கே குடிகொண்ட அவள் தோற்றமும் சம்பங்கி யின் கவனத்தைக் கவர்ந்தது. காளியம்மாளின் சாயல் அவளிடம் இருந்தது. அவளது அகன்ற அழகிய கண்களையும், அழகிய நாசியையும், செக்கச் செவேலென்று சிவந்த உதடுகளையும், மெருகு ஏறிய அவள் ரோஜாக் கன்னங்களையும் மாறி மாறிப் பார்த்து வியந்து கொண்டிருந்தான் சம்பங்கி.

"ஐயா! உங்களைத்தானே! அரை வீசை வெண் ணெய் கொடுங்க!" என்ற குரலைக்கேட்டு அவன் சுயநினைவுக்கு வந்தான். சாமானைக்கொடுத்துவிட்டு, மறுபடியும் காளியம்மாவின் கடையைப் பார்க்காமல் பக்கத்தில் கிடந்த புஸ்தகத்தை எடுத்துப் படிப்பது போல் பாவனை செய்தான். இது என்ன சங்கடம்! ஏன் மனம் இப்படிப் பரபரக்கிறது? பின் வரும் வார்த்தைகளை அவன் படித்தான்: "ஏன் உனக்கு இந்தப் பாசாங்கு? உன் மனம் எங்கே? நீ செய்வது என்ன? ஏன் நீயே உன்னை ஏமாற்றிக் கொள்கி ருய்? உன் மனதை நீ அடக்கி ஆளப்போகிருயா? அல்லது அது உன்னை ஆட்டி வைக்கப் போகிறதா?" சட்டென்று அப் புஸ்தகத்தை மூடினுன் சம்பங்கி.

## 9. காப்பாற்றியது யார்?

அவனை அறியாமல் அவன் கண்கள் அந்த அழ கியை ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்பின. அந் தப் பெண் தன்னைப் பார்த்து குறுநகை புரிவதை அக்கணத்தில் உணர்ந்தான் சம்பங்கி. "ஏன் இந்த வீண் முயற்சி? ஏன் இந்த மனப் போராட்டம்! என்னைப் பார்க்காமலிருக்க முடியுமா உங்களால்?" என்று அந்தப் புன்னகை கூறுவது போல் தோன் றியது.

இந்தப் போராட்டத்துக்கிடையில் செங்கமலத்தின் உருவம் அவன் மனக்கண் முன் வந்து நின்றது. 'திக்' கென்றது அவன் நெஞ்சம். உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டியது. சே, சே! ஒரு கணத்தில் புத்தி எப்படிப் பேதலித்து விட்டது. கள்ளங் கபடற்ற குழந்தை உள்ளம் படைத்த அன்பே உருவான செங்கமலம் எங்கே? முன்பின் தெரியாத இந்தப் பெண் எங்கே? செங்கமலத்தைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் கண்ணால் பார்ப்பதும் பாவம்.

இந்த முடிவுக்கு வந்த சம்பங்கி அடுத்த கடையை திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. அடுத்த கடையில் பெட்டியடியில் உட்கார்ந்திருப்பவர் யார் என்று பார்க்க முடியாதபடி ஒரு கண்ணாடி அலமாரியையும் குறுக்கே வைத்துவிட்டான். அவன் சம்பந்தப்பட்டவரை இனி அவனுக்கும் காளியம்மாளின் குமாரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அந்த நிமிஷத்திலிருந்தே சம்பங்கி அவளை மறந்து விட்டான். ஆனால் மற்றவர்கள் அவனை மறக்கவிட்டால் தானே?

ஒரு நாள் காலை சம்பங்கி கடைக்கு வந்ததும், மாணிக்கம் ஒரு திடுக்கிடத்தக்க விவரத்தைக் கூறினான்.

"அண்ணா! எல்லா வெண்ணெய், எண்ணெய் கடைக்காரர்களும் ஒன்று சேர்ந்து கொண்டு நம்மை ஒழிக்கத் திட்டம் போட்டு விட்டார்கள்......"

"பூ! ரொம்ப நாளாகத்தான் இவர்கள் திட்டம் போட்டு வருகிறார்கள். இதில் புதிது ஒன்றுமில்லையே?"

"இல்லை அண்ணா! இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு எல்லாச் சாமான்கள் விலையையும் ஒன்றுக்குப் பாதியாகக் குறைத்து விற்கத் தீர்மானித்திருக்கிறார்கள். நீயே பாரேன், எல்லாக் கடை

யிலும் கூட்டத்தை! நம் கடையில் இன்று ஈ-காக்கை கூட வரவில்லை" என்றான் மாணிக்கம்.

தூக்கிவாரிப் போட்டது சம்பங்கிக்கு. மாணிக்கம் சொன்னது சரிதான். அவர்கள் கடை வாசலில் ஒருவர் கூட இல்லை!

"மாணிக்கம்! வருஷக் கணக்காக கொள்ளை லாபம் அடித்து வந்தவர்கள் இந்தக் கடைக்காரர்கள். நம்மை ஒழித்துக் கட்டுவதற்காக கொஞ்ச காலத்துக்கு நஷ்ட விலைக்குக் கூட விற்பார்கள். நாம் ஒழிந்ததும் பழையபடி விலையை ஏற்றி விடுவார்கள்" என்றான் சம்பங்கி.

"இல்லை, அண்ணா! இவர்கள் சரக்கில் மூன்றில் இரண்டுபாகம் கலப்படம். ஆகவே பாதிவிலைக்கு விற்றால்கூட அவர்களுக்கு நஷ்டம் இராது. இப்பொழுது நாம் என்ன செய்வது என்றுதான் யோசிக்கவேண்டும்" என்றான் மாணிக்கம்.

"ஒன்று நாம் இதே விலையில் நல்ல சாமான்களை விற்கவேண்டும். அதனால் வியாபாரம் இல்லாமல் கடையை மூடவேண்டும். அல்லது நாமும் கலப்படம் செய்து மற்றவர்களைப்போல் குறைந்த விலைக்கு விற்றுப் போட்டியை சமாளிக்க வேண்டும்...." என்றான் சம்பங்கி.

"ஐயோ! அயோக்கியத்தனம் செய்யவா சொல்கிறாய்?" என்றான் மாணிக்கம்.

"மாணிக்கம் லட்சியம், அல்லது வியாபாரம் இதில் ஏதாவது ஒன்றை நாம் பறி கொடுக்கத்தான் வேண்டும். லட்சியப்படி நடந்தால் வியாபாரம் இல்லை. முதலில் வியாபாரத்தைக் காப்பாற்றிக் கொள்வோம். வியாபாரம் வேர் ஊன்றிய பிறகு லட்சியத்தைக் காப்பாற்றலாம். அஸ்திவாரமே இல்லாதபோது மேலே கட்டிடம் கட்ட முடியுமா?" என்றான் சம்பங்கி.

மாணிக்கத்தின் முகத்தில் ஈயாடவில்லை. தான் அருமையாகக் கருதிய ஏதோ ஒன்றைப் பறி கொடுத்து விட்டவன் போல் உட்கார்ந்து விட்டான். இதற்குப் பிறகு சம்பங்கி ரொம்ப சுறு சுறுப்பாக இருந்தான். ஏதோ எண்ணெய் டின்களைத் திறந் தான். அந்த எண்ணெயை சில டின்களில் ஊற்றி ஞன். கடை வாசலில் வைத்திருந்த கரும்பலகையில் எழுதியிருந்ததை அழித்துவிட்டு புது விலையை எழு திஞன். அந்த விலை மற்ற கடைகளில் போடப் பட்டிருந்த விலையைவிட ஒரு அணு குறைவாகவே இருந்தது. இதன் பலஞக அக்கம் பக்கத்துக் கடைகளில் பெரும் பரபரப்பு உண்டாயிற்று. மீண்டும் சம்பங்கி அண் பிரதரில் கூட்டம் கூட ஆரம் பித்து விட்டது.

"என்ன உலகம்! என்ன ஜனங்கள்! வெண் ணெய்க்கும் சுண்ணும்புக்கும் வித்தியாசம் தெரியாத ஜனங்கள்!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண் டான் சம்பங்கி.

நேரம் ஆக ஆக சம்பங்கியின் முகத்தில் வெற் றிக் குறி தோன்றியது. மனம் சோர்ந்து உட்கார்ந் திருந்த மாணிக்கத்தைப் பார்த்து, மாணிக்கம் இந்த வெண்ணெயில் பாதிபங்கு மார்வோதான் என்பது எனக்கும் கஷ்டமாகத் தானிருக்கிறது. ஆனல் நாம் என்ன செய்யலாம்? யோக்கியதைக்கும் சத்தி யத்துக்கும் உலகத்தில் காலமில்லை. யோக்கிய தைக்கு இங்கே இடமில்லை. அப்படித் தப்பித் தவறி யாராவது யோக்கியன் இருந்தால் அவனை அயோக்கியனுக்கி விட்டுத்தான் உலகம் மறுகாரியம் பார்க்கிறது" என்ருன்.

சாயங்காலம் யாரும் எதிர் பார்க்காத திடீர் சம்பவம் நடந்தது. சுமார் ஐந்து மணியிருக்கும். ஒரு சர்க்கார் அதிகாரி சில போலீஸ் ஜவான்களுடன்

வந்தார். எண்ணெயையும் வெண்ணெயையும் பரி சோதித்துப் பார்த்தார். சம்பங்கியைப் பார்த்து, "ஏனப்பா எத்தனை நாளாக இந்த வேலை செய்கிறாய்" என்று கேட்டு விட்டு சில சாம்பிள்களையும் எடுத்துக் கொண்டு போனார். "நான் மட்டுமா இப்படி மோசடி செய்கிறேன்! இந்த தெருவிலுள்ள ஒவ்வொரு கடை யையும் பாருங்கள் கலப்படம் இல்லாத சாமான் ஒன் றைக் கண்டுபிடியுங்கள்" என்று சவால் விட்டான் சம்பங்கி. "ரொம்பசரி, அப்போ பாக்கித் திருடனைப் பிடித்துவிட்டு என்னைப் பிடியுங்கள் என்று யாரா வது ஒரு திருடன் சொன்னால் விடுவார்களா; நீ திரு டனா இல்லையா-அதுதான் கேள்வி" என்று கூறி விட்டுச் சென்றார். அந்த அதிகாரி கடையை விட்டுப் போகும் போது பக்கத்துக் கடை க்ர்ளியம்மாளையும் மற்றக் கடைக்காரர்களையும் கடைக் கண்ணால் பார்த்து சிரித்து விட்டுப் போனார்!

"அண்ணா! இந்த அதிகாரியை மற்றக் கடைக் காரர்கள்தான் வரவழைத்திருக்கிறார்கள். நம்மை உள்ளே தள்ளத்தான் இந்தசதி" என்றான் மாணிக் கம்.

"இந்த அதிகாரிக்கு இவர்கள் மாமூல் கொடுக் கிறார்கள் என்று நினைக்கிறேன். அதனால் அவர்கள் இட்ட கட்டளையை இவன் செய்ய வேண்டாமா? மனிதப் பதர்கள். முதுகெலும்பில்லாத புழுக்கள்" என்று சபித்தான் சம்பங்கி.

மறு நாள் சம்பங்கியும் மாணிக்கமும் கோர்ட் டுக்குச் சென்றனர். கலப்படமான சாமான்களை விற்றதற்காக இருவருக்கும் ஐநூறு ரூபாய் அப ராதம் விதிக்கப் பட்டது. அபராதம் செலுத்தத் தவ றினால் தலைக்கு மூன்று மாதம் சிறைவாசம். இந்தத் தண்டனையைக் கேட்டு இடிந்து போய் விட்டனர் இருநண்பர்களும். கடவுள் மனிதர்களை ஏன் படைத்

தார்? மிருகங்களை ஏன் படைத்தார். தனித் தனியாக அவற்றைப் படைத்துவிட்டு மனிதனுக்கும் ஏன் மிருகத் தன்மையைக் கொடுத்தார்?" என்று கேட்டான் சம்பங்கி. "அண்ணு, இந்தக் கேள்வியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க இதுதானு சமயம்? நம் கையில் எல்லாம் சேர்த்தாலும் மூன்னூறுக்கு மேல் இராது இந்த அக்கிரம உத்தரவுக்கு கீழ்ப்படிந்து தண்டம் அழுவதைக் காட்டிலும் மூன்றுமாதம் சிறையிலே இருந்துவிட்டு வரலாம்" என்ருன் மாணிக்கம். 'ஐயோ! சிறையிலா' என்ருன் சம்பங்கி. குற்றவாளி அபதாரம் செலுத்துகிருர்களா? சிறைக்குப் போகிருர்களா என்று கேட்டார் நீதிபதி. சம்பங்கியின் வக்கீல் அவனுடன் ஏதோ பேசினுர். சம்பங்கியின் முகத்தில் ஆச்சரியம் தோன்றியது. பின்னர் முகத்தில் குழப்பம் குடிகொண்டது. பின்னர் ஒரு புன்னகை செய்தான்; பிறகு தலையை ஆட்டினுன். சம்பங்கியின் வக்கீல் "குற்றவாளி அபராதத் தொகையை இதோ செலுத்த ஒப்புக்கொள்கிருர்" என்ருர். "ஏது பணம், அண்ணு" என்று பரபரப்புடன் கேட்டான் மாணிக்கம். "எல்லாம் சொல்லுகிறேன்" என்ருன் சம்பங்கி.

சிறிது நேரத்திற்கெல்லாம் இருவரும் வெளியே வந்தனர். "அண்ணு! ஏது உனக்கு ஐநூறு ரூபாய்! சீக்கிரம் சொல். அந்தப் பணம் யார் கொடுத்தது?" என்று அவசரப்பட்டான். சம்பங்கி "தம்பி மாணிக்கம்! சமயத்தில் நமக்குப் பணம் கொடுத்து உதவி புரிந்து நம் கௌரவத்தைக் காப்பாற்றியவர் யாராக இருக்கும்? நீ தான் சொல்லேன்" என்ருன்.

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. புதிராக இருக்கிறதே"

"உலகமே மாயை என்கிருர்கள். அது எவ்வளவு நிஜம்? கெட்டவர்கள் நல்லவர்கள் போலவும்

நல்லவர்கள் கெட்டவர்கள் போலவும் நம் கண்ணுக்கு தெரிகிறார்கள். ஆபத்து சமயத்தில்தான் நம் எதிரிகள் யார் என்று தெரிந்து கொள்கிறோம்...."

"நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையே. நம் அபராதத் தொகையைச் செலுத்தி நம்மை சிறையிலிருந்து மீட்ட உபகாரி யார்?"

"அந்த உபகாரி வேறுயாரும் இல்லை. பக்கத்துக்கடை காளியம்மாளே தான். ஆச்சரியமாயிருக்கிறதா?" என்று புன் முறுவலுடன் கேட்டான் சம்பங்கி.

"யாரு? காளியம்மாளா?" என்று திகைத்துக் கேட்டான் மாணிக்கம்.

## 10. எது நிஜம்?

மறுநாள் கடையடைப்பு தினம். சாதாரணமாக சம்பங்கியும் மாணிக்கமும் மாலை ஐந்துமணிக்கு சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு சினிமாவுக்கோ பீச்சுக்கோ கிளம்பிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அன்று பலமான சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். விதவிதமான பலகாரங்கள் தட்டுத் தட்டாக அவர்கள் முன் குவிந்தன. அந்தப் பட்சணங்கள் எல்லாம் தேனினும் இனித்தன. 'கலீர்' 'கலீர்' என்று வளையல்கள் சப்திக்க பட்சணங்களையும் காப்பியையும் ஏந்திவரும் வடிவாம்பாளின் அழகைப்பருகுவதா அல்லது தேனினும் இனிய பட்சணங்களைச் சாப்பிடுவதா என்று தெரியாமல் திண்டாடினான் சம்பங்கி. இந்த வடிவாம்பாள் யார்? காளியம்மாளின் செல்வப் புத்திரியான வடிவாம்பாள் தான். பல வர்ண வண்ணாத்திப் பூச்சி பறந்து வரு

வதைப் போலவும், அன்னம் தண்ணீரில் இழைந்து வருவதைப் போலவும், மான் மருண்டு குதித்தோடுவது போலவும், அங்குமிங்கும் உலாவும் அழகியிடமிருந்து தன் கண்களை மீட்கமுடியவில்லை அவனுக்கு.

சிற்றுண்டி முடிந்ததும் காளியம்மாள் வெற்றிலை பாக்குத் தட்டைக் கொண்டுவந்து அவர்கள் கையில் கொடுத்து, "நான் இன்று சாயங்காலம் காபி சாப்பிட உங்களைக் கூப்பிட்டபோது நீங்கள் வருவீர்களோ என்ற சந்தேகந்தான். ஆனல் நீங்கள் வந்தது ஆச்சர்யம்தான்" என்ருள்.

சம்பங்கி பின் வருமாறு கூறினன்: "நாங்கள் வந்ததா ஆச்சரியம்! ஒருநாளுமில்லை. சமயத்திலே நீங்கள் உதவி செய்து காப்பாற்றினதுதான் ஆச்சரியம். நாங்களே நேரில் வந்து உங்களுக்கு வந்தனம் தெரிவிக்க எண்ணியிருந்தோம். அந்த சமயத்தில் நீங்கள் கூப்பிட்டனுப்பினீர்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது......"

"நான் என்ன உங்களுக்குப் பெரிய உதவி செய்துவிட்டேன். வியாபாரத்தில் போட்டி ஏற்படுவது சகஜம். அதனல் மனத்தாங்கல் இருப்பது கூட இயற்கை. ஆனல் ஒருவர் கஷ்டப்படும்போது அவர்களுக்கு உதவி செய்வது மனிதத்தன்மை!" தூண் மறைவிலிருந்து வடிவாம்பாள் கடைக்கண் பார்வை அவன் மனதை ஊடுருவுவது போலிருந்தது.

"நீங்கள் எங்களுக்காக ஐநூறு ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள்; அதில் மூந்நூறு ருபாயை இப்பொழுது கொடுத்து விடுகிறோம். பிறகு, மாதம் கொஞ்சமாக பாக்கித் தொகையையும் கொடுத்து விடுகிறோம்" என்ருன் மாணிக்கம்.

"வேண்டாம், வேண்டாம். இந்த மூந்நூறு ரூபாயை வைத்துக்கொண்டு உங்கள் வியாபாரத்தை

பெரிசு பண்ணலாம். உங்கள் பணம் எங்கே போகிறது? அதற்கு அவசரம் இல்லை"

"ஏன். அந்தப் பணம் உங்கள்கடைக்கு உபயோகப்படாதா?" என்றான் மாணிக்கம்.

"கடை!...கடை!....என் கடையை நினைத்தாலே எனக்கு அலுத்து வருகிறது. "என் வீட்டுக்காரர் காலமாகி எட்டு வருஷமாகிறது. எத்தனை நாளைக்குத் தான் நான் பாடுபட முடியும்? அதை யாரிடமாவது கொடுத்து விடலா மென்றுதான் பார்க்கிறேன். அதற்குத் தகுந்த ஆளைத்தான் இத்தனை நாளாய்த் தேடிவந்தேன். இப்பொழுதுதான் அப்பேர்ப்பட்ட ஆசாமியைக் கண்டு பிடித்தேன்...."

"விற்று விடப் போகிறீர்களோ?"

"இல்லை, இல்லை! இனாமாகக் கொடுக்கப் போகிகிறேன்."

"இனாமாகவா கொடுக்கப் போகிறீர்கள்? ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படிப்பட்ட பாக்கியசாலி யாரோ" என்று கேட்டான் சம்பங்கி.

"சம்பங்கி! நீங்கள் பாக்கியசாலியோ இல்லையோ உங்களிடம் என் கடையை ஒப்புவிக்கும் நான் பாக்கியசாலி" சம்பங்கிக்குத் தூக்கி வாரிப் போட்டது. மாணிக்கத்தின் கண்களும் சம்பங்கியின் கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன.

"நான் என்ன சொந்தக்காரனா? என்னிடமா கடையை ஒப்புவிக்கப் போகிறீர்கள்?"

"இதற்கே தயங்குகிறீர்களே. என் கடையை மட்டுமா உங்களிடம் ஒப்புவிக்கப் போகிறேன். என்னிடமுள்ள எல்லா பொக்கிஷத்தையுமே உங்களிடம் கொடுக்கப் போகிறேன். என் உயிர் போல் பாதுகாத்துவரும் என் அருமை மகள் வடிவாம்பாளை

யும் உங்களிடம் ஒப்படைக்க எண்ணியிருக்கிறேன்" என்று கூறி நிறுத்திவிட்டு சம்பங்கியின் முகத்தையே ஆவலுடன் பார்த்தாள். சம்பங்கியின் கண்களில் ஆச்சரியம் குடிகொண்டது.

"உங்களை முதன் முதல் பார்த்ததுமே வடிவாம்பாளுக்குத் தகுந்த மாப்பிள்ளை நீங்கள்தான் என்று தீர்மானித்துவிட்டேன். நீங்கள் சம்மதித்தால் இந்த மாதமே கல்யாணத்தை நடத்திவிடலாம். அப்புறம் இந்த வீடு, வாசல், கடை, கண்ணி எல்லாம் உங்களுடையது........"

சம்பங்கி வடிவாம்பாள் நின்று கொண்டிருந்த பக்கம் பார்த்தான். அதற்குள் அந்தப் பெண் மாயமாய் மறைந்தாள். சம்பங்கி சமாளித்துக் கொண்டு, "அம்மா!என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் திகைக்க வைத்து விட்டீர்கள். யோசித்துப் பதில் சொல்ல இரண்டு நாள் அவகாசம் தருகிறீர்களா" என்று கேட்டான். "ஓ! தாராளமாக" என்று பதிலளித்தாள் காளியம்மாள்.

சம்பங்கியும் மாணிக்கமும் தங்கள் அறைக்குத் திரும்பும்போது மாணிக்கம் தன் நண்பன் முகத்தைப் பார்த்தான். அவ்வளவு சந்தோஷமான முகத்தை அவன் அதுவரை பார்த்ததில்லை. எந்தப் பக்கம் காற்று வீசிக் கொண்டிருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்து போயிற்று.

"மாணிக்கம்! பார்த்தாயா? அதிர்ஷ்டம் என்றால் இப்படியல்லவா வரவேண்டும்? காளியம்மாள் ஐநூறு ரூபாய் எதற்குக் கொடுத்தாள் என்று யோசித்தேன். இப்பொழுதுதான் தெரிந்தது. என்னை மாப்பிள்ளையாக்கிக் கொள்ளத்தான் கொடுத்திருக்கிறாள். எப்படியானால் என்ன? அது

எனக்குச் சௌகரியமாகப் போய்விட்டது. காளி யம்மாளின் கையில் ஐவேஜியும் இருக்கிறது. வீடு வாசல் கடைகண்ணி எல்லாம் இருக்கிறது. வடி வாம்பாள் நல்ல அழகி. இதைவிடச் சிறந்த இடத்தை நான் எதிர்பார்க்க முடியுமா? நீயே சொல்லு. நான் ஒரு அனுதை. எனக்குப் பெண் கொடுக்க யாரும் முன்வர மாட்டார்கள் என்று நான் நினைத்ததுண்டு" என்று வெகு உற்சாகமாகச் சொல் லிக் கொண்டே போனுன்.

சம்பங்கியின் மட்டற்ற குதூகலம் மாணிக்கத் திற்கு ஆச்சரியத்தை அளித்தது.

"தம்பி மாணிக்கம் என்ன ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிருயே!"

"பேசுகிறது சம்பங்கிதானு என்று சந்தேகமா யிருந்தது".

"ஏன் தம்பி! சந்தேகம் ஏன்? நான் வடிவாம் பாளைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்கிருயா?"

"கூடாது என்று சொல்ல நான் யார்?"

"இல்லை உனக்கு இதில் இஷ்டமில்லை. நீ எதையோ மனதில் வைத்துக் கொண்டிருக்கிருய்"

"நீ எதையோ அடியோடு மறந்து விட்டாய்!"

"நீ எதைக் குறிப்பிடுகிருய் என்பது எனக்குத் தெரியும்... மாணிக்கம்! செங்கமலத்தை நான் மறந்து விடவில்லை. ஆனுல் அவள் இவ்வளவு காலம் கல் யாணமாகாமல் இருக்கிருள் என்பது நிச்சயமா? அவள் கல்யாணமாகி குழந்தை குட்டிகளுடன் ஆனந்தமாக இல்லற வாழ்க்கை நடத்திக் கொண்டி ருக்கலாம்; காதல் கத்தரிக்காய் என்று சொல்லிக்

கொண்டு ஓயாமல் மனம் உருகிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பவர்கள் ஆண்பிள்ளைகள் தான். ஆனல் பெண்களோ, காரியத்தில் கண்ணுக இருப்பார்கள். எதெது எவ்வப்போது சாத்தியமோ அதன்படி புத்தி சாலித்தனமாக நடப்பவர்கள் பெண்கள். செங்கமலம் நல்லவள்தான். ஆனல் சின்னம்மாவின் விருப்பத் துக்கு விரோதமாக சந்தர்ப்பங்களுக்கு எதிராக அவள்தான் என்ன செய்ய முடியும்? அவளை நினைத்து உருகிக் கொண்டு இப்பொழுது எனக்குக் கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட லாமா?...''

"அண்ணு! செங்கமலத்தை அப்பொழுது மன மாரக் காதலிப்பதாகச் சொல்ல வில்லையா?"

"ஆமாம் சொன்னேன்"

"ஒருவர் ஆயுளில் ஒருவரைத்தானே மனமாரக் காதலிக்க முடியும்?"

"ஆமாம்"

"ஒன்று நீ செங்கமலத்தைக் காதலித்தது பொய்யாக இருக்க வேண்டும்; அல்லது வடிவாம் பாளைக் காதலிப்பது பொய்யாக இருக்க வேண்டும். இதில் எது பொய்?"

அப்படிப் பார்க்கப் போனல், உலகத்தில் எல் லாம் பொய்தான். எல்லாம் மாயைதான். நிஜம், பொய்யைக் கண்டு பிடிக்க நாம் என்ன வேதாந்தி களா?"

"சம்பங்கி! நீ செய்கிறது சரி என்று தோன்ற வில்லை. அப்புறம் உன் இஷ்டம்" சம்பங்கி மாணிக் கத்தை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

# 11. வேறு யாரும் இல்லை

இந்த சம்பாஷணை நடந்த சில வாரங்களுக்கெல்லாம் சம்பங்கிக்கும் வடிவாம்பாளுக்கும் திருமணம் நடந்தேறியது. காளியம்மாளின் கடைக்கும் சம்பங்கியின் கடைக்கும் மத்தியில் இருந்த சுவர் இடிக்கப் பட்டது. சம்பங்கி அண் பிரதர் என்ற விலாசத்திற்குப் பதில் சம்பங்கி அண் கோ என்ற போர்டு தொங்கியது. இந்தக் கம்பெனியில் சம்பங்கி, மாணிக்கம், காளியம்மாள் மூவரும் கூட்டாளிகளாக இருந்தனர். சம்பங்கியும் காளியம்மாளும் அதிகமாக கடைக்கு வருவதில்லை. மாணிக்கமே கடை விவகாரங்களைக் கவனித்துக்கொண்டான்.

சம்பங்கி மாமியார் வீட்டோடு இருந்தான். எப்பொழுதாவது ஒருநாள் சாயங்காலம் தான் கடைக்கு வருவான். வந்து சில நிமிஷங்கள் தங்கி விட்டு, வீட்டுக்குப் போய் விடுவான். இருவரும் அதிக நேரம் பேசுவதோ, தனித்து இருப்பதோ சாத்தியமாக இல்லை.

கல்யாண விஷயமாக நண்பர்களிடையே ஏற்பட்ட பிளவு கல்யாணமானபிறகு வளர்ந்து வருவதாகத் தோன்றியது. சம்பங்கி செங்கமலத்திற்கு மாபெரும் துரோகம் செய்து விட்டதாகவே மாணிக்கம் நினைத்தான். சம்பங்கிக்கு எந்த லட்சியமும் கிடையாது, சமய சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் தன் கொள்கையை மாற்றிக்கொள்ளக் கூடியவன் என்ற அபிப்பிராயம் மாணிக்கத்தின் மனதில் வேரூன்றிவிட்டது. கலியாணமானதும் நண்பனின் முகத்தில் அலாதி சந்தோஷமும் பெருமையும் தோன்றியதை அவன் கவனிக்காமலில்லை. அந்த சந்

தோஷத்தை, செங்கமலத்தின் வாழ்க்கையின்மீது கட்டப்பட்ட சமாதியாகவே நினைத்தான்.

நாளாவட்டத்தில் சம்பங்கியின் முகத்தில் ஆச்சரிய மானதோர் மாறுதலைக் கவனித்தான் மாணிக்கம். வரவர சம்பங்கி சந்தோஷமாகவே இல்லை. அவன் முகத்தில் வேதனையின் நிழல் தெரிந்தது. ‘அதன் காரணம் என்னவாயிருக்கும்?’ என்பதை ஊகிக்க அவனுக்கு வெகு நேரம் ஆகவில்லை. சம்பங்கியின் மணவாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்பட்டு விட்டதில் ஆச்சரியமில்லை. உண்மையான காதலர்களின் வாழ்க்கையில் ஊடல்கள் கூட ஒரு ஆனந்தம்தான். அன்பில்லாத உள்ளங்கள் சந்தர்ப்பங்களால் சதிபதிகளாகும்பொழுது மனக்கசப்பும் பூசலும் ஏற்படுவது சகஜம்தானே? திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் சம்பங்கி தன் கஷ்டத்தை மாணிக்கத்திடம் சொல்லத் தயங்குவதுபோல் தோன்றியது.

சம்பங்கி மாணிக்கத்தை எதிர்பாராதவிதம் சந்தித்ததிலிருந்து மாணிக்கம்தான் அவன் அந்தரங்கத் தோழன். சுகதுக்கங்களையும் விருப்பு வெறுப்புக்களையும் தன் நண்பனிடம் மனம்விட்டுப் பேசி ஆறுதலும் உற்சாகமும் பெற்று வந்தான் சம்பங்கி. இப்பொழுதோ தன் மனத்துயரங்களை யாரிடமும் சொல்ல முடியாத நிலையில் அவன் இருப்பதாகத் தோன்றியது.

அன்று காலை மாணிக்கம் கடைக்கு வந்ததும் வழக்கமாக கடைச் சாவியை எடுத்துவரும் வேலைக்காரனைக் காணவில்லை. தானே நேரில் சம்பங்கியின் வீட்டுக்குப் போய்ச் சாவியை வாங்கிக் கொண்டு வருவதற்கு மாணிக்கம் புறப்பட்டான். கல்யாணமான பத்து மாதத்துக்குப் பிறகு சிநேகிதன் வீட்டுக்குப் போவது இதுதான் முதல் தடவை.

தன் நண்பனின் வீட்டை அணுகியதுமே உள்ளேயிருந்து வந்த ஆத்திரப் பேச்சு அவன் காதில் விழவே திடுக்கிட்டு நின்ருன்.

"வரவர நீங்க செய்கிறது நன்ருக இல்லே சம்பங்கி!" இது காளியம்மாள் இடிமுழக்கம்.

"இந்த மாதிரி ஒரு புருஷன் ஐம்பது ரூபாயைக் கொண்டுபோய் ராத்திரி யெல்லாம் சீட்டாடி விட்டு வந்தால் எந்தப் பெண்தான் இந்த அட்டகாசத்தைச் சகித்துக் கொண்டிருப்பாள்?"

"நான் சீட்டாடாமல் யோக்கியஞக, நல்லபிள்ளையாக இருந்தபோது, நீங்கள் என்ன அருமையாய்ப் பேசி விட்டீர்கள். அப்பொழுதும் இதே அதட்டல் தானே"

"நீங்கள் ஏன் இப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்களோ தெரிய வில்லையே" இது வடிவாம்பாளின் அழுகைக் குரல்.

"உன் வெளி அழகைக்கண்டு நான் மயங்கினேன். உன் அவலட்சணக் குணத்தை மூடிவைத்துக் கொண்டிருக்கும் உன் அழகையோ, உன் கண்ணீரையோ இனி லட்சியம் செய்ய மாட்டேன். உன் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக் கொள்கிறேன் என்று கேட்கிருய்? ஏன் என்று போகப் போகத் தெரியும்?"

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? உங்கள் பெண்ஜாதியிடம் இப்படிப் பேசலாமா?..."

"நான் உன் புருஷன் என்பது உனக்கு ஞாபகம் வந்ததைப் பற்றி எனக்குச் சந்தோஷம்.... என்னை ஏதோ ஒரு வேலைக்காரன், உன் கடைகண்ணி வீடு வாசல்—இவற்றைப் பார்த்துக் கொள்ளும் வேட்டைநாய் என்று என்னை மதித்த நீ மனைவியென்றும் புருஷன் என்றும் இப்படிப் பேசியது ஆச்சரியம்தான்...."

"சம்பங்கி! நீ நல்ல பிள்ளையாக இருப்பாய் என்று நினைத்தே பெண்ணைக் கொடுத்தேன்" என்றாள் காளியம்மாள்.

"ஆமாம். என்னை வாயில்லாப் பூச்சியாக, சூடு சொரணை இல்லாத புழுவாக, உங்கள் கட்டளையைச் செய்து முடிக்கும் வேலைக்காரனாக, உங்கள் ஏச்சுக்களையும், பரிகாசப் பேச்சுக்களையும் கிண்டல்களையும் வசவு திட்டுகளையும் சகித்துக் கொண்டிருக்கும் முட்டாளாக என்னை இதுவரை நடத்தினீர்கள். உங்களிடம் மனிதனாக நான் நடந்து கொள்ள ஆசைப்பட்டேன். அந்தரங்க அன்புக்காகவும் உண்மையான காதலுக்காகவும் ஏங்கித் தவித்தேன். ஆனால் அன்பு என்பது உங்கள் அகராதியில் இல்லை. உங்களுக்குத் தெரிந்தது, நீங்கள் எதிர்ப்பார்ப்பது பணம் என்னை மிருகமாகச் செய்து விட்ட வேலை இரண்டும்தான் நீங்கள் அதன் பலனை அனுபவிக்கிறீர்கள்."

"அதற்காக 50 ரூபாயை வைத்துச் சூதாடி வருவதா? இந்த அக்கிரமம் அடுக்குமா?" என்றாள் வடிவு.

"இந்த 50 ரூபாய்தானா. இந்த வீட்டிலுள்ள அவ்வளவையும் நான் சூறையாடப் போகிறேன்" என்று பணப்பெட்டியை நெருங்கினான் சம்பங்கி.

"ஐயோ! ஐயோ!" என்று பெண் பிள்ளைகள் கூச்சலிட்டனர். மாணிக்கம் இனிமேல் சும்மாயிருக்க முடியாதல்லவா? சட்டென்று முன்னே வந்து நின்றான் அவன்.

"மாணிக்கம்! இங்கேவா. உன் அருமை சிநேகிதன் செய்யும் அக்கிரமத்தைப்பார்" என்று கூவிக்கொண்டே ஓடிவந்தாள் காளியம்மாள்.

"மாணிக்கம்! நல்ல சமயத்தில் நீ இங்கே வந்தாய்" என்றான் சம்பங்கி.

"பெண் பிள்ளைகளுடன் இப்படிச்சண்டை போடலாமா ?..." என்று ஆரம்பித்தான் மாணிக்கம்.

"மாணிக்கம்! இவர்களை உனக்குத் தெரியாது இவர்கள் ராட்சதத் தன்மையை மறைத்துக் கொண்டிருப்பது பெண் உருவம்தான். எல்லாம் சொல்கிறேன் இங்கேவா" என்று கூறி தன்நண்பனின் கையை 'கர கர'வென்று பிடித்திழுத்துக் கொண்டு சாலைவழியே நடந்தான் சம்பங்கி.

அதுவரை நடந்த சமாசாரங்களைச் சுருக்கமாகச் சொன்னான் சம்பங்கி.

"மாணிக்கம்! இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதில் உனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை உன்னிடம் ஏற்கெனவே சொல்வதற்கு எனக்கு வாய் இல்லாமலிருந்தது. அந்தரங்க அன்புக்காக எவ்வளவு ஏங்குகிறேன் என்பது உனக்குத் தெரியும். வடிவாம்பாளிடம் நான் அதைக் காணவில்லை. அன்புதான் இல்லை, சாதாரணமாக புருஷனிடம் ஒருமனைவி காட்டும் மரியாதை கூட இல்லை. என் துர்ப்பாக்கியத்தை வெளியில் சொல்ல வெட்கமாக இருக்கிறது....வடிவாம்பாளைக் கல்யாணம் செய்த அன்றே என் கனவுகள் பாழாகிவிட்டன. இந்தக் கல்யாணம் துயரத்தை அள்ளிக் கொடுத்து விட்டது. எங்களுக்குள் மனஸ்தாபமும் சண்டை சச்சரவும் இல்லாத நாளே கிடையாது...... மாணிக்கம்" என்று மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே போனான் சம்பங்கி.

"அண்ணா! குடும்ப வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம் என்று கேள்விப்பட்டது இல்லையா? அதில் எல்லோருமே இன்பத்தைக் கண்டுவிட முடியாது. கொடுத்துவைத்த பாக்கியசாலிதான் இன்

பத்தைக் காண முடியும். எல்லோரும் இன்பத்தைக் காணுவிட்டாலும் புத்திசாலியாக இருப்பவர்கள் துன்பத்தை எதிர் கொண்டழைக்காமல் இருக்கலாம்....”

“மாணிக்கம்! மறுபடியும் நீ என்னையே குற்றம் சொல்கிருயே.”

“ஆமாம். நெருப்பை அணைப்பதற்கு அதன் மேல் எண்ணெயை ஊற்றுகிருய்?...... உன் வாழ்க்கை நரகமாக ஆகிவிட்டது. வாஸ்தவம். ஆனல் உன் துக்கத்தை மறைக்க சூதாடுவதுதானு வழி?” சம்பங்கி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனமாக நடந்தான்.

“தம்பி மாணிக்கம்! நான் யோக்கியன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. நான் சூதாட்டக்காரன் மட்டுமல்ல; நான் ஒரு பொய்யன். இன்னும் என்னென்னவோ அக்கிரமங்கள் செய்கிறவன். அந்த இன்ப லாகிரி என் உள்ளுணர்வை அழித்துக் கொண்டிருக்கிறது. இனி நான் மீள முடியுமா என்பது சந்தேகமே. அப்படியாவது நாளடைவில் என் வாழ்வு முடிவடையாதா என்று ஏங்குகிறேன்...”

“அண்ணு! உன்னைப்போல் இல்வாழ்க்கையில் கசப்படைந்தவர்களும், அன்பைப் பெற முடியாத அபாக்கியர்களும் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லாருமே மனதை அடக்க முடியாமல் இவ்விதம் தற்கொலை செய்து கொண்டால் உலகம் என்ன ஆவது?”

“ஆமாம். நீ கூறியது சரியான வார்த்தை. நான் தற்கொலைதான் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். வடிவாம்பாளின் கள்ளச் சிரிப்பைக் கண்டு மயங்கி என் கண்மணி செங்கமலத்தை நான் மறந்தேனல்லவா? அந்த ஒரு குற்றத்துக்காகவே நான் தற்கொலை செய்து கொள்வது பொருத்தமே.

ஆனால் நான் ஒரு கோழை. அதற்கு வேண்டிய தைரியமும் மனோ திடமும் எனக்கில்லை. ஆகவே நாளடைவில் என்னை நானே கொன்று கொள்கிறேன்."

"அண்ணா! உங்களை இதுவரை பல கஷ்டங்களிலிருந்து மீட்டிருக்கிறேன். இதிலிருந்தும் உன்னை மீட்க எனக்கு சந்தர்ப்பம் கொடுக்க மாட்டாயா? நீ இனிமேல் காளியம்மாளை கொஞ்ச காலம் மறந்துவிடு. என் அறையிலே கொஞ்சநாள் தங்கியிரு. உன் மனசே சரியாக இல்லை. நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும்."

இந்த சமயத்தில் எதிரே ஒரு காட்சியைப் பார்த்துவிட்டு இருவரும் திடுக்கிட்டு நின்றனர். தெரு முனையில் இருந்த குழாயில் ஜலம் எடுத்துக் கொண்டு இடுப்பில் குடத்துடன் வந்த பெண்தான் அவர்கள் திடுக்கிடுவதற்குக் காரணம். அவள் வேறு யாரும் இல்லை. செங்கமலம் தான்!

## 12. சம்பங்கி சம்பங்கியல்ல

"செங்கமலமா இது?" என்று ஆச்சரியத்தால் கூவினான் சம்பங்கி.

"இவள் எங்கே வந்தாள்?" என்றான் மாணிக்கம் ஆச்சரியத்துடன். செங்கமலம் அவர்கள் அருகில் வந்து விட்டாள். அவளது கண்கள் சம்பங்கியின் கண்களைச் சந்தித்தன. "யார்? நீங்களா?" என்று ஆச்சரியத்தால் கூவினாள். அவள் முகம் குங்குமம் போல் சிவந்து விட்டது. கையிலிருந்த குடம் கீழே நழுவாமலிருக்க பெரு முயற்சி செய்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சியும் ஆவலும் நகைப்

பும் பரபரப்பும் தோன்றின. சம்பங்கியும் ஸதம்பித்தவன் போல் நின்று விட்டான்.

“ஆமாம். இங்கேதான் இருக்கிறீர்களா?....”

“ஆமாம்!”

“நாங்களும் இந்த ஊருக்கு மாற்றப்பட்டு வந்து ஒரு வாரமாகிறது. என் தகப்பனுருக்குப் பெரிய உத்தியோகம் ஆகி இங்கே மாற்றியிருக்கிறார்கள் அதோ இரட்டைத் தென்னை மரத்துக்கு எதிர் வீட்டில்தான் நாங்கள் இருக்கிறோம்! கட்டாயம் சாயங்காலம் வீட்டுக்கு வருகிறீர்களா?”

“ஓ! வருகிறோம்” என்று யந்திரத்தைப் போல் பதிலளித்தான் சம்பங்கி.

மெள்ள அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் செங்கமலம். போகும் பொழுது சம்பங்கியைக் கடைக்கண்ணுல் பார்த்த பார்வை பல மாதங்களுக்கு முன் கடையில் சாமான் வாங்க வந்தபோது அவளைப் பார்த்த பார்வையை ஞாபகப் படுத்தியது. ஸ்தம்பித்து நின்றான் சம்பங்கி.

“அண்ணு, வா போகலாம்!” என்று கூப்பிட்டான் மாணிக்கம். சுயநினைவுக்கு வந்த சம்பங்கி தன் நண்பனைப் பின் தொடர்ந்து சென்றான்.

“அண்ணு, இனிமேல்தான் உன் ஆத்மாவுக்குச் சோதனை ஏற்படப் போகிறது!....” என்று ஏதோ சொல்ல வந்த மாணிக்கத்தை இடைமறித்து “தம்பி மாணிக்கம் எவ்வளவு எதிர்பாராத சந்திப்பு! ஒரு வருஷம் கழித்து ஏற்பட்ட இந்த சந்திப்பை வேறு சந்தர்ப்பமாயிருந்தால் எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடியிருப்போம். என் வாழ்க்கையிலேயே அழியாதசம்பவமாக இருக்கவேண்டிய சந்திப்பு எப்படியாகி விட்டது? மாணிக்கம்! இந்த ஒரு வாரத்தில் செங்கமலத்தின் வாழ்க்கையில் என்னென்ன ஏற்

பட்டனவோ? அவளுக்குக் கல்யாணமாகி விட்டதோ என்னவோ? இன்று சாயங்காலம் வரச்சொன்னாள். அவள் சின்னம்மா என்னைப் பார்த்தால் எனக்கு என்ன நேருமோ? அவளுக்குத்தான் என்ன தண்டனை கிடைக்குமோ?" என்று மூச்சுவிடாமல் சொல்லிக் கொண்டு போனான்.

"ஆமாம் அவளைச் சாயங்காலம் போய்ப் பார்க்கப் போகிறாயா?" என்று கேட்டான் மாணிக்கம். "போவதா வேண்டாமா?" என்று ஒருகணம் தயங்கினான் சம்பங்கி. "அவளுக்கு ஒருவேளை கல்யாணமாகியிருக்கலாம். கல்யாணமாகியிருந்தால் அவள் புருஷனைப் பார்க்க ஆசைப் படுகிறேன். குழந்தைகள் இருந்தால் குழந்தையையும் பார்க்க ஆசைப்படுகிறேன். எதற்கும் அவள் சுகமாயிருப்பதைத் தெரிந்து கொண்டு வந்தால்தான் என் மனம் நிம்மதியடையும்" என்றான் சம்பங்கி.

சம்பங்கி கட்டாயம் அன்று செங்கமலத்தைப் பார்க்கப் போகிறான் என்பது அவன் முகத் தீர்மானத்திலிருந்து தெளிவாயிற்று. தன் அபிப்பிராயத்தைக் கேட்கும் நிலைமையிலும் அவன் இல்லை என்பதைத் .தெரிந்து கொண்டான்.

"உனக்குக் கல்யாணமான விவரத்தை செங்மலத்தினிடம் சொல்லப் போகிறாயா?" என்று திடீர்க் கேள்வியைத் தூக்கிப் போட்டான் மாணிக்கம். சம்பங்கியின் முகத்தில் வேதனை படர்ந்தது. பெரிய வெடிகுண்டு பக்கத்தில் வெடிக்கும் போது உண்டாகும் பீதியும் திகிலும் அவனைச் சூழ்ந்தன.

"தம்பி மாணிக்கம்! பெருமையுடன் சொல்லிக் கொள்ளும்படியானதா என் கல்யாணம்?" என்றான் சம்பங்கி.

"செங்கமலத்தால் மேலும் உன் வாழ்க்கையில்

சிக்கல்கள் ஏற்படாமலிருக்க வேண்டுமே" என்று மாணிக்கம் உண்மையில் கவலை கொண்டான்.

"மாணிக்கம்! உன் கலக்கத்தின் காரணம் எனக்கு நன்ருகத் தெரியும். நான் அயோக்கியன் நான் ரொம்பக் கெட்டுப் போய் விட்டேன். ஆனல் செங்கமலத்தை நான் இன்னும் நேசிக்கிறேன். அவளது கௌரவத்துக்கும் அவள் நன்மைக்கும் பங்கம் வரும் எதையும் நான் செய்யமாட்டேன்" என்ருன் சம்பங்கி.

★ ★ ★

அன்றுமாலை மணிஐந்திருக்கும் சொல்லொணுத பரபரப்பும் தயக்கமும் அச்சமும் ஆவலும் பொங்கும் உள்ளத்துடன் சம்பங்கி செங்கமலத்தின் வீட்டிற்குள் சென்ருன். புலிபோல் தன்மீது பாயப் போகும் செங்கமலத்தின் சின்னம்மாளைத் தேடி அவன் கண்கள் பயத்துடன் அலைந்தன. அழகுக் கடவுளைத் தரிசிக்கச் செல்லும் பக்தனின் உள்ளக் கிளர்ச்சியுடன் செங்கமலத்தைத் தேடி சுற்றுமுற்றும் பார்த்தான். "வாருங்கள்! வாருங்கள்!" என்று வரவேற்றுக் கொண்டே செங்கமலம் அவன் எதிரில் வந்தாள். கண்ணைப்பறிக்கும் ரோஜா நிறப்புடவை அவள் மேனியின் பளபளப்பை அதிகப் படுத்தியது புடவையின் கருப்புக்கரைக்கும் அவள்கூந்தலின் கருமைக்கும் எவ்வளவு ஒற்றுமை! முறுவலித்த போது அவளது வெண்பற்களுக்கும் அவள் கழுத்திலிருந்த முத்துமாலைக்கும் என்ன பொருத்தம்! இளமையின் ஆரோக்கியம் ததும்ப அழகே உருவாய் பேசும் பொற்சித்திரமாய், தன் எதிரே நின்ற செங்கமலத்தைப் பார்த்ததும் கருத்தழிந்து நின்ருன் சம்பங்கி.

"நிற்கிறீர்களே, உட்காருங்கள்?" என்று ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினுள் செங்கமலம்.

"சின்னம்மா..." என்று பயத்துடன் கேட்டவாறு நாற்காலியில் அமர்ந்தான்.

"சின்னம்மா இறந்துபோய் ஏழுமாதத்துக்கு மேல் ஆகிவிட்டதே?"

பெரும்பாரம் மனதிலிருந்து இறங்கியது போலிருந்தது சம்பங்கிக்கு.

"அது பெரியகதை. ஒருபெரிய பணக்காரருக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதாக சின்னம்மா சொல்லிக்கொண்டிருந்தாளல்லவா? அந்தப் பணக்காரர் என்னை வந்து பார்த்தார். அவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கும். அவரை நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாதென்று கண்ணீர் விட்டேன்; கதறினேன். ஒன்றும் பலிக்கவில்லை. அந்த சீமான் மிக செல்வாக்குள்ளவர் அரசாங்கத்திற்கு ரொம்ப வேண்டியவர். அவர் தயவால்தான் அப்பாவுக்குப் பெரிய உத்யோகமும் கிடைத்தது. கல்யாணத் தேதியும் குறிக்கப் பட்டது. என்வேதனையைச் சொல்லவா வேண்டும்? கல்யாணப் பத்திரிக்கையும் அச்சிடப்பட்டது. கல்யாணத்துக்கு நான்கு நாளிருக்க எதிர்பாராதது நடந்துவிட்டது. திடீரென்று காய்ச்சலில் விழுந்த சின்னம்மா காலமானாள்; கல்யாணமும் நின்றது. நான் விட்ட கண்ணீரைப் பார்த்து அப்பா மனம் இளகிவிட்டது. உன் இஷ்டப்படியே ஆகட்டும் இந்த கல்யாணத்தை நிறுத்தி விடுகிறேன்" என்று கூறிவிட்டார் அப்பா. நான் வந்தனம் செலுத்தாத தெய்வங்கள் இல்லை. என்சந்தோஷத்தைச் சொல்ல வேண்டுமா? நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் யாரைப்பார்க்க வேண்டுமென்று நினைத்தேனோ......." இதற்குமேல் செங்கமலத்தால் பேச முடியவில்லை........

அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் கூரிய அம்பைப் போல் சம்பங்கியின் உள்ளத்தில் பாய்ந் தது. அவளது கள்ளங்கபடற்ற சிரிப்பும் கடைசியில் அவள் முகம் சிவக்க நாணிக் கோணிக் கொண்டு பூர்த்திபெருத வாக்கியத்தைக் கூறியதும் அவன் உள்ளத்தில் விவரிக்க இயலாத வேதனையைத் தூண் டியது. உனக்காகத் தவம்செய்து உனக்காகக் காத் திருக்கும் பெண்ணுக்கு மோசம் செய்து வடிவாம் பாளைக் கல்யாணம் செய்து கொண்டாயே என்று அவன்மனம் குற்றம் சாட்டியது.

"நீங்கள் உங்களைப் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையே" என்று கூறிவிட்டு உள்ளேயிருந்து பல காரதட்டுக்களை கொண்டு வந்து அவன் எதிரில் வைத் தாள். பலமாதங்களுக்கு முன் அதேமாதிரி வடிவாம் பாள் தட்டுத் தட்டாகப் பலகாரங்களை அவன் எதிரில் வைத்ததை அவன் எப்படி மறக்கமுடியும்?

"என்னைப் பற்றியா கேட்கிருய்? நான் சென் னைக்கு வந்து ஒருகடை ஆரம்பித்தேன். அது ஏதோ சுமாராய் நடந்து கொண்டிருக்கிறது. என் வாழ்க்கை யில் விசேஷமாக அப்படியொன்றும் நடந்து விட வில்லை" என்ருன். தன்கல்யாணத்தைப்பற்றி அவன் வேண்டுமென்றே பிரஸ்தாபிக்கவில்லை.

"அப்பா இந்த வருஷம் என் கல்யாணத்தை நடத்தி விடவேண்டுமென்றிருக்கிருர். இனிமேல் அதற்கு சம்மதிக்க வேண்டியதுதானே?" என்று கூறி கடைக்கண்ணுல் அவனைப் பார்த்தாள். அவள் பார்வை அவனது இதயத்தைப் பிழிவது போலிருந் தது. அவன் மனதில் பெரும் புயல் வீசியது.

"செங்கமலம்! எனக்கு நடுப்பகலிலிருந்து தாங்க முடியாத தலைவலி. உன்னிடம் சொல்லி விட் டோமே என்றுதான் வந்தேன். நான் போய் இன்

ளொரு தடவை உன்னை வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டுச் சட்டென்று எழுந்தான் சம்பங்கி.

"வேண்டாம் டாக்டரை இங்கேயே வரவழைக்கிறோம்அப்பாவும் வரும் நேரமாகி விட்டது. இங்கேயே இருங்கள் "என்றாள்.

நாழியாகிறது. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. நான் வருகிறேன் செங்கமலம்" என்று பரபரப்புடன் எழுந்து வீட்டைவிட்டு வெளியேறினான்.

அவள் என்னவெல்லாம் சம்பங்கியுடன் பேச நினைத்தாள்?

'திக்' கென்றது செங்கமலத்திற்கு. ஓட்டமும் நடையுமாகச் செல்லும் சம்பங்கியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். ஏன் இவ்வளவு பரபரப்பும் அவசரமும்? சம்பங்கியின் பழைய அன்பு முகம் எங்கே? வேதனை தாண்டவமாடும் இந்த சோர்ந்த முகம் எங்கே? சம்பங்கி பழைய சம்பங்கி அல்ல. அடியோடு மாறிவிட்டான் இந்தமாறுதலின்காரணம் என்ன? அப்படியானல் செங்கமலம் கட்டியதெல்லாம் ஆகாயக் கோட்டைதானு? அவள் கண்களில் முத்துப்போல் நீர் அரும்பியது. தூரத்தில் தகப்பனர் ரிக்ஷாவில் வருவதைப்பார்த்து அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

## 13. மீட்க முடியாது

அன்று கடையிலிருந்து வந்த மாணிக்கத்தின் உள்ளத்தில் கோபமும் வெறுப்பும் போட்டியிட்டன. ஒரு வாரமாக சம்பங்கி,மாணிக்கத்தின் அறையில் தான் தங்கியிருந்தான். முதல்நாள், காளியம்மாள்

எண்ணெய்க் கடைக்கு வந்து, சம்பங்கியின் விஷயத் தில் மத்யஸ்தம் செய்து வைக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டாள்.

"இது விஷயத்தில் என்னை ஒன்றுமே கேட்காதீர்கள். உங்கள்பாடு உங்கள் மாப்பிள்ளைபாடு" என்று சொல்லி விட்டான். காளியம்மாளிடமும் வடிவாம்பாளிடமும் அவனுக்கு அநுதாபம் இல்லாமலில்லை. தம்பதிகளை ஒன்று சேர்த்து வைக்க அவனுக்கு இஷ்டம் இல்லாமலுமில்லை. காளியம்மாள் குடும்பம் பணத்திமிரும் வீண் கர்வமும் உள்ளவர்களானாலும் தன் நண்பன் சம்பங்கியின் நன்மையை உத்தேசித்து எதுவும் செய்யத் தயாராக இருந்தான்.

ஆனால், சில காலமாக சம்பங்கியின் நடத்தையில் ஏற்பட்டிருந்த மாறுதல் அவனுக்குப் பெரிதும் ஏமாற்றத்தையும் கோபத்தையும் வெறுப்பையும் உண்டாக்கி யிருந்தது. அதுவும் செங்கமலத்தைச் சந்தித்ததிலிருந்து அவன் நடத்தை வரவர மோசமாகி வந்தது. சேரத்தகாத கயவர்களுடன் சேருவதும், செல்லத்தகாத இடங்களுக்குச் செல்வதும் அதிகமாகிவிட்டது. சம்பங்கி!....உயர் குணமும் பெருந் தன்மையும், இரக்கமும், லட்சியமும் நிறைந்த இளைஞனுக்கு என்ன நேர்ந்து விட்டது? சந்தர்ப்பங்கள் அவனை இதுவரை பலதடவை அயோக்யனாக்கியிருப்பது என்னவோ வாஸ்தவம். செங்கமலத்துக்காக உதவி செய்யப் போய் சோலையம்மாளின் வீட்டில் திருடனாக்கியது! பின்னர் எவனோ ஒரு திருடன் அவன் பணத்தை திருடப்போய் அவனே திருடனாக நேர்ந்தது! பின்னர் சமூகமே சதி செய்யப் போய் அவன் கலப்படம் செய்யும் சமூகத் துரோகி ஆனான். இப்பொழுதோ அன்பில்லாத வாழ்க்கை, ஏமாற்றமடைந்த அவன் உள்ளம், அவனை அயோக்கியனாகச் செய்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு தடவையும்

அவன் மிருகத் தன்மையிலிருந்து மீண்டும், மனிதனாகியிருக்கிறான். அது மாதிரியே இந்தத் தடவையும் பாவத்திலிருந்து மீண்டும், மனிதத் தன்மையை அடையக் கூடாதா? சந்தர்ப்பங்கள் எதிராக சதி செய்யும் போது மனிதத் தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதல்லவா மனிதனின் கடமை? இதே எண்ணத்துடன் மாணிக்கம் சம்பங்கிக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொன்னான். அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சம்பங்கி அவனுடன் பேசுவதைக் கூட நிறுத்தி விட்டான். அவனில்லாத போது அவன் அறையில் சூதாட்டம் நடக்க ஆரம்பித்தது. இதைப் பற்றி அவன் கண்டித்ததும் சம்பங்கி அவன் அறையை விட்டு வெளியேறினான். அதற்குப் பிறகுஅவன் மாணிக்கத்தின் அறைக்குக் கூட வருவதில்லை.

மாணிக்கம் கதவைப் பூட்டிக் கொண்டு உலாவப் போனான். சம்பங்கியின் நினைப்பால் அலைப்பூண்ட் அவன் வெகு தூரம் நடந்து வந்து விட்டான். வழியில் ஒரு 'பார்க்' அவன் கண்களுக்குத் தென்பட்டது. அங்கே சிறிது நேரம் உட்கார்ந்திருக்க எண்ணி உள்ளே சென்றான். அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. மெய்மறந்து எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தானோ தெரியாது. பக்கத்தில் செடி மறைவில் ஆண் பெண் இருவர் பேசும் குரல் அவன் காதில் விழுந்தது. ஒருகணம் திகைத்துப் போனான். அது சம்பங்கியும் செங்கமலமும் பேசும் குரல்தான். அந்த இருட்டில் அவன் இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. சம்பங்கியின் குரலைக் கேட்டமாத்திரத்தில் மாணிக்கத்தின் உள்ளத்தில் கோபம் பொங்கி எழுந்தது. அந்தப் பெண் அவனிடம் உயிரையே வைத்திருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. செங்கமலத்தின் கௌரவத்துக்கும் அவள் வாழ்வுக்கும் பாதகம் ஏற்

படும் வகையில் நடந்து கொள்ள மாட்டேன் என்று சம்பங்கி அன்று சொல்லவில்லையா? சொன்ன வார்த்தையை அவன் காப்பாற்றுவான் என்பதில் மாணிக்கத்துக்கு நம்பிக்கை யில்லை. மிருகப் பிராயத்தை நோக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக நழுவிக் கொண்டிருக்கும் சம்பங்கி யோக்கியப் பொறுப்புடன் நடந்துகொள்வான் என்பது என்ன நிச்சயம்? இதைப் போன்ற நினைவுகள் படர்ந்தோட, மாணிக்கம் சம்பங்கியின் பேச்சை உற்றுக்கேட்டான். கள்ளங்கபடற்ற செங்கமலத்துக்கு சம்பங்கியால் எவ்விதமான தீங்கும் நேராது காப்பது தன் கடமை என்று மாணிக்கம் எண்ணினான். சம்பங்கியின் நடத்தையை செங்கமலத்திடம் கூறி, 'அவனை நம்பாதே!' என்று ஏன் அவளிடம் சொல்லக் கூடாது என்று கூட நினைத்தான்.

"செங்கமலம்! நீ என்னிடம் கொண்டிருக்கும் அன்பு எனக்கு நன்ருகத் தெரியும்..." என்று சொல்லிக் கொண்டிருந்தான் சம்பங்கி.

"தெரிந்தும் நீங்கள் அலட்சியமாயிருப்பது எனக்குப் புரியவில்லை. என்னை நீங்கள் உண்மையில் நேசிக்கவில்லையா" செங்கமலத்தின் குரலில் வேதனையும் ஏமாற்றமும் இருந்தது.

"உன்னை உண்மையாக நேசிக்கிறேன். உன் பரிசுத்தமான காதலை என்றென்றும் நான் மனதில் பூஜிப்பேன். உன்னை நான் உண்மையாக நேசிப்பதால் தான், நான் உன்னைத் தொடத் தயங்குகிறேன்?"

"என்ன? என்னைத் தீண்டவும் முடியாத பாவியாகி விட்டேனு நான்?" என்ருள் செங்கமலம் திடுக்கிட்டு.

"செங்கமலம் உன்னைத் தொட முடியாத அபாக்கியசாலி ஆனவன் நான் தான்!"

"என்ன நீங்களா!" என்று அழுகைக்கு மத்தியில் கேட்டாள் செங்கமலம்.

"ஆமாம். நான் ஒரு சமயம் உயர்குணத்தின், உச்சாணிக் கிளையில் தான் இருந்தேன். இப்பொழுதோ அயோக்கியத்தனத்தின் அதல பாதாளத்தை தொட்டுவிட்டேன். ஏன் அப்படி ஆனேன் என்று மட்டும் கேட்காதே. இப்பொழுது என் ஆரோக்கியம், மனம், லட்சியம், நடத்தை எல்லாம் கெட்டுவிட்டது. இந்தப் பாவி உன்னைத் தொடவோ, உன்னுடன் பேசவோ, உன்னைப் பார்க்கவோ தகுதி அற்றவன்."

ஆஹா! சம்பங்கி எவ்வளவு அழகாக உண்மையை எடுத்து சொன்னான். செங்கமலத்தின் விஷயத்தில் இழிவாக நடந்து கொள்வான் என்று நான் நினைத்தேன்! என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான் மாணிக்கம்.

இந்த சமயத்தில் செங்கமலம் கூறிய பதில் மாணிக்கத்தைத் திடுக்கிட வைத்தது.

"நீங்கள் அயோக்யனாகியிருந்தாலும் சரி யோக்கியனாக இருந்தாலும் சரி. நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. முதன் முதலில் சோலையம்மாளின் கடையில் உங்களைப் பார்த்தபோதே நான் தங்கள் அடிமையானேன். இந்த அடிமையை ஏற்றுக் கொள்ளும்படி உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்...." என்று கூறி அவன் காலில் விழுந்தாள் செங்கமலம்.

"செங்கமலம்! இந்தப் பாவியை மன்னித்துவிடு. இந்தப் பாவியை மறந்துவிடு" கல்லும் கனிந்துருகும் வண்ணம் கெஞ்சினான் சம்பங்கி.

"நானா? உங்களை மறப்பதா? என்னைக் கைவிடாதீர்கள். என்னைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்மேல் இரக்கமில்லையா?"

"செங்கமலம்! என்மீது வெறுப்புக் கொண்டு விட மாட்டேன் என்ருல் என்மீது இரக்கம் கொண்டாவது என்னைத் தனியே விட்டுவிடு. உன் காதலுக்குத் தகுதியற்றவன் நான். ஓர் அதமனை, உண்மையில்லா ஒரு பாவியை உன்கழுத்தில் கட்டிக் கொண்டு வாழ்நாள் முழுவதும் நரகவேதனை அனுப விக்க யாராவது ஆசைப்படுவார்களா ?"

"என் காதலில் சத்தியம் இருந்தால், உறுதியி ருந்தால் அதமனையும் உத்தமனுக்க முடியாதா? பாவி யைக்கூட புண்ணியசாலியாக்க முடியாதா ?"

"என்னை நீ மீட்கமுடியாது."

"உங்களை மீட்க என்னுல் முடியாவிட்டால் நானும் உங்களுடன் நரகவேதனை அனுபவிக்கி றேன்"

"தயவு செய்து என்னை மறந்துவிடு" என் ருன் சம்பங்கி.

மௌனம் நிலவியது. ஆனுல் இரு உள்ளங்கள் மனம் குமுறியழும் நெஞ்சைப் பிளக்கும் சத்தம் கேட்டது.

"ஐயா கதவைப் பூட்டப்போகிறேன். சீக்கிரமா வெளியே போங்க" என்று கத்தினுன் தோட்டக் காரன்.

சம்பங்கியும் செங்கமலமும் வெளியே புறப்பட் டனர். அவர்கள் கண்ணில் படாமல் சிறிது நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்துவிட்டு வெளியேறினுன் மாணிக்கம்.

# 14. இது சத்தியம்!

சிலநாட்கள் கழித்து ஒருநாள், பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஈஸி சேரில் சாய்ந்த வண்ணம் அன்று பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் மாணிக்கம். அப்பொழுது அவன் மனம் பல தினங்களுக்கு முன் பார்க்கில் நடந்த சம்பவத்தை எண்ணமிட்டது. சம்பங்கி வாழ்க்கையில் சறுக்கி விழுந்தவன்; கொஞ்சம் கொஞ்சமாக மனிதத்தன்மையை இழந்து கொண்டிருப்பவன். ஆயினும், செங்கமலத்துக்கு அவன் துரோகம் செய்ய நினைக்கவில்லை. அவன் ஆத்மாவின் ஒளி இன்னும் அணையவில்லை. அது அவனுள்ளே சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கிறது. இது எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும் விஷயம்! அந்த ஜோதி சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கும்வரை, அவன் மீள வழியிருக்கிறது என்று எண்ணலாமல்லவா?

மாணிக்கம் அதுவரை சம்பங்கியின்மீது கொண்டிருந்த வெறுப்பும் அருவருப்பும் மறைந்தது. பழைய வாஞ்சையும் அன்பும் பெருக்கெடுத்தது. "சம்பங்கியை மீட்க நாம் ஏன் இன்னொரு முயற்சி செய்யக் கூடாது?" என்று எண்ணமிட்டான். அவன் எங்கே இருக்கிறானே தெரியவில்லை. என்ன செய்கிறான்? எப்படிச் சாப்பிடுகிறான்? எப்படியும் சம்பங்கியைத் தேடிக் கண்டு பிடித்துத்தான் ஆக வேண்டும். காளியம்மாள் கூட அவனைப்பற்றி முதல் தினம் விசாரித்தாள். அவளுக்கும் சம்பங்கி இருக்குமிடம் தெரியவில்லை. அவன்தான் முயற்சி எடுத்துக்கொண்டு தன் நண்பன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அந்த சமயத்தில் வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டது. தடதடவென்று உள்ளே யாரோ வரும் சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான் மாணிக்கம். உள்ளே வந்தது வேறு யாரும் இல்லை. யாரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைத்தானே அதே சம்பங்கிதான்!

"அண்ணா வா, வா! உன்னைத்தான் பார்க்க வேண்டுமென்று நினைத்தேன்."

ஆனால், சம்பங்கி அசாதாரணமான நிலையில் இருந்தான். உடம்பு இளைத்துத் துரும்பாகியிருந்தது. தலைமயிர் கலைந்து பார்க்கப் பயங்கரமாக இருந்தது. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவன் கையில் ஒரு தோல் பெட்டி இருந்தது.

"தம்பி மாணிக்கம்! நீ எனக்கு உதவி ஒன்று செய்ய வேண்டும்"

"உனக்காக எதுவும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

"மாணிக்கம்! இந்தத் தோல் பெட்டி நிறைய நகைகள் இருக்கின்றன. அதை ஒருவருக்கும் தெரியாமல் காப்பாற்றி வைத்து நான் மீண்டும் கேட்கும்போது கொடுப்பாயா?"

சம்பங்கியின் திகிலையும் பரபரப்பையும் பார்த்ததுமே மாணிக்கத்துக்குச் சந்தேகம் தட்டிவிட்டது.

"சீக்கிரம், மாணிக்கம்! எந்த நேரத்திலும் போலீஸ்காரர்கள் இங்கே வரலாம்!"

வாசற்கதவைத் தாளிட்டு வந்து மாணிக்கம், "நிஜத்தைச் சொல். இந்த நகைகளை எங்கே திருடினாய்?" என்று கேட்டான்.

"தம்பி மாணிக்கம்! இதுவரை நான் உன்னிடம் பொய் சொன்னேனா? நடந்தது இதுதான். இந்த ஊரைவிட்டு நான் ஒழிவது ஒன்றுதான் நான்

செங்கமலத்துக்குச் செய்யும் பெரிய உதவி என்று தீர்மானித்தேன். நான் இந்த ஊரில் உள்ளவரை அவளை நான் பார்க்காமலிருக்க முடியாது. ஊரை விட்டு ஓடிப்போவதற்குக் கையில் பணம் தேவை யாக இருந்தது. எந்த சந்தர்ப்பத்திலும் உன் உதவியை நாடக்கூடாது என்று சபதம் செய் திருந்தேன். சற்றுமுன் சைனு பஜார் வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஒரு காசுக்கடையில் கல்லாப் பெட்டியருகில் பதினைந்து வயதுள்ள ஒரு சிறுவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். வேறு ஆண்பிள்ளைகள் பக்கத்தில் இல்லை. காசுக் கடை யில் வைத்திருந்த ஒரு தங்கச் சங்கிலியை விலைக்கு வாங்குகிறவனைப்போல எடுத்துப் பார்த்தேன். பையன் பராக்குப் பார்த்துக்கொண்டிருந்த சமயத் தில் நகையுடன் இருந்த இந்தத் தோல் பெட்டி யுடன் நழுவிவிட்டேன். ஒரு டாக்ஸியில் ஏறிக் கொண்டு உன்னைச் சரணமாக அடைந்தேன். மாணிக்கம், நீ என்னைக் காப்பாற்று...” என்று கூறி நிறுத்தினன் சம்பங்கி.

“அண்ணு! உனக்கு வாழ்க்கை வெறுத்துவிட் டதாகச் சொன்னுய். போலீசாரிடம் அகப்பட்டு சிறைக்குப்போக நீ விரும்பவில்லையா? அப்படி யிருக்கும்போது இப்பொழுது பயந்து நடுங்கிக் கொண்டு ஓடி ஒளிந்து உன்னை ஏன் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிருய்?” என்று கேட்டான் மாணிக்கம்.

சம்பங்கி ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். “மாணிக்கம்! முன்பெல்லாம் போலீஸார் வரவேண் டும், என்னைக் கைது செய்து போக வேண்டும் என்று ஆசைப்பட்டது உண்மை. ஆனல் சில நாட்களாக என் மனதில் ஒரு மாறுதல் உண்டாகி விட்டது. அது ஏன் என்றுதான் தெரியவில்லை

இப்பொழுது என்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறேன். முன்பு மரணத்தை நான் வரவேற்றேன். ஆனால் இப்பொழுது நான் உயிர் வாழ விரும்புகிறேன்'' என்றான் சம்பங்கி.

"அண்ணா! நாம் வாழப் பிறந்தோமே தவிர சாகப் பிறக்கவில்லை. உலகத்தை சொர்க்கமாக்கப் பிறந்தோமே தவிர நரகமாக்கப் பிறக்கவில்லை. உலகத்தை ஆக்குவதும் அழிப்பதும் நாமே. இப்பொழுதாவது உன்மனதில் நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். அண்ணா! இப்பொழுதாவது நான் சொல்வதைக் கேள் உன் மோசத் தொழிலை இந்த நிமிஷமே விட்டுவிடு. இந்த நகைகளை எடுத்த இடத்தில் திருப்பி வைத்துவிடு. மறுபடியும் கடைக்கு வந்து சேரு. வடிவாம்பாளுக்கு சில தினங்களாகவே நிமோனியா சுரம். இதுவரை நடந்த சம்பவங்களுக்காக அவள் வருந்துகிறாள். உன் மன்னிப்பைக் கோருகிறாள். நீ அவளை மன்னித்துவிட்டு அவளை ஏற்றுக்கொள். செங்கமலத்திடம் நீ கல்யாணமானவன் என்ற உண்மையைக் கூறிவிடு. தீயவழிக்குப் போவதில்லை என்று தீர்மானம் செய்துகொள். அப்படிச் செய்தால் இந் நிமிஷமே உன் கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிடும். நீ வாழ விரும்புவதாகச் சொன்னாயல்லவா? அதற்கு இதுதான் வழி."

"ஆமாம் மாணிக்கம்! நீ சொல்வது சரி. நான் அப்படியே செய்கிறேன்."

"நீ சொல்வது நிஜந்தானா."

"சந்தேகமா?"

"அப்படியானால் நான் கெட்டவழிக்குச் செல்ல மாட்டேன். வடிவை ஏற்றுக்கொள்வேன். செங்கமலத்தைப் பார்க்கமாட்டேன் என்று சபதம் செய்துகொடு."

"அப்படியே. நான் இனிமேல் கெட்டவழிக்குச் செல்லமாட்டேன். வடிவாம்பாளை ஏற்றுக்கொள்வேன். செங்கமலத்தைப் பார்க்க மாட்டேன். இது சத்தியம்!" என்று மாணிக்கத்தின் கையில் அடித்துச் சத்தியம் செய்து கொடுத்தான் சம்பங்கி.

## 15. ஜோதி அணைந்தது

சில நாட்கள் ஆயின. சம்பங்கி சத்தியம் கொடுத்தபடி அவன் கடைக்கு வரவில்லை. மாணிக்கத்தின் வீட்டுக்கு வரவில்லை. வடிவாம்பாளையும் வந்து பார்க்கவில்லை. அவன் ஏன் வரவில்லை? அவன் அன்று மனம் மாறி வாழவிரும்புவதாகச் சொல்லிச் சத்தியம் செய்து கொடுக்கவில்லையா? அந்தச் சத்தியம் பொய்யா? அவன் மனம்மாறி வாழ விரும்புவதாகச் சொன்னது உண்மையானால் அவன் வாழ விரும்பியது நன்மைக்காகவா அல்லது மேலும் தீமைகள் செய்யவா? மனமாறுதல் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னானே அது இன்னும் அவளை மோசமாக்குவதற்கா? அல்லது அவளைக் கரையேற்றுவதற்கா? ஒருவேளை போலீஸார் அவன் மீது கை வைத்துவிட்டார்களோ? அதனால்தான் அவன் தன்னை வந்து பார்க்க முடியவில்லையோ?

"கூடிய சீக்கிரம் உன் புருஷன் வந்து விடுவான்" என்று மாணிக்கம் படுக்கையில் கிடந்த வடிவாம்பாளைச் சந்தித்துத் தைரியம் சொல்லிவிட்டு வந்தான். ஐயோ. பாவம். அந்தப் பெண்ணின் நிலைமை எப்படியிருக்கிறதோ தெரியவில்லை. அடடா! சம்பங்கி எங்கே இருக்கிறான்? அவன்

விலாசத்தைக் கேட்டுக் குறித்து வைத்துக் கொள் ளாமல் போனேமே!

இந்த சமயத்தில் ஒரு ஆள் ஓடிவந்து, "எஜ மான்! சம்பங்கி ஐயாவின் சம்சாரத்துக்கு உடம்பு அதிகமாயிருக்கு. உங்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னர்" என்றான். கடையைப் பார்த்துக் கொள்ளும்படி குமாஸ்தாவிடம் விட்டுவிட்டு மாணிக் கம் வடிவாம்பாளைக் காண விரைந்து சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி கல்லும் கனிந்துருகச் செய்வதாக இருந்தது. "சம்பங்கி! சம்பங்கி!" என்று வடிவு மெய்ம்மறந்த நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தாள். "தம்பி மாணிக்கம்! அவனை இங் கே ஒருநிமிஷமாவது அழைத்துக்கொண்டுவாயேன். அவன் மனம் கஷ்டப்படும்படி நாங்கள் ஒருநாளும் நடந்துகொள்ளமாட்டோம். எப்படியாவது அவன் என் மகளுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கட்டும்" என்று கண்ணீர்விட்டுக் கெஞ்சினாள் காளியம்மாள்.

மாணிக்கம் ஒரு கணம் யோசித்தான். பளிச் சென்று ஒரு யோசனை தோன்றியது. ஒரு வேளை செங்கமலத்துக்கு அவன் விலாசம் தெரிந்திருக்கும். அவளைக் கேட்டால் சொல்லுவாள். "இதோ சம்பங்கியை அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வாசலைப் பார்க்க மாணிக்கம் ஓட்டம் எடுத்தான்.

சில நிமிஷங்களில் அவன் செங்கமலம்முன்பு சுட் டிக் காட்டிய இரட்டை தென்னைமர வீட்டைக்கண்டு பிடித்து விட்டான். கதவைத்தட்டக் கையை ஓங்கிய போது உள்ளே பேச்சுக் குரலைக் கேட்டுத் தயங்கி நின்றான். அவன் யாரைத்தேடிக் கொண்டு வந் தானே அதே சம்பங்கியின் குரலே தான். நடுவில் அவன் இருமல் சத்தமும் கேட்டது.

"செங்கமலம்! உன் திடசித்தம் என் கோழை மனதை வென்றுவிட்டது. உன் அன்பு என் சபல புத்தியை வென்றுவிட்டது. உன் விருப்பப்படியே உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்....உன் பரிசுத்தமான கைகளைத் தொட எனக்கு உரிமை இல்லை என்றேன். ஆனால் நீயோ உரிமை இருக்கிறது என்கிறாய். இந்த நோயாளியை நீ நேசிக்கக் கூடாது என்றேன். நீயும் ஒரு காதல் நோயாளிதான் என்கிறாய்....உன்னைக் காப்பாற்ற வேண்டி என்னை மறந்துவிட மன்றாடினேன். உன்னைக் காப்பாற்றும் வழி திருமணம்தான் என்கிறாய். உன் பிடிவாதத்தை நானும் ஜயிக்கப் போராடினேன். ஆனால் சில நாட்களாக என் மனதில் ஒரு விசித்திர மாறுதல் உண்டாகி விட்டது....இனி நான் உன் அடிமை செங்கமலம்...." க்ஷய ரோகியைப் போல் இருமினான் சம்பங்கி.

ஆயிரம் இடி மாணிக்கத்தின் தலையில் ஏக காலத்தில் விழுவது போலிருந்தது. இது என்ன அக்கிரமம்! இது என்ன கொடுமை! இந்தத் திருடன், இந்த மிருகம், உடலும் மனமும் அழுகிப் போன இந்த நடைப் பிணம், காதல் தெய்வமான மாசு மறுவற்ற புனிதவதியைத் தொடுவதா? எந்தக் காதலியின் வாழ்வைக் காப்பாற்ற சில தினங்கள் முன்பு கூட தன் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருந்தானோ அந்த சம்பங்கி இன்று அதே காதலியின் வாழ்வைக் கெடுக்கத் துணிந்து விட்டான். செங்கமலத்துக்கேனும் உண்மையாக இருக்க வேண்டும் என்று அவன் உள்ளத்தே மங்கி எரிந்து கொண்டிருந்த ஜோதியும் இப்பொழுது அணைந்து விட்டதா? அவன் இதயத்தின் மூலையில் இருந்த மனிதத் தன்மையின் கடைசி சின்னமும் அழிந்து விட்டதா? அவன் சத்தியம் எல்லாம் மண்ணோடு மண்ணாயிற்று.

"உடனே அப்பாவிடம் சொல்லி கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்ருள் செங்கமலம் குதூகலம் பொங்க.

"அப்படியே" மறுபடியும் சம்பங்கியின் இருமல். கதவை உடைத்து உள்ளே நுழைந்து அந்த மனிதப் பதரைக் குத்திக் கொன்று விடலாமா என்று கூட நினைத்தான் மாணிக்கம். ஆயினும், காதல் தெய்வமான செங்கமலத்தின் முன் எதுவும் செய்ய அவன் விரும்பவில்லை.

சத்தப் படாமல் மாணிக்கம் வெளியே வந்து வேகமாக நடந்தான். பாவத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டி விட்ட சம்பங்கியை இனி அவனுல் காப்பாற்ற முடியாது. ஆனுல் கள்ளங் கபடற்ற காதல் தெய்வமான செங்கமலத்தை அவன் காப்பாற்ற முடியும். காப்பாற்றுவது அவன் கடமை. வேகமாக வந்த மாணிக்கம் எதிரிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருன். அவன் கண்களில் நீர் பெருகியது. இது காறும் தான் உயிரென மதித்த அன்பனை, யாரைக் காப்பாற்ற நாள் ஓயாமல் ஒழியாமல் போராடினனே அந்த நண்பனை போலீசாரிடம் காட்டிக் கொடுக்க வேண்டியிருப்பதை நினைக்க அவன் நெஞ்சம் பொறுமியது. கால்கள் தள்ளாடின.

உள்ளே தடுமாறிக் கொண்டு சென்ற மாணிக்கத்தின் பயங்கர முகத்தைப் பார்த்து, "என்ன, ஏதாவது கொலையா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இல்லை...." என்று ஏதோ கூற ஆரம்பித்தான்......."

.......சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் ஜீப் ஒன்றில் போலீசாருடன் மாணிக்கம் தன் வீட்டுக்கு சென்ருன். தோல்பெட்டியை போலீசாரிடம் ஒப்ப

டைத்தான். போலீசார் தோல்பெட்டியுடன் செங்கமலத்தின் வீடுநோக்கிச் சென்றனர். "செங்கமலத்தின் வீட்டிற்குள் போலீசார் போகக்கூடாது. சம்பங்கி வீட்டை விட்டு கொஞ்சதூரம் வந்ததும்தான் அவனை பிடிக்கவேண்டும்" என்று மாணிக்கம் ஏற்கெனவே போலீஸ் அதிகாரியிடம் சொல்லி வைத்திருந்தான். ஆகவே, போலீசார் இரட்டைத் தென்னைமரவீட்டுக்குச் சற்று தூரத்துக்கு அப்பால் சம்பங்கியின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

வெகு நேரம் கழித்து சம்பங்கி வெளியே வந்தான். தன்னைக் கைது செய்யவந்த போலீஸாரைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் விலங்கை ஏற்கக் கையை நீட்டினன். போலீசாருடன் மாணிக்கத்தைக் கண்டதும் விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

"மாணிக்கம்! நீதான் என் உயிர்த் தோழன். மறுபடியும் நீதான் தக்க சமயத்தில் எனக்கு உதவி செய்தாய். என் சித்தம் சபலித்து செங்கமலத்தின் வேண்டுகோளை நான் சற்றுமுன் ஒப்புக் கொண்டேன். அவள் வேண்டுகோள் நிறைவேருமல் ஏதேனும் எனக்கு ஏற்படக் கூடாதா என்று இப்பொழுது தான் கடவுளைப் பிரார்த்தித்தேன். நல்ல வேளையாக நான் சிறைக்குப் போகிறேன். எனக்கு இது சந்தோஷம். இனியாவது செங்கமலம் என்னை மறப்பாள்" என்றுகூறி போலீஸ் காரில் ஏறினன் சம்பங்கி.

ஆனல் செங்கமலத்தின் கண்ணில் படாமல் அவனைக் கைது செய்ய மாணிக்கம் நினைத்தது கைகூடவில்லை. வீட்டின் வாசலிலிருந்து தற்செயலாக தெருப்பக்கம் கண்களை ஓட்டிய செங்கமலம், போலீஸ் லாரிக்குள் ஏறிக் கொண்டிருந்த சம்பங்கியைப் பார்த்து விட்டாள். இந்தக் காட்சியைக் கண்ட

அவள் ஸ்தம்பித்து நின்று விட்டாள். கண்களில் தாரை தாரையாக நீர்பெருகக் கற்சிலை போல் நின்று கொண்டிருந்த மகளைப் பார்த்தார் அப் பொழுது உள்ளே வந்த அவள் தந்தை. "அம்மா! ஏன் இப்படி நிற்கிறாய்?" என்று பரபரப்புடன் கேட் டார். அப்பொழுதுதான் செங்கமலத்துக்கு மீண்டும் சுய உணர்வு வந்தது.

இதற்குப் பிறகு சம்பவங்கள் வெகு துரிதமாக நடந்தன. செங்கமலத்தின் தந்தை போலீஸ் ஸ்டே ஷனுக்கு விரைந்து சென்றார். சம்பங்கியை ஜாமீ னில் மீட்டுக் கொண்டு வீட்டுக்கு அழைத்து வந்தார்.

ஆனால் மாணிக்கம் இதை எதிர் பார்க்கவில்லை. செங்கமலத்தின் காதல்தான் எப்படிப் பட்டது? என்பதை நினைக்க ஆச்சரியமும், அவளை இனி எப் படிக் காப்பாற்றுவது? என்பதை நினைக்க வேதனை யும் ஏற்பட்டது. இனி அவளைக் காப்பாற்ற முடி யாது, என்ற தவிப்பு அவனைப் பற்றிக் கொண்டது.

சில தினங்களுக்கப்பால் சம்பங்கியின் கேஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது, நடந்த விஷ யம் மாணிக்கத்தைத் தூக்கி வாரிப்போட்டது. தோல் பெட்டியிலுள்ள நகைகள் தம்முடையதுதான் என்று ஒப்புக் கொண்டார் நகைக்கடைக்காரர், ஆனால், இவர்தான் எடுத்தவர் என்று கடையிலுள்ள பையன் நிச்சயமாக சம்பங்கியை அடையாளம் கண்டு சொல்ல முடியவில்லை. எல்லாவற்றிலும் முக் கியமான விஷயம் என்னவென்றால் சம்பங்கியின் வக்கீல் தமது வாதத்தின் போது மாணிக்கத்தைக் குற்றம் சாட்டியதுதான்!

"கோர்ட்டார் அவர்களே! என் கட்சிக்காரர்மீது பழி சுமத்தி அவரை ஜெயிலுக்குள் தள்ளும் கெட்ட எண்ணத்துடன் மாணிக்கம் இந்தக் கட்டுக்கதையை

ஜோடித்திருக்கிறார். சம்பங்கி தன்னிடம் வந்து தோல் பெட்டியை ஒப்புவித்ததாகவும், காசுக் கடையில் திருடிய விவரத்தை அவரிடம் கூறியதாகவும் மாணிக்கம் சொல்வது அவ்வளவும் அவதூறு.

என் கட்சிக்காரர் சம்பங்கி அண் கோவின் பிரதம கூட்டாளி. அந்தக் கம்பெனி மிகவும் லாபகரமாக நடந்து வருவது அனைவரும் அறிந்த விஷயமாகும். என் கட்சிக்காரருக்கு பணமுடை என்பது கிடையாது. அவர் தோற்றத்தையும் உடைகளையும் பாருங்கள்! திருடன் என்று யாராவது ஒருகணம் சந்தேகிக்க முடியுமா? நகைக்கடையில் புகுந்து அவர் திருடுவதற்கு எந்த நோக்கமும் இல்லை.

மாணிக்கம் இந்தமாதிரி சம்பங்கியின்மீது வீண் பழி சுமத்துவதற்குக் காரணம் இருக்கிறது. இந்த மாணிக்கம் சம்பங்கியின் சிநேகிதியான செங்கமலத்தின் பேரில் ஒருகண் வைத்திருக்கிறார். சம்பங்கியை சிறைக்குள் தள்ளிவிட்டால் சுலபமாக அவளை அடைய முடியும் என்று எண்ணுகிறார். அவர் என் கட்சிக்காரர்மீது இந்த அபாண்டமான குற்றத்தைச் சுமத்துவதன் நோக்கம் இதுதான்''

தன்மீது இந்தக் குற்றச் சாட்டைக் கேட்டதும், பூமிவெடித்து, தான் அதலபாதாளத்துக்கு செல்வது போன்ற பிரமை மாணிக்கத்திற்கு ஏற்பட்டது ஒருபெண்ணை உண்மையில் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்ததற்கு இதுதானு பலன்? இதே பெண்ணுக்கு சம்பங்கி முன்பு ஏதோ உதவி செய்ததற்கு அவன் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கவில்லையா? இந்தப் பெண்ணுக்கு யார் உதவி செய்ய முயற்சித்தாலும் ஆபத்துத்தான் போலும்! எது எப்படியிருந்தாலும், மாணிக்கம் எந்த சுயநல எண்ணத்துடனும் சம்பங்கியைக் காட்டிக் கொடுக்கவில்லை என்பது கடவுளுக்குத் தெரியும்.

"கோர்ட்டார் அவர்களே! வக்கீல் சொல்வது முழுப்பொய். எனக்கு அவர் சொல்வதுபோல் எவ்விதக் கெட்ட எண்ணமும் இல்லை" என்று கத்தினன் மாணிக்கம்.

"ஆர்டர்! ஆர்டர்!" என்று மேஜையைத் தட்டினர் மாஜிஸ்டிரேட்.

முடிவில் மாஜிஸ்டிரேட் பின்வருமாறு தீர்ப்பளித்தார்: "எதிரி மேற்படி திருட்டுக் குற்றத்தைச் செய்தான் என்று நிரூபிக்கப் படவில்லை. அந்தத் தோல்பெட்டி எப்படி மாணிக்கத்தின் கைக்கு வந்தது என்பதுதான் கவனிக்கத் தகுந்த விஷயம். அதைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு போலீசாருடையது. நல்ல அந்தஸ்திலுள்ள இந்த வாலிபன் எதையும் திருடவேண்டிய அவசியம் இல்லை. இது சிநேகிதர்களுக்குள் ஏற்பட்ட பொருமையால் விளைந்த வழக்கு என்று கருதி எதிரியை விடுதலை செய்கிறேன்"

சொப்பன உலகில் சஞ்சரிப்பவன் போல் கோர்ட்டில் என்ன நடக்கிறதென்பதை அறியாமல் நின்றுகொண்டிருந்த சம்பங்கியை செங்கமலமும் அவள் தகப்பனும் வெளியே அழைத்துக் கொண்டு வந்து வீட்டுக்கு அழைத்துப் போயினர்.

நீர் மல்கிய கண்களுடன் மாணிக்கம் கோர்ட் வராந்தாவில் நின்றுவிட்டான். சம்பங்கியைக் காப்பாற்ற முழு பலத்துடன் போராடித் தோற்றுவிட்டான். செங்கமலத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்த இந்த அபாயகரமான முயற்சியிலும் படுதோல்வி யடைந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக, செங்கமலத்தின் பேரில் ஒரு கண் வைத்திருந்ததாக ஒரு அவப்பெயர் வேறு வந்து சேர்ந்தது! உலகத்தில் அயோக்கியர்களுக்கும் அநியாயத்

துக்கும்தான் காலம் என்று சம்பங்கி அடிக்கடி சொல்வது எவ்வளவு சரியானது! இனிமேல் சம்பங்கியின் முகத்தில் விழிக்கமாட்டேன். அவன் இருக்கும் திசையைக் கூடப் பார்க்கமாட்டேன். செங்கமலம் எக்கேடு கெட்டுப் போகட்டும். இனி சம்பங்கியின் கடையில் எனக்கு என்ன வேலை? அந்த ஊரில்தான் என்ன காரியம்?

"எஜமான்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் மாணிக்கம்.

"உங்களைத்தான் அப்பொழுதே பிடிச்சுத் தேடிக் கொண்டிருக்கிறேன். காளியம்மாள் கூட்டிக்கொண்டு வரச்சொன்னாங்க. வடிவாம்பாள் காலமாயிட்டுதுங்க" என்றான் அந்த ஆசாமி.

இடிமேல் இடி விழுந்ததைப்போல் அயர்ந்து போனான் மாணிக்கம்.

## 16. காதல் தெய்வம்

தேர்தல் காலங்களில் அபேட்சர்கள் எவ்வளவோ சபதங்கள் செய்து கொள்வதை பார்க்கிறோம். ஆனால் எத்தனை சபதங்களை அவர்கள் நிறைவேற்ற முடிகிறது? "இனி சம்பங்கியின் முகத்தில் விழிக்கமாட்டேன்" என்று மாணிக்கம் கூறிய சபதமும் தேர்தல் காலத்து சபதமாகவே முடிந்தது. சம்பங்கி வடிவாம்பாளுக்குச் செய்ய வேண்டிய கடைசிக் கடன்களைச் செய்யாமலிருக்க முடியுமா? சம்பங்கியை அழைத்துவரத் தானே மீண்டும் செங்கமலத்தின் வீட்டுக்குச் செல்ல வேண்டி வந்தது. இந்த உண்மையை செங்கமலத்தின்

எதிரில் சொன்னல், உதை கிடைத்தாலும் கிடைக்கும். தனக்குப் பெண் ஜாதியே இல்லை என்று சம்பங்கி சொன்னாலும் சொல்லிவிடுவான்! ஆகவே மாணிக்கம் சம்பங்கியைத் தனியாகச் சந்தித்து வடிவாம்பாள் காலமான செய்தியைத் தெரிவித்தான். அதமனுன அவன் உள்ளம் கடமையை உணரத்தான் செய்தது. மாணிக்கத்துடன் வீட்டுக்கு வந்து ஆகவேண்டிய காரியங்களைச் செய்து முடித்தான்.

தன் வேலை முடிந்ததும் சம்பங்கி மாணிக்கத்தைப் பார்த்து, "மாணிக்கம்! என்னைச் சிறைக்கு அனுப்ப முயற்சித்ததற்காக உன்மீதும் எனக்குக் கோபம் இல்லை. ஆனல் என்மேல் உனக்குக் கோபம் இருக்கும். என்னைச் சீர்திருத்த இவ்வளவு போராடித் தோற்றால் யாருக்குக் கோபம் வராது? ஆனல் இந்த நிமிஷத்திலிருந்து நான் புது மனிதனுனேன். சிறையிலிருந்து நான் சற்று முன் மீண்டேனல்லவா? உண்மையில் பாவத்தின் சிறையிலிருந்து நான் மீண்டுவிட்டேன்! தவிர மாணிக்கம், இனி நான் புது மனிதன். என்னை மீட்டது காதல் தெய்வம் செங்கமலம் தான்! என்னை உண்மையாக நேசித்து, எனக்காக தன் வாழ்நாளையே தியாகம் செய்யத் தயாராக இருக்கும் செங்கமலம் கண்ணீர் சிந்தவிடமாட்டேன். பாவ எண்ணங்களை அடியோடு விட்டொழித்து, நானும் மனிதனுகி அவள் மனதை மலர வைப்பேன். சிதறிப்போன என் வாழ்வைச் சீர்படுத்தி அவள் கனவுகளையெல்லாம் நனவாக்குவேன். இதுவரை நடந்ததையெல்லாம் பயங்கரக் கனவாகக் கருதி மறந்துவிட்டு, புது வாழ்வுக்கு அடிகோலுவேன். நண்பா! நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இராதுதான். ஆனல் எனக்கு

இந்த கடைசி சந்தர்ப்பம் மட்டும் கொடு. இந்த வாக்குறுதியை நான் காப்பாற்ருவிட்டால் நீ என்னைக் கொன்று போடு" என்று கூறினன்.

இனி, மகிழ்ச்சி தரும் ஒரே ஒரு விஷயத்தைக் கூறிவிட்டுக் கதையை முடிக்கிருேம்.

"அடேய் மாணிக்கம்! என் தலைமயிரைப் பிடித்துப் பிய்த்து என் முதுகில் அறைவிட்டதற்கு நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்! என்னைத் தொட நீ யார்? இதற்குச் சரியான தண்டனை கொடுக்காவிட்டால் நான் சம்பங்கியல்ல!" என்று கூறி வெளியில் ஓட முயற்சித்த மாணிக்கததைத் தாவிப் பிடித்தான் சம்பங்கி. தன் பலமான கைகளால் மாணிக்கத்தின் கன்னங்களைக் கிள்ள ஆரம்பிக்கவே மாணிக்கம், "ஹோ" என்று அழ ஆரம்பித்தான்.

"ஆமாம். குழந்தையை இப்படித்தான அழ விடுகிறது?" என்று கேட்டுக்கொண்டே அப்பொழுது உள்ளே வந்த செங்கமலம், குழந்தையை வாரியணைத்தாள்.

"பயல் விஷமம் பொறுக்க முடியவில்லை" என்ருன் சம்பங்கி.

"நீங்களும் முன்ஞெரு சமயம் விஷமம் எல்லாம் செய்தபோது எனக்கும் அப்படித்தானே இருந்தது...."

"விஷமக்காரன் என்று தெரிந்தும் ஏன் என்னைக் கல்யாணம் செய்து கொண்டாய்?"

"ஏன் என்று தெரியவில்லையா?" என்று கூறிச் சிரித்தாள் செங்கமலம். சம்பங்கியும் புன்னகை பூத்தான்.

"நீங்கள் நல்லவர்களாகி விடுவீர்கள் என்று நிச்சயம் தெரியும்!"

"ஆமாம். உன் காதலின் சக்தி உனக்குத் தெரியாதா? செங்கமலம்! நான் இதுவரை காதல் மிகவும் குளிர்ச்சியானது என்று நினைத்திருந்தேன். ஆனால் அது வெப்பமானதும் கூட என்று இப்பொழுது தெரிகிறது. எத்தனையோ தீய நினைவுகளையும் பாவ எண்ணங்களையும் சுட்டுப் பொசுக்கி மனிதனைப் பரிசுத்தப் படுத்தும் அணையாத ஜோதி என்பது தெரிகிறதல்லவா?"

செங்கமலத்தின் உள்ளத்தில் ஆனந்தமும் பெருமையும் பொங்கியது. அகத்தின் அழகை அவள் முகம் எடுத்துக் காட்டியது. அழகே உருவாய், இன்பச் சித்திரமாய் எதிரில் நிற்கும் செங்கமலத்தைப் பார்த்து. "செங்கமலம்! இன்று எவ்வளவு அழகாக இருக்கிறாய்?" என்றான் சம்பங்கி.

"எப்படி இருக்கிறேன்?" என்றாள் செங்கமலம்.

"உன் அழகை கதாசிரியர்களைப்போல் நானும் வர்ணிக்க முயற்சிக்கலாம். ஆனால் முகத்தில் வீசும் உன் அக அழகை யார்தான் வர்ணிக்க முடியும்? நீயே கண்ணாடியில் உன் முகத்தைப் பார்" என்றான் சம்பங்கி.


செங்கமலம் கண்ணாடியில் செங்கமலத்தைப் பார்த்தாள்!

அதே சமயத்தில் மாணிக்கம் மாணிக்கத்தைப் பார்த்தான். அதாவது அந்த அறையை விட்டு வெளியே தவழ்ந்து வந்து கொண்டிருந்த மாணிக்கம் அப்பொழுது உள்ளே வந்து கொண்டிருந்த மாணிக்கத்தைப் பார்த்தான். மாணிக்கமும்

மாணிக்கத்தைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்தான்.

சதிபதிகளின் அந்தரங்க சம்பாஷணையைக் கேட்டு உள்ளே செல்ல மனமின்றித் தயங்கி நின்றான். அதே சமயத்தில் அவன் கனவுகள் உயிர் பெற்றதை நினைத்து அவன் உள்ளம் மகிழ்ந்தது. "காதல் தெய்வத்தின் அருளே அருள்!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

★



வாழ்க்கையை ஒட்டிய சம்பவங்களை விறுவிறுப்பான நடையில் சலிப்புத் தட்டா வண்ணம், கதையாகப் புனைவது ஒரு தனிக் கலை. அதிலே நல்ல தேர்ச்சி பெற்றவர் ஆசிரியர் வஸந்தன்.

வாசகர்களின் மனதில் அழியாச்சித்திர மாக நிலை பெற்றிருக்கும் எத்தனையோ சிருஷ் டிகள் அவரது பேனாவிலிருந்து உருப் பெற் றிருக்கின்றன.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரி யும் பலரிடையே விசேஷ ஸ்தானம் அவருக் குண்டு.

Wrapper printed at Shanti Press, Madras-1